படைப்பு

ஊற்று: 2 | நதி: 7 | நவம்பர் 2019 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## “கவிதைக்கு விமர்சனம் தேவையே கிடையாது”

■ கவிஞர் பிரான்சிஸ் கிருபாவுடனான நேர்காணல்



குயில்கள் கரையும் காலம்
– சத்யானந்தன்



உவப்பத் தலைகூடி..
– கவிஞர் வசந்தகுமரன்



ஒரு எழுத்தாளனுக்குத் திருவிழா எடுத்த நாள்
– வீரசோழன் க.சோ.திருமாவளவன்

படைப்பு
# தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 2 | நதி :7 | நவம்பர் 2019

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**இப்ராஹிம் ஷரீப்**

தலைமை நிருபர்:
**வலங்கைமான் நூர்தீன்**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**அழ.ரஜினிகாந்தன்**
**அன்பழகன்**

படைப்புகள் மற்றும் கருத்துக்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே, படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- **தலையங்கம்** - பக். 04
- **"கவிதைக்கு விமர்சனம் தேவையே கிடையாது"**
  - கவிஞர் பிரான்சிஸ் கிருபாவுடனான நேர்காணல் - பக். 05
- **சித்தி ஜுனைதா பேகம்**
  - முகம்மது பாட்சா - பக். 15
- **தேநீர் சாலை**
  - கரிகாலன் - பக். 18
- **உவப்பத் தலைகூடி..**
  - கவிஞர் வசந்தகுமரன் - பக். 27
- **உலக சினிமா ஒரு பார்வை**
  - கவிஜி - பக். 30
- **சிந்தையில் உரம் பெற்ற தமிழ்**
  - முனைவர் பூங்குழலி - பக். 34
- **நீதிநூல் வரிசையில் ஒரு புதினம்**
  - ர.கிருஷ்ணவேணி - பக். 36
- **கீழடி - தமிழின் தாய்மடி**
  - கடையநல்லூர் பென்ஸி - பக். 37
- **ஒரு எழுத்தாளனுக்குத் திருவிழா எடுத்த நாள்**
  - வீரசோழன் க.சோ.திருமாவளவன் - பக். 42
- **பீட்டர் ஹாண்ட்கே**
  - தா. ஜோ. ஜூலியஸ் - பக். 51
- **ஷார்ஜா புத்தகக் கண்காட்சி**
  - நசீமா ரசாக் - பக். 55
- **இரசித்தலும் இலயித்தலும்**
  - இரா மதிபாலா - பக். 58
- **எமக்குத் தொழில் எழுத்தும் பேச்சும்**
  - கருமலை கோ.மணிகண்டன் - பக். 61

- **திரைப்பாடல்களில் இலக்கியம்**
  – சுசித்ரா – பக். 63


## சிறுகதைகள்


- **குயில்கள் கரையும் காலம்**
  – சத்யானந்தன் – பக். 09
- **காட்டுப்பள்ளி**
  – பிரசாந்த் வே – பக். 23
- **நல்லையனும் வீரம்மாவும்**
  – பிரேம பிரபா – பக். 48


## கவிதைகள்


- **கவிக்கோ அப்துல்ரகுமான்** – பக். 14
- **படைப்புலகம்** – பக். 21
- **சூர்யநிலா** – பக். 33
- **மூலம் : வால்ட் விட்மன்**
  – மொழிபெயர்ப்பு : தங்கேஸ் – பக். 41
- **ஊர்மிளை**
  – அழ.ரஜினிகாந்தன் – பக். 45
- **நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 14**
  – ஜின்னா அஸ்மி – பக். 54
- **நிலாகண்ணன்** – பக். 57
- **கோபி சேகுவேரா** – பக். 62






# தலையங்கம்

வணக்கம்.

படைப்பு 'தகவு' பத்தொன்பதாம் மின்னிதழ் உங்கள் கண்முன் விரிந்துபரந்திருக்கிறது.

மிகவும் நெகிழ்வான ஒரு சூழலில் இவ்இதழ் மலர்ந்திருக்கிறது. பன்னாட்டுத் தர தொடர் எண்ணான ISSN எண் நம் இதழுக்குக் கிடைத்திருக்கிறது. நமக்கான பொறுப்புணர்வும் கடமைகளும் மிகுந்திருக்கும் சூழலில் தகவின் வாசகர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.

தமிழ் தொன்மைசார்ந்த தனது செம்மொழித் தகுதியை வளம்நிறைந்த செவ்வியல் நூல்களால் உலகுக்கு உணர்த்திவந்துகொண்டிருக்கிறது. அவற்றில் சிறப்பு பொருந்திய ஒரு நூல் திருக்குறள்.

திருக்குறள்.. பல நூற்றாண்டறிவை இந்த ஒற்றை நூல் சுமந்து திரிகிறது. 'ஆகுல நீர பிற' என்பது வள்ளுவர் கையாண்ட அற்புதமானதொரு தொடர். எது அறம்? உலகளாவிய சமயத் தேடல்களும் தத்துவ விசாரணைகளும் ஆழ்ந்து தேடி அவரவர்க்குரிய கொடியை உயர்த்திப் பிடித்துவருகின்றன. வள்ளுவர் அறம் இதுதானென்று தெளிவாக வரையறுத்திருக்கிறார்.. மனதில் மாசு இல்லாமல் இருப்பதுதான் அறம். எனில் உலகில் அறம் என்று கூவிக்கூவிக் கூறப்படுவதெல்லாம் என்ன? 'ஆகுல நீர' ஆடம்பரத் தன்மை கொண்டவை. உலகில் அத்தனை அறத் தேடல்களையும் தன் இரு வார்த்தைகளால் கடும்விமர்சனம் செய்திருக்கிறார் வள்ளுவர். அந்தத் தகுதி வள்ளுவத்திற்கு இருக்கிறது.

ஏதாவதொரு சூழலில் 'நான் நல்லதுதானே செய்தேன்.. பிறகு ஏன் இப்படி?' என்ற எண்ணம் தோன்றிய தருணம் நம் எல்லோரது வாழ்விலும் கடந்துபோயிருக்கும். நல்லது சிலசமயம் நல்லதையே விளைப்பதில்லையே.. நல்லது செய்வதில் தவறுண்டா? உண்டு என்கிறார் வள்ளுவர். பாம்பு குழியில் தத்தளிக்கிறது எனத் தூக்கிவிட முடியுமா? வள்ளுவர் உறுதிபடக் கூறுகிறார்.. ஒருவரின் பண்புகளை அறிந்து நன்மை செய்.. அவ்வாறு செய்யாவிட்டால் நாம் செய்த அந்த நன்மையும் தவறுதான் (469).

இந்த உலகம் வன்மை மென்மை என்னும் இரு பண்புகளுக்குள் அடங்கிப்போய்விடுகிறது. வலியது வாழும் என்பது உலகநியதியாய்க் கூறப்படுகிறது. எச்சிக்கலுக்கும் மூலம் தேடினால் வலியது மெலியதன்மேல் செலுத்திய ஆதிக்கமாகத்தான் இருக்கும். இந்த ஆதிக்க உணர்வாளர்களை உணர்வுபூர்வமாகத் தாக்குகிறார் வள்ளுவர். உன்னைவிட வலிமை குறைந்தோரைத் துன்புறுத்தப் போகும்போது ஒன்றை எண்ணிப்பார்.. உன்னைவிட வலிமை மிகுந்தோர் உன்னைத் துன்புறுத்த வந்தால் உன் நிலைமை எப்படி இருக்கும்? (250) எண்ணிப்பார்த்தவன் துன்புறுத்தச் செல்வானா? எத்தனை ஆழமான உளவியல் அணுகுமுறை இது.

வள்ளுவரை மிஞ்சிய காதல் கவிஞரைத் தமிழ்ப்பரப்பில் காண இயலாது. நோய் செய்த ஒன்றே அந்நோய் தீர்க்கும் மருந்தாகவும் இருக்குமா.. காதலில் இருக்கும் (1102). சுடக்கூடிய வல்லமை தீயைவிடக் காதலுக்குத்தான் உண்டு. தீ தொட்டால் சுடும்.. காதல் விட்டாலும் சுடுகிறதே (1159). ஒன்று காதலை விடு இல்லையென்றால் நாணத்தை விடு.. இரண்டையும் தாங்காதென் நெஞ்சு (1247).

இவை வள்ளுவம் என்னும் ஆகப் பெருங்கடலின் மிகச் சிறு துளித்துளிகள். இப்பிரபஞ்சத்தின் ஏதோவொரு மூலையில் எழும் எந்தவொரு வினாவுக்குமான விடையும் திருக்குறளில் ஒளிந்திருக்கும். பெருமையுடன் சுமப்போம் திருக்குறளை.

இந்த இதழில் கவிஞர் பிரான்சிஸ் கிருபாவுடனான நேர்காணல் இடம்பெற்றுள்ளது. மேலும் நூல் வாசிப்பு, விழாக்கள் குறித்த கட்டுரைகள், தொடர்கள், அனுபவங்கள், சிறுகதைகள், கவிதைகள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

– **ஆசிரியர்** ■

• வினாக்கள் : கார்த்திக் திலகன்
• வினவியவர் :
வீரசோழன் க.சோ.திருமாவளவன்




# "கவிதைக்கு விமர்சனம் தேவையே கிடையாது"

## - கவிஞர் பிரான்சிஸ் கிருபாவுடனான நேர்காணல்

**தமிழ் நவீனக் கவிதைப் பரப்பில் தனி அடையாளத்துடன் விளங்குபவர் கவிஞர் பிரான்சிஸ் கிருபா. நமது வினாக்களுக்கான அவரது கருத்துப் பகிர்தல்கள்..**

**நவீனக் கவிதையுலகம் ஒவ்வாமை கொண்டுள்ள கற்பனாவாதக் கூறுகளான நேரடி உணர்வு வெளிப்பாட்டுத் தன்மை, வெடிப்புறப் பேசுதல், எதுகை மோனை, சந்த ஒழுங்கு உள்ளிட்ட செவ்வியல் வடிவங்களின் பயன்பாடு ஆகியவற்றைக் கையாண்டு வெற்றியைப் பெற்றுள்ளது உங்களது சமீபக் கவிதைத் தொகுப்பான சக்தியின் கூத்தில் ஒளி ஒரு தாளம். ஒரு கவிதையின் வெற்றியை எந்தவிதமான கோட்பாடுகளோ தொழில்நுட்பக் கூறுகளோ நிர்ணயிப்பதில்லை என்பதற்கும் கவிதையின் உள்ளழகே அதன் வெற்றியைச் சாத்தியப் படுத்துகிறது என்பதற்கும் உங்கள் படைப்புகளை உதாரணமாகச் சொல்லலாமா?**

பாட்டும் நானே பாவமும் நானே என்பதற்கொப்ப உங்கள் கேள்வியிலேயே நீங்கள் பதிலையும் வைத்திருக்கிறீர்கள். மேம்போக்காக இல்லாமல் படைப்பையும் உள்ளார்ந்து வாசித்திருக்கிறீர்கள்.. வாழ்த்துக்கள். ஒரு கவிதையின் வெற்றியை எந்தவிதமான கோட்பாடுகளோ தொழில்நுட்பக் கூறுகளோ தந்திர மந்திர யுக்திகளோ தீர்மானிப்பதில்லை என்பதை நானும் உளப்பூர்வமாக நம்புகிறேன். பாடப்பொருளின் உள்ளடக்கமே அதை அறுதியிட்டு உறுதிசெய்துகொள்கிறது என்றே நான் பார்க்கிறேன்.

**உங்கள் கவிதைகளில் நீங்கள் காட்டுகிற மிகையுணர்வு, உண்மையில் மிகையுணர்வு போலவே இல்லை. அக்கவிதைக்குத் தேவை அளவுக்கான உணர்வு அதுதான் என்று வாசக மனம் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு உங்கள் சொல்திறத்தால் அதனை நியாயப்படுத்திவிடுகிறீர்கள். மிகையுணர்வை**

**எழுத வேண்டிய தேவை எழும்போது கூட தன் எழுத்தின் மீது புற அழுத்தங்களை ஏற்றிக் கவிதையின் குரலைச் சன்னமாக்கி விடுகிற தற்காலப் போக்கு குறித்து என்ன கருதுகிறீர்கள்?**

மிகை உணர்வு என்பது கவிதைகளில் மட்டுமே வெளிப்படுவது அல்ல. சில சமயம் நம் பேச்சிலும் அதைக் காணக்கூடும். பௌர்ணமி நாளில் கடற்கரை சென்றால் கடல் அலைகளிலும் அதைக் காணக்கூடும். திரைக்கு ஒரு மொழி இருப்பது போல மொழிக்கும் ஒரு திரை இருக்கிறது. அதில் நம் மன ஓட்டத்தைக் கச்சிதமாகக் கனகச்சிதமாகத் திரையிட்டுவிட்டால் அது சாத்தியமே. ஆனால் அது கொஞ்சம் சவாலான விஷயம். எழுத்தின்மீது புற அழுத்தங்களை ஏற்றிக் கவிதைகளின் குரல்வளை களை நெறிப்பது படைப்பவரின் விருப்பம். அதைப் படிப்பதும் படிக்காமல் போவதும் அவரவர் அவா.

**டிஸ்கவரி புக் பேலஸ் வெளியீடாக வந்த உங்களது பிரான்ஸிஸ் கிருபா கவிதைகள் என்கிற முழுத்தொகுப்பையும் வாசிக்கிற போது, அதில் சற்றேறக்குறைய 270 கவிதைகள் காதல் கவிதைகளாகவோ காதல் சார்ந்த பாடுபொருள்களைக் கொண்ட தாகவோ இருக்கின்றன. காமக்கடும்புனல் மீகாமம் உள்ளிட்ட காமம் சார்ந்த படைப்பு களைக் கொண்டாடுகிற நவீன மனம், காதல் கவிதைகளை மாற்றாந்தாய் மனப்பான்மை யோடு அணுகுவதன் காரணம் என்னவாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்? நீங்கள் அத்தகைய மனப்போக்கை எப்படி உடைத்து மேலெழுந்து வந்தீர்கள்?**

உடைத்தேன் தகர்த்தேன் என்றெல்லாம் பழி சூட்டக்கூடாது. அது எனக்குள் நிகழ்ந்தது. காதல் என்னும் மெல்லிய தராசுத் தட்டில்தான் காலம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மறந்துவிடக் கூடாது. மாற்றவும் முடியாது.

**பிரான்ஸிஸ் கிருபா என்ற கவிஞனைப் பிரான்சிஸ் கிருபா என்ற தனிமனிதன் எந்த அளவுக்கு நேசிக்கிறான் அல்லது வெறுக்கிறான்?**

பிரான்ஸிஸ் கிருபா என்ற மனிதன் எட்டு வயதிலேயே குடும்பத்தை விட்டுப் பிரிந்து விட்டான்.

பிரான்ஸிஸ் கிருபா என்ற கவிஞன் முதல் தொகுப்பிலேயே கவிஞர் மீரா விருது வாங்கி விட்டான்.

பிரான்ஸிஸ் கிருபா என்ற மனிதன் பதினெட்டு வயதிலேயே லேத் பட்டறை ஆரம்பித்துவிட்டான்.

பிரான்ஸிஸ் கிருபா என்ற கவிஞன் இருபத்தியொரு வயதிலேயே தேவமகள் அறக்கட்டளை விருது வாங்கிவிட்டான்.

பிரான்ஸிஸ் கிருபா என்ற மனிதன் இருபத்தி நாலு வயதுக்குள்ளேயே மூன்று காதலிகளை இழந்துவிட்டான்.

பிரான்ஸிஸ் கிருபா என்ற கவிஞன் அதற்குள் சுந்தர ராமசாமி விருது வாங்கிவிட்டான்.

பிரான்ஸிஸ் கிருபா என்ற மனிதன் தொழிலில் நட்டப்பட்டு நடுத்தெருவுக்கு வந்துவிட்டான்.

வந்தாலும்

பிரான்ஸிஸ் கிருபா என்பவன் விமானத்தில் பறந்துசென்று சிறந்த பாடலாசிரியர் விருது பெற்றுக்கொண்டான்.

இப்படியாக நிலைகுலையும் இவனை நேசிக்கவும் முடியாது.. வெறுக்கவும் கூடாது என்பதே என் நிலைப்பாடு.

**கவிதைகளைப் பற்றிச் சொல்லும்போது 'சொற்களில் இருந்து அர்த்தங்கள் மௌனத்திற்குத் திரும்பும் வழி' என்று தேவதேவன் குறிப்பிடுகிறார். ஆனால் உங்கள் கவிதைகள் மௌனத்தில் முளை விட்டுச் சொற்களில் கிளைபரப்பி அர்த்தங் களாய்ப் பூத்துக்குலுங்குவதாகவே நான் கருதுகிறேன். இரண்டுக்குமான வேறுபாடு நீர் வீழ்ச்சிக்கும் நீர் ஊற்றுக்கும் இடையிலான வேறுபாடு. உங்கள் கவிதையின் ஊற்றுக்கண்கள் என்று எவற்றைக் குறிப்பிடலாம்?**

"வெளியில் அடிப்பது வெயில்

வீட்டுக்குள் நுழைந்துகிடப்பது வெளிச்சம்"

என்று ஒரு கவிதையில் எழுதியிருப்பேன். கவிதை குறித்துக் கவிஞன் ஆய்வைத் தொடங்கிவிட்டால் அவன் கல்லறை அங்கேயே ஸ்தாபிதமாகிவிடும். கவிதை எனப்படுவது ஒருவிதமான மன எழுச்சி.

அந்த அற்புத எழுச்சி எல்லோருக்கும் எல்லாத் தருணத்திலும் ஏற்பட்டுவிடுவதில்லை. ஓடும் ஒரு நதியில் ஒரு மனிதன் இரண்டுமுறை குளிக்கமுடியாது என்பார்கள். ஒரு கணம் எழும் கவிதை எழுச்சி மறுகணம் எழுவதில்லை. என் கவிதைகளில் நீங்கள் காண்பது இருபது சதவிகிதம்கூட இராது. மீதமுள்ளவைகள் காலவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு விட்டன.

"கட்டி முடிக்கப்பட்ட கவிதைகளும்

வெட்டி ஒட்டப்பட்ட கனவுகளும்"

என்ற என் முதல் கவிதைத் தொகுதி கையெழுத்துப் பிரதியாகவே காணாமல் போய்விட்டது. போனாலும், இப்போதும் சொற்களிலிருந்து அர்த்தங்கள் மௌனத்திற்குத் திரும்பிக்கொண்டுதான் இருக்கின்றன. நீர்வீழ்ச்சிக்கும் நீர் ஊற்றுக்கும் நடுவே சுனை ஒன்று உள்ளது. அதை ஒரு சுற்று சுற்றிப் பாருங்கள். என் கவிதைகளின் ஊற்றுக்கண்கள் தானாகக் கண் சிமிட்டும்.

**உங்கள் கையிலிருப்பது பேனாவா அல்லது திரைப்பட ஒளிப்பதிவுக் கருவியா என்று சந்தேகிக்கும் அளவுக்கு உங்கள் கவிதையின் ஒவ்வொரு பத்தியும் ஒரு frame ஆக நகர்கிறது. இது திரை நுட்பத்தின் மேலுள்ள உங்கள் காதல் என்று எடுத்துக் கொள்ளலாமா? அல்லது திரைக்கலையும் மொழிச்சுவையும் இணையும் புள்ளியில் நிகழும் அதிசயம் என்று எடுத்துக் கொள்ளலாமா?**

ஒளியின் வழியாக எப்படி ஒரு காட்சியாகக் காண்கிறோமோ - அது போல் மொழியின் வழியாக ஒரு காட்சியைக் கண்டால் அதுவே கவிதை.

திரையில் ஒரு நட்சத்திரத்தை உத்திரவாதப் படுத்திவிட முடியும். சத்யா திரைப்படத்தில் வரும் அமலா காண்போர்களுக்கெல்லாம் ஒரே அமலாதான். ஆனால் கன்னி நாவலில் வரும் அமலா வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அமலாவாகக் காட்சி அளிப்பார். இங்குதான் ஒளிநடையும் மொழிநடையும் வேறுபடுகின்றன. அல்லாமலும் திரைக்கலையும் மொழிச்சுவையும் என் ரத்தத்தில் இரண்டறக் கலந்தே இருக்கிறது. இது அதிசயமா ரகசியமா என்றெல்லாம் எனக்குத் தெரியாது.

**உங்கள் கன்னி நாவல் உள்ளே நுழைவது ஒரு எளிய வாசகனுக்குச் சிரமமானது என்றால் நாவலில் செறிவார்ந்த கற்பனை திரட்சிகளில் இருந்து மீண்டு வெளிவருவதும் அதைவிடச் சிரமமானது. புனைவுலகின் புருவத்தை உயரச்செய்த அந்த நாவலுக்குப் பிறகு அடுத்த நாவலுக்கான முன்னெடுப்பு அல்லது திட்டம் ஏதும் பரிசீலனையில் இருக்கிறதா?**

ஒரு புது வாசகனைக் கன்னி நாவலை வாசிக்கச் சொல்கிறீர்களா? அல்லது தம்பி அந்தப் பக்கம் போகிடாத.. அங்கே இரண்டு பேய் இருக்குன்னு எச்சரிக்கை செய்றீங்களான்னு என்னால புரிஞ்சிக்கமுடியல. கன்னி நாவலை வாசிச்சிட்டுப் பெங்களூர்ல இருந்து கண்ணன்னு ஒரு வாசகர் என்னைச் சந்திக்கச் சென்னை வந்தார். மெரினா கடற்கரையில் சந்தித்தோம். கூடவே ஒரு சகோதரியும் வந்திருந்தாங்க. வந்தபிறகுதான் தெரியவந்தது.. கண்ணனுக்கு ரெண்டு கண்ணும் தெரியாதுன்னு. பின்ன எப்படியா நாவலைப் படிச்சேன்னு கேட்க, பக்கத்தில் இருந்த சகோதரி வாசித்துக்காட்டியதாகச் சொன்னார். பின்ன என்ன எதுக்கு இந்த வீண் அலைச்சல் என்று கேட்டேன். கன்னி என்ற கலை விளக்கைப் பற்றவைத்த கலைஞனைத் தொட்டுப்பார்க்க வந்தேன் என்றார். நாடிநரம்புகள் அதிர மெய் சிலிர்த்துப்போனேன். அந்தக் கண்ணனுக்காக எனது அடுத்த நாவல் "ஏறக்குறைய இறைவன்" எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**கன்னி நாவலின் பல இடங்களில் தேவதேவன் கவிதைகளைப் பயன்படுத்தி இருக்கிறீர்கள். தேவதேவனின் கவிதைகள் இந்து ஞான மரபின் இறையியல் தளத்தின் மீது இயங்கக்கூடியவை. உங்களது கவிதைகள் கிருத்துவ மெய்யியல் தத்து வங்களைக் கேள்விக்குட்படுத்தி மேலெழுந்து செல்பவை. தேவதேவனுடைய கவிதைகளை நாவலில் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்ததின் பின்னணியைப் பற்றிக் கூறுங்கள்.**

அடிப்படையில் தேவதேவன் கவிதைகளும் தேவதேவனும் எனக்கு ரொம்பப் பிடிக்கும். ரொம்பரொம்ப நெருக்கம். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" ஆவணப்படம் எடுத்ததும் அந்த ஈர்ப்பில்தான். நாவல் வடிவமைப்பில் ஒரு புது உத்தியாக இருக்கட்டுமே என்று எதேச்சையாகத் தான் அதைச் செய்தேன். கிறிஸ்தவச் சன்னியாசியா மாறவந்த சாரதா ஒரு இந்துப்பெண் என்பது அதற்கொரு மறைமுகப் பொருத்தமாக அமைந்துபோயிற்று.

**உண்மையில் பொதுவெளியில் என் பலவீனமாகப் பார்க்கப்படும் அறிவின்மையைக் கவிதையிலாவது கொண்டாட முடியுமாவென்று சோதித்துப் பார்க்கவே எழுதுகின்றேன் என்கிறார் கவிஞர் பெரு விஷ்ணுகுமார். ஆனால் நம்முள்ளே பொதிந்து கிடக்கும் மடத்தனத்தையும் குழந்தைமையையும் கையாள்வதற்கும் அதை மொழியாக உருமாற்றம் செய்வதற்கும் மிகப்பெரிய புத்திசாலித்தனம் தேவையாக இருக்கிறது. உங்களுக்குள் இயல்பாக இருக்கும் பித்துநிலை கவிதையாக மாற்றமுறும் தருணங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்.**

அறிவாளிகள் இதை எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்று தெரியவில்லை. அது பற்றி நான் கவலைப்படுவதும் இல்லை. ஏனெனில் கவிதைகள் அறிவார்த்தப் பிரதிகள் அல்ல. உணர்வு சார்ந்தவைகள். கையில் எப்போதும் பேனா பேப்பரோடுதான் இருக்கிறேன். இருந்தாலும் பௌர்ணமி ஒட்டிய மூன்று நாட்களும் அமாவாசை ஒட்டிய மூன்று நாட்களும் அவை பொங்கிவருகின்றன. அதைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

**நவீன இலக்கியங்களுக்குப் பல்கலைக் கழகங்களும் பதிப்பகங்களும் போதிய முக்கியத்துவம் அளிப்பதில்லை. படைப்பாளிகளின் மேல் போதிய புகழ்வெளிச்சம் விழுவதில்லை. நவீன இலக்கியம் பொது வாழ்வியலோடு பொருந்தி வராத தன்னையை வெளிக்காட்டுபவையாக இவைகள் அமைந்திருக்கின்றனவா?**

நவீன இலக்கியம் என்றும் பழைய இலக்கியம் என்றும் இலக்கியத்தை நீங்கள் பாகுபடுத்தக் கூடாது. இதயத்தின் வெளிச்சத்தில் இருந்து வெளிவருகிறது இலக்கியம். இதற்குக் காலகட்டங்கள் கிடையாது.

**தரமான கவிதைகளுக்கான தேவை ஒருபுறம் அதிகரித்துக்கொண்டிருக்கையில் தரமான கவிதைகளை உருவாக்கத் தூண்டுகோலாக இருக்கிற விமர்சகர்கள் போதாமை ஒருபுறம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. புதினங்களுக்கு அளிக்கப்படுகிற முக்கியத்துவத்தை விமர்சகர்கள் கவிதைகளுக்கு அளிப்பதில்லை. அல்லது கவிதைகள் மீது உண்மையான பற்றுடைய விமர்சகர்களைத் தமிழ் கூறும் நல்லுலகம் தொடர்ந்து உருவாக்கவில்லை. கவிதை விமர்சனம் குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?**

பௌர்ணமி அமாவாசை வருகிற மூன்று நாள் மூன்று நாள் என்னைத் தூங்கவிடுவதில்லை. என் கவிதைகளுக்கு விமர்சகர்கள் இல்லை. கவிதைகள் நிகழும். கவிதைகள் உயிரின் உச்சம். நம்மாலே எழுத முடியாது. திரும்பிப் பார்க்க முடியாது. கவிதைக்கு விமர்சனம் தேவையே கிடையாது.

**கவிஞனைச் சமூகம் கொண்டாடுகிறதோ இல்லையோ அவனுடைய கவிதைகள் அவனைக் கொண்டாடுகின்றன. சமூகம் அவனுக்குச் செய்யும் உதவிகளை விட அவனது கவிதைகள் அவனுக்குச் செய்யும் உதவிகள் அளப்பரியன. உங்கள் கவிதைகள் உங்களுக்குச் செய்த உதவிகளிலேயே பேருதவி என்று நீங்கள் கருதுவது எதனை? உங்கள் கவிதைகளின் மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைகளை அவைகள் எந்த அளவுக்குக் காப்பாற்றி இருக்கின்றன?**

என் கவிதைகள் எனக்குச் செய்த பேருதவி என்று கருதுவது.. என் கவிதைகளால் எனக்குக் கிடைத்த என் இதயமாகக் கருதும் இவர்கள்தான்.. 1. ரமேஷ்ராஜா 2. கோணங்கி 3. ராமச்சந்திரன் (ராம்ஸ்) 4. லக்ஷ்மி மணிவண்ணன் 5. சாம்ராஜ் 6. முருகானந்த் குமரேசன் 7. கவிஞர் பால்முகில் 8. திருநாவுக்கரசு (மணி)

இவர்கள் எனக்குப் பேருதவியாக இருக்கிறார்கள். ■

• சத்யானந்தன்
ஓவியங்கள் : அன்பழகன்

# குயில்கள் கரையும் காலம்



**நான் – பெண் அஃறிணை**

கொத்துக்கொத்தாய்ப் பூத்து மணம் வீசுகின்றன மாமரங்கள். என்னைப் போல் அடர்த்தியில்லா அரக்குச் சிறகுகளிடைப்பட்ட வெண்புள்ளிகளுண்டா? கறுப்புச் சிறகுகள். என்ன அழகும் இல்லாதவை. இணையைத் தேடிக் காது செவிடாகிவிடும்படி கூவுகிறான்கள். அலையாமல் இணை தேடும் சோம்பேறித்தனம் தவிர என்ன உண்டு இவன்களிடம்? பெண் குயில் சூல் கொள்ளும் காலம் இவன்களுக்குத் துள்ளலாயிருக்கும். எந்தெந்த மரங்களில் காக்கைகள் கூடுகள் இருக்கின்றன என்பது கூடத் தெரியாத சோம்பேறிகள். சென்ற முறை நான் முட்டையிடும் வரை காக்கைக்குப் போக்குக் காட்டக் கூடத் தெரியாத கையாலாகாதவனை வைத்துக்கொண்டு பட்ட பாடு போதும்.

இம்முறை அனுசரணையாய் இருப்பவனைத் தேடிப் பிடிக்க வேண்டும். அது புரியாமல் வட்டம் போடுகிறான்கள். அடர்ந்த மாமரக் கிளைக்குள் என்னைத் தேடி வருபவன் யாரென்று பார்க்கலாம்.

திடீரென நான் ஒளிந்திருக்கும் கிளை

அசைகிறது. கிளை மீது மோதியவள் கிக்கிளுவெனச் சிரிக்கிறாள். குண்டுக் கண்கள், மாம்பழம் போல் கன்னங்கள். அப்பாவின் தோள் மீது அமர்ந்திருக்கிறாள் ஒரு பெண் குழந்தை. அவளைத் தோள் மீது வைத்தபடி அவர் குதிக்க, அப்போதும் அவளுக்குக் கிளை எட்டாமற் போக, அதுவே மறுபடி மறுபடி விளையாட்டாக அவளுக்குப் பொங்கி வருகிறது அப்படி ஒரு சிரிப்பு. அவர் முகமெல்லாம் பரவசம். அலுத்துக் கொள்ளாமல், வியர்க்க வியர்க்க மறுபடி மறுபடி குதித்துக் குதித்து அவளைச் சிரிக்க வைக்கிறார். அடுத்த ஜென்மத்தில் மனித இனத்தில் பிறக்க வேண்டும். என் குழந்தைகள் அற்பக் குயிலப்பனுடன் அவஸ்தைப்படாமல் ஆசையான மனித அப்பனுடன் மகிழ வேண்டும்.

நிறைய வேர்த்துவிட்டது போலும். நிறுத்தி அவர் அவளை இறக்கிவிட்டுக் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொள்கிறார்.

"அப்பா, நீங்க கண் பாக்க முடியாதவங்க மூணு பேர் பத்திச் சொன்னீங்களே?"

"எந்த மூணு பேரு கண்ணு?"

"ஒருத்தருக்கு யானை முறம், இன்னொருத் தருக்குத் தென்னை மரம், வேற ஒருத்தருக்குச் சுவர் அப்படினு சொன்னீங்களே."

"ஆமாம். அதுக்கு என்ன?"

"அவங்களுக்கு யானைக்கிட்டே போக ஏன் பயமே இல்லை?"

"அவங்கதான் யானைக்கிட்டே போகவே இல்லயே"

"என்னபா சொல்றீங்க?"

"ஆமாம் கண்ணா,.. அவங்க முறம், சுவர் இல்ல மரத்துக்கிட்டேதானே போனாங்க?"

குழந்தை சிந்தனையில் ஆழ்ந்தாள்.

**நான் – இவர்கள்**

இயக்குனர் வசனம் எழுதுகிறவரிடம், "நீங்க இவனோட காரக்டரைப் புரிஞ்சிக்கல. இவன் கெட்டவன்தான். ஆனாத் திட்டம் போட்டு எதையும் செய்யத் தெரியாது. அதே சமயம் தீவிரமாகக் குற்றங்களைச் செய்யிற பித்தும் இருக்கு இவனுக்கு. இவனோட இந்தத் தீவிரத்தப் பாத்துத்தான் பலரும் இவனோட கூட்டுச் சேர்றாங்க."

"சினிமா மீடியத்துல வசனத்துல எண்டயர் காரக்டரைசேஷனையும் தர்றது சாத்தியம் இல்ல."

"ஐ நோ தட். ஆனா நீங்க இவனுக்கு ஒரு வார்த்தை, ரெண்டு வார்த்தை மாதிரி எழுதினாப் பத்தாது."

"சிட்சுவேஷனுக்கு ஏத்த மாதிரிதான் சார் எழுதிக்கிட்டு வர்றேன்."

"சிட்சுவேஷன்லே டயலாக்குக்கு இடம் இல்லேன்னா சொல்லுங்க மாத்தி டெவெலப் பண்ணுவோம்."

என்னைப் பற்றி என்ன புரிந்துவிட்டது இவர்களுக்கு என ஏதேதோ பேசிக்கொண்டே போகிறார்கள்? இவர்கள் குறிப்பிடுமளவு மோசமான கதாபாத்திரமே இல்லையே நான். இவர்களது 'ஸ்கிரிப்ட்'டும் வசனமும் மூச்சு முட்டுகிறது. போதும் போதும் என்றாகிவிட்டது.

கதைக்கு வெளியே வந்தேன். நிமிர்ந்து நின்றேன். பாழடைந்த கட்டிடத்தில் நடந்துகொண்டிருந்தது படப்பிடிப்பு. வெளியே வாசலில் படப்பிடிப்பில் வேலை செய்வோருக்கான உணவு வாகனம் நின்றுகொண்டிருந்தது. டிரைவரிடம், "நான் மெட்றாஸ் போவணும்," என்றேன்.

"ப்ரோடோக்சன் மேனஜருக்கிட்டே கேக்கலே?"

"நா நடிகன் இல்லப்பா. கதைக்குள் இருந்த காரக்ட்டர்." ஒன்றும் புரியாமல் என்னை முறைத்தான். என்ன தோன்றியதோ "கொஞ்சம் வெயிட் பண்ணுங்க. பாத்திரமெல்லாம் அடுக்கின உடனே கிளம்பலாம்," என்றான்.

டைடல் பார்க் தாண்டியவுடன் பழைய மகாபலிபுரம் சாலையில் இருந்து கிழக்குக் கடற்கரைச் சாலைக்குப் பிரியும் ஒரு பாலத்தின் அருகே நான் இறங்கிக்கொண்டேன். அவ்வை நகரில் அடுக்கி நெருக்கிக் கட்டியிருந்த பெட்டி வீடுகளில் எது என் கதாபாத்திரத்துக்கு உண்டானது என்று எனக்குத் தெரியும். ஒரு வீட்டின் இரண்டாம் தளத்தில் என் ஒற்றை அறை. சாவி போட்டுத் திறந்தேன். முதலில் மேஜை இழுப்பறையில் இருந்த கைபேசியை எடுத்தேன். அழைத்தேன்.

"குமாரு, உள்ளே இருக்கியா வெளியேவா?"

"உள்ளே இருந்தா செல்லுல எப்பிடிபா பேச முடியும்?"



"உன்னால முடியும்."

"அத்தே உடு. இன்னா வேலை ஆவோணும்?"

"ஒரு பங்கு பிரிக்கிற வேலை."

"நான் பிரிக்கணுமா?"

"இல்ல. என் கூட நீ இருக்கணும்."

"ஆரு பிரிக்கிறவன்?"

"ராசு."

"என்ன பணம் அது? மொத்தம் எவ்ளோ கிடைச்சுது?"

"அதெல்லாம் எதுக்கு சேகரு? என் பங்கு ரெண்டு கோடி."

"பிரிச்சிக்கோங்க."

"விளையாடாதே சேகரு. அவங்கொலை செய்றவன்னு எனக்கு இத்தன நாளாத் தெரியாது."

மறுபக்கத்தில் இருந்து பலமான சிரிப்பு, "நாலு கோடி பைசல் பண்ரப்போ கூடவா தெரியாது?"

"நக்கல் வேண்டாம் சேகரு. அவன் பிரிக்கிற வரைக்கும் நீ கூடவே இரு."

"எதுக்கு?"

"அவன் என்னைக் கொல்லாமக் காப்பாத்த."

"எவ்ளோ தருவே?"

"50."

"பத்தாது."

"எவ்ளோ வோணும்?"

"ஒரு கோடி."

பாதிக்குப் பாதி கேட்கிறான். வேறு வழியில்லை.

"இன்னாப்பா யோசிக்கறே?" என்றான்.

"சரி. ஆனா ஒரு கண்டிஷன். அவன் பங்கு பிரிக்காட்டினா டமால்னு என்னைக் கொல்ல வந்தா நீ அவனக் கொன்னே ஆவ்னும். அதே இடத்தில."

"சரி."

"இன்னொண்ணு. இன்னும் ரெண்டு நாளைக்குள்ள இதைச் செய்யணும்."

"ஏன் இந்த அவசரம்?"

"அதுக்கப்பறம் அவன் நேபாளம் போறான். திரும்பிச் சென்னை வரானோ இல்லை வேறே எங்கினேயும் போறானோ."

"சரி."

### நான் – முத்திவிடுபவன்

என் மகன் மீண்டும் தொடங்கிவிட்டான். "யப்பா.. பாம்பேக்கு நீ வந்து பாரு.. அப்புறம் உன் மனசு மாறும்."

"என்னடா நீ டிரைவர் வேலை பாக்கிறது அவ்ளோ பெரிய விஷயமா?"

"முதல்லே ஒரு விஷயம் தெரிஞ்சிக்கோ. நான் ரிலையன்ஸ்லே டிரைவரா இல்லே."

"பின்னே? க்ளீனரா இருக்கியா?"

"சும்மா நக்கலடிக்காதே. நான் புது டிரைவருங்களுக்குக் கத்துக்குடுக்குற டிரைனர். மாசம் எனக்கு 50000 சம்பளம்."

"வெச்சிக்கோ... அஞ்சு ரூபாய் நீ எனக்குத் தர வேண்டாம். கலியாணம் கட்டிக்கோ."

"தோ பாருப்பா உன்னாலேதான் அம்மாவும் வர்ற மாட்டேங்கிது."

"அவளை இட்டுக்கினு போ. எனக்குக் கட்சி வேலை ஏகப்பட்டது கெடக்குது."

"என்னப்பா என்கிட்டேயே சுத்துறே. தொகுதி புல்லா வாக்காளருக்கு 3000 கொடுக்கப் பத்து பேரை செலக்ட் பண்ணினாங்க. அதுல உன் பேரில்லையாமே. எல்லா நியுஸூம் எனக்கு வருதுப்பா."

"இன்னொரு நியூஸ் வரலே?"

"என்னது?"

"நான்தாண்டா நம்ப வார்டுக்கு இன்சார்ஜ்."

"அது ஒன்னும் பெரிய பதவியில்ல.. உனக்குக் கட்சில தர்ற தொகை ரொம்பக் கம்மி... எல்லாத்தயும் சதீசு அப்பா பிரபாகர் அள்ளிக்கிட்டுப் போயிடராரு."

"இந்த தபா அது நடக்காது."

"எப்படி?"

என் பையிலிருந்து ஒரு டோக்கனை எடுத்துக் காட்டினேன். முன் பக்கம் கட்சியின் சின்னம். பின்பக்கம் உள்ள 'ஸ்டிக்கரை'ப் பிரித்தேன். 25311 என்று 'கம்ப்யூட்டர் பிரிண்ட்' போட்டிருந்தது. எந்தெந்த நம்பர் பிரபாகர்கிட்டே கொடுத்தாங்கனு கம்ப்யூட்டர்லே இருக்கு."

"அவருதான் எல்லாத்திலேயும் பாதியை அமுக்கிடுவாரே."

"தெரியும்.. இங்கே வா." மாடிக்கு அழைத்துப் போனேன். நெருங்கலான படிகள். சிறிய அறை. ஒரு நாடாக் கட்டில் இருந்தது. "பரண்லே இருக்குற டிரங்க் பெட்டியை எடு." என்றேன். எடுத்தான்.

"திற." திறந்தவன் கண்கள் அகல விரிந்தன.

"என்னபா இது? கத்தை கத்தையா டோக்கன்?"

"அவங்கொடுக்காம இதையெல்லாம் ஒளிச்சு வச்சான். ஒரு ஆள் அதைத் தள்ளிக்கிட்டு வந்து என்கிட்டே கொடுத்துட்டான்."

"இப்போ என்னபா பண்ணப்போறே? கட்சி மேலிடத்துக்குக் கொடுக்கப் போறியா?"

"முட்டாப் பயலே.. அதுனால என்னே ஆகும்? என்னை என்ன தலைவனாவா ஆக்கிடப்போறானுங்க?"

"வேறே என்ன செய்ய முடியும்?"

"எல்லா ஸ்டிக்கர் நம்பரையும் ஆள வச்சிப் பிரிச்சி போட்டோ எடுத்திருக்கேன். பிரபாகருக்கும் எனக்கும் டீல்."

"எவ்ளோ ரூபாய்க்குபா?"

மூன்று விரலைக் காட்டினேன். மகன் வாயடைத்தான்.

### நான் – என் ஏணி

கட்டிட வேலைக்குச் சிறுவயதில் ஏறத் தொடங்கினேன். இப்போதெல்லாம் காலையில் சுமாராக இருக்கும் கைகள் மதியத்துக்கு மேல் நடுங்க ஆரம்பித்து மாலையில் மது அருந்திய பின்தான் நிலைகொள்கின்றன.

இந்தக் கட்டுமான இடத்து மேஸ்திரி, என்னை ஒப்புக்கு நாலு செங்கலைத் தட்டில் வைத்து ஏறி ஏறி இறங்க வைக்கிறான். வாரம் ஆயிரம் ரூபாய். அவனுக்கு 1800 கிடைக்கிறது என்பது எனக்குத் தெரியும்.

உண்மையில் ஏணிப்படிகள் எப்போதுமே நிரந்தரமானவை. இன்று கை நடுங்கும்போது இந்த நிரந்தரம் தரும் உத்தரவாதம் பகலெல்லாம் இருக்கிறது. இரவில் மது தரும் ஆறுதல். ஏணியில் மேஸ்திரி என்னை ஒப்புக்கு ஏற்றி இறக்கி ஒப்பந்தக்காரரிடம் என்னையும் ஒரு கூலி ஆளாகக் காட்டுகிறான். அவன் என்னைச் சும்மா விடும்போதும் அந்த ஏணி ஒன்று மட்டும்தான் என் கூட்டாளி. சிறு வயது முதல்

துணையாய் வந்துகொண்டிருக்கிறது. மேஸ்திரிக்கும் ஒப்பந்தக்காரருக்கும் இந்த ஏணி போல் எதுவும் உத்தரவாதம் தரவில்லை. அதான் எப்போதும் பதட்டம்.

**நான் – ஆண் – அஃறிணை**

இன்று புளியந்தோப்புப் பக்கம் சிறகடித்தேன். பெரிய மரம் ஒன்றில் அத்தனைக் கம்பளிப் பூச்சி அடைஅடையாய். பெரிய விருந்தாய் உண்டு மறுபடி மாந்தோப்பில் அவள் கண்ணில் படாமல் பெரிய இலைக் கொத்துள்ள மரக்கிளையில் கண்ணயர்ந்தேன். பனிக்காலம், மதியமே வெளிச்சம் குறைய ஆரம்பித்தது. எங்கே இருந்துதான் என்னைக் கண்டுபிடித்தாளோ? அருகில் அமரும்போதே சிறகுகளால் படபடத்து என் முகத்தில் இடித்தாள். "கிளம்பு சீக்கிரம்."

"எங்கே?"

"வா... தெரியும்.. இருட்டினால் இந்த வேலை முடியாது வா...."

அவள் கொடுத்த அழுத்தத்தில் உடனே சிறகு விரித்தேன். மஞ்சள் வெயிலில் மங்கலாய்த் தெரிந்த ஒரு காக்கையின் கூட்டை முதலில் நெருங்கினாள். பக்கத்துக் கிளையில் அமர்ந்தாள். ஆண் காகம் கூட்டைக் காவல் காத்துக்கொண்டிருந்தது.

"அவனை வெறுப்பேற்றித் தள்ளிக் கூட்டிக்கொண்டு போ," என என் காதருகே கிசுகிசுத்தாள். "இருட்டப் போகிறது. சீக்கிரம்."

"எதற்காக?" என்று மெல்லிய குரலில் கேட்டேன் .

"கூட்டுக்குள் ஒரே நெருக்கடியாக இருக்கிறது. அவளுக்கு அடைகாக்க இடமே இல்லை. இரண்டு மூன்று குச்சிகளை உருவி, காக்கை முட்டைகள் கொஞ்சத்தை வெளியே தள்ளிவிட எனக்குக் கொஞ்சம் அவகாசம் வேண்டும். அவனைத் தள்ளிக் கொண்டு போ."

நான் அப்பாவியாக முகத்தை வைத்தாலும் அவளிடம் எதற்காக என்று கேட்டாலும் இது எனக்குத் தெரிந்த வேலை என்பதை அவள் அறிவாள். என் வயதை வைத்து யூகித்திருப்பாள். என் முகத்தில் கொத்துவது போல் அவளது அலகை என் முகத்தருகே நீட்டினாள். துள்ளிப் பறந்தேன். காக்கையின் மீது விழுவது போல் இறங்கிப் பறந்து அவனை உரசி அடுத்த கிளையில் அமர்ந்தேன். தலையை நிமிர்த்திக் கரைந்தான். கூட்டிலிருந்து கிளம்பி என்னை நோக்கிப் பறந்தான். நான் அடுத்த மரத்துக்குப் பறந்தேன். அவன் துரத்த அதற்கு அடுத்த மரத்துக்குப் போனேன்.

நிறைய குயில்கள் இருந்த கிளையில் நான் அமர்ந்ததும் அவன் தள்ளி அதே மரத்தின் சிறிய கிளையைப் பற்றி ஒற்றைக் கண் பார்வையில் என்னை நோட்டம் விட்டபடி இருந்தான்.

குயில்களில் ஒரு பெண், "எங்கே உன் இணை?" என்றாள்.

"என்னைத் தேடிக்கொண்டிருப்பாள்," என்று சொல்லி வைத்தேன்.

சில நிமிடங்களிலேயே அவள் திரும்பி வந்து என்னை உரசி அமர்ந்தாள். "கிளம்பு. மற்றொரு கூட்டுக்குப் போக வேண்டும்."

"எதற்கு?"

"என்ன எதற்கு? இரண்டாவது கூட்டில் நான் முட்டையிட மாட்டேன் என நீ முடிவு செய்துவிட்டாயா?"

அவள் சிறகடிக்க நான் பின்தொடர்ந்தேன். மஞ்சள் ஒளி படும் உயரம் குறைந்துகொண்டே வந்தது.

உயரம் குறைவான மரத்தின் மையக் கிளைகளில் ஒன்றை அவள் தைரியமாக நெருங்கினாள். கூடு மங்கலாய்த் தெரிந்தது. காக்கை எதுவும் அருகில் இல்லை. எப்படி அதை அவள் யூகித்தாள்? கூட்டை இருவரும் நெருங்கினோம். சின்னஞ்சிறு குஞ்சுகள் ஐந்து இருந்தன. அனைத்தும் மெதுவாய்க் கரைந்துகொண்டிருந்தன.

"எல்லாமே காக்கைக் குஞ்சுகள்," என்றேன்.

"அடப்பாவி... நம் இரண்டு குஞ்சுகளைக் கூட உனக்குத் தெரியவில்லையா?" எனக் கடித்தபடி அலகால் இரண்டு குஞ்சுகளைத் தடவிக் கொடுத்தாள்.

"நம்மைப் போலக் கூவாமல் ஏன் கரைகின்றன?"

"இன்னும் மூன்று நான்கு வாரமாகும் அவற்றுக்குச் சிறகுகள் முளைக்க. அதற்கு முன் கூவினால் கொத்திக் குதறிவிடும் காக்கை. குஞ்சுகள் அதுவரை கரையும். கிளம்பு."

சிறகை விரித்தாள். ■



• கவி: கவிக்கோ அப்துல்ரகுமான்

## பிறந்தநாள் - நவம்பர் 9



இங்கே ஒருநாள்
மரணத்தைக் குடித்து
மலரும் ஒரு பூவாக
என்னைக் காண்பீர்கள்.

• முகம்மது பாட்சா

# சித்தி ஜுனைதா பேகம்






மூன்றாம் வகுப்பு மட்டுமே படித்தவர், இஸ்லாமியப்பெண், இளம் வயது விதவை என்ற நிலைகளின் அழுத்தங்களோடு தனது 16வது வயதில் புரட்சிகரமான கருத்துக்களோடு நாவலொன்றை எழுதி அதன் மூலம் வெற்றி கண்டு; முதல் பெண் இஸ்லாமிய நாவலாசிரியர் என்ற பெருமையைத் தமிழுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருப்பவர் இந்தக் கட்டுரையின் நாயகி சித்தி ஜுனைதா பேகம் அவர்கள்...

இன்றளவிலும் கூட இஸ்லாமியப் பெண்கள் எழுத்துத் துறைகளில் மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கும் சூழலில், 1933இன் காலகட்டத்தில் ஓர் இஸ்லாமியப்பெண் ஒரு புரட்சிகரமான நாவலை எழுதினார் என்பது மிகவும் வியப்பாக இருக்கிறது. அதற்காக அன்றைய சூழலில் அவருக்கு ஏற்பட்டிருக்கும் எதிர் வினைகளை எப்படி எதிர்கொண்டு தன்னை நிலை நிறுத்தியிருப்பார் என்பதில் அவரது உறுதித்தன்மை நமக்குப் பெரும்வியப்பை அளிக்கிறது...

இன்றைய அளவில் கூட, பெண்கள் என்பவர்கள் வீட்டுப்பறவைகளாகப் பார்க்கின்ற சூழலில்தான் வாழ்ந்துவருகிறார்கள். அப்படியே அவர்கள் வெளியுலகிற்கு வந்துவிட்டபோதிலும், அவர்கள் பேசுகின்ற சுதந்திரம் என்பது ஆடைகளின் அளவிலும், புழங்கல் தன்மைகளிலும் மட்டுமே சுற்றிக்கொண்டிருப்பது மிகவும் வேதனையான விசயமாகும். அவர்கள் தங்களின் திறமைகளை வெளி உலகில் காண்பித்துத் தாங்கள் ஆண்களைவிடவும் மேலானவர்கள் என்பதை நிரூபிப்பதில்தான் உண்மையான சுதந்திரம் ஒளிந்திருக்கிறது. அதில் எழுத்துக்களும் அவர்களுக்கான அடிப்படைச் சுதந்திரம் என்பதை ஏனோ மறந்துவிடுகிறார்கள்...

நாகூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் சித்தி ஜுனைதா பேகம். எம்.ஷெரீப் பெய்க், முத்துகனி தம்பதிகளின் மூத்த புதல்வியாக 1917ஆம் ஆண்டு பிறந்தவர். இவரது மூத்த சகோதரர் முனவர் பெய்க் பன்மொழி அறிஞராகத் திகழ்ந்தவர். இவர்தான் சித்தி ஜுனைதா அவர்கள்

எழுத்துத்துறையில் நுழைவதற்கு முதல் காரணமாக இருந்தவர். இவர்தான் வாசிப்பின் அருமையைத் தன் சகோதரிக்குக் கடத்தியவர். இரண்டாவது சகோதரர் முஜின் பெய்க் என்பவர், காரைக்காலில் பால்யன் என்ற பத்திரிக்கையைப் பல ஆண்டுகளாக வெற்றிகரமாக நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது குடும்பமே தமிழ் அறிஞர்களால் சூழப்பட்டது என்று சொல்லலாம். வண்ணக்களஞ்சியப் புலவரின் வாரிசுகள்தான் தாங்களென்று பெருமையாகச் சொல்லிக்கொள்பவர்கள் இவர்கள். (வண்ணக்களஞ்சியப் புலவரைப் பற்றித் தனியாகவே நிறைய எழுதலாம்). இவர்களது தந்தையார் ஷெரீப் பெய்க் ஓர் ஆங்கிலேயரின் கப்பலொன்றில் கேப்டனாகப் பணிபுரிந்தவர். நல்ல ஆங்கிலப் புலமையும் எழுத்தாற்றலும் உள்ளவர்.

இவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் திரைத்துறையில் நீண்ட காலமாகத் தூயவன் என்ற பெயரில் இயங்கிவந்த எஸ்.எம்.அக்பர் என்பவர். வசனகர்த்தா, தயாரிப்பாளர் என்று பன்முகங்களுடன் பயணம் செய்தவர். இவரது இன்னொரு சகோதரரான நாகூர் சலீம் என்பவர் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியப் பாடல்களை எழுதிப் புகழ் பெற்றவர்... இதில் ஆச்சரியம் என்னவென்றால் இவர்களெல்லோருமே பள்ளிப் படிப்பை முழுமையாகத் தாண்டாதவர்கள் என்பதுதான். குறிப்பாகச் சித்தி ஜுனைதா பேகம் அவர்கள் மூன்றாம் வகுப்பு மட்டுமே படித்திருந்தார். பெண் பிள்ளைகளைப் படிக்க வைப்பது தவறான செயலாகக் கருதப்பட்ட காலம். இவரது இன்னொரு சகோதரியின் மகன்தான் எழுத்தாளர் நாகூர் ரூமி என்பதும் கூடுதல் சிறப்பாகும்.

பன்னிரண்டு வயதிலேயே ஃபகீர் மாலிமார் என்பவருக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்ட சித்தி ஜுனைதா அவர்கள் நான்காண்டுகளிலேயே கணவரை இழந்து விதவையானார். இஸ்லாத்தில் மறுமணத்திற்கு இடம் இருந்தும், அவர்கள் அதை ஏன் செய்துவைக்கவில்லை என்பது பெரிய கேள்விக்குறிதான். பின் நாளில் தன் துயரங்களுக்கு வடிகாலாக வாசிப்பைக் கையில் எடுத்துக்கொண்டவர், சுயமாகவே எழுதும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார். தம் வீட்டிலிருக்கும் நூல்கள் அனைத்தையும் படித்துவிட்டுத் தம் கருத்துக்களை அவ்வப்போதே நாட்குறிப்புகளில் எழுதி வைக்கும் பழக்கம் உடையவராகவும் இருந்திருக்கிறார். நாகூர் ரூமி அவர்கள் இதனை ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

1929இல் தனது முதல் சிறுகதையை எழுதிய ஜுனைதா அவர்கள், அப்போது இஸ்லாத்தில் பெண் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்துக்கொண்டிருந்த தாவூத்ஷா என்பவருக்கு அதனை அனுப்பி வைத்தார். தாவூத்ஷா அவரைப் பாராட்டியதோடு அதனைத் தாருல் இஸ்லாம் என்ற பத்திரிக்கையில் வெளியிடவும் செய்து அவரது எழுத்துப் பணியைத் தொடங்கிவைத்தார் என்று சொல்லலாம். அதனைத் தொடர்ந்து நிறையக் கட்டுரைகள், சிறுகதைகள் என எழுதி வந்தவர் திடீர் பாய்ச்சலாக எழுதியதுதான் 'காதலா?கடமையா?' என்ற முழு நாவல்.

இந்த நாவலுக்கு முன்னுரையை வழங்கியவர், தமிழறிஞர் உ.வே.சா. என்பதும் குறிப்பிடத்தக்கது. எழுத்தாளர் புதுமைப்பித்தன் கூட அவரது கடிதங்களில் இவரைப் பற்றி எழுதியிருக்கிறார். இந்த நாவல் பல புரட்சிகரமான கருத்துக்களைப் பின்னணியில் கொண்டது.. இந்த நாவலின் தழுவல்தான் மறைந்த நடிகர் எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி மன்னன் என்பதும் விவாதப் பொருளாகும். அதிலுள்ள பெரும்பான்மையான காட்சிகளும், சீர்திருத்தக் கருத்துக்களும் இந்த நாவலில் உள்ளதை அப்படியே தழுவியிருந்ததாகவும் பின் நாளில் அப்படத்திற்கு வசனமெழுதிய ரவீந்தர் இதனை ஒப்புக்கொண்டதாகவும் தினகரன் ரம்ஜான் மலரில் 'சித்தி ஜுனைதாவும் நாடோடி மன்னன்களும்' என்ற கட்டுரையை எழுதிய டாக்டர் கம்பம் ஷாகுல் ஹமீது அதில் குறிப்பிடுகிறார்.

ரவீந்தர் என்பவர் நாடோடி மன்னன் படத்திற்கும் மகாதேவி படத்திற்கும் வசனமெழுதியவர். எம்.ஜி.ஆரின் கதை இலாகாவில் முக்கிய நபராகவும் பணியாற்றியவர்.. அது மட்டுமில்லாமல் ஜுனைதா பேகத்தின் சகோதரரும் வசனகர்த்தாவுமான தூயவன் என்ற எம்.எஸ்.அக்பரின் உதவியாளராகவும் கொஞ்சக்

காலம் இருந்திருக்கிறார். இவரும்கூட நாகூர்காரர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜுனைதா அவர்களின் கதைகளில் எப்போதுமே பெண்களுக்கான முக்கியப் பங்கு அளிக்கப்பட்டிருந்தது. பெண்கள் எழுத்துத் துறைகளில் மிளிர வேண்டுமென்பதே அன்னாரின் ஆழ்ந்த கருத்தாகவும் இருந்தது. இதனை அவர் தனது 'சண்பகவல்லி தேவி அல்லது அப்பாசிய குலத்தென்றல்' என்ற குறுநாவலின் தன்னுரையில் இப்படி வெளிப்படுத்தியிருந்தார் : "சரிதைகளையும் சமூகச் சீர்திருத்த நவீனங்கள், கட்டுரைகள், சிறுகதைகள் முதலியவைகளையும் புதுமுறையில் எழுதி வெளியிட முயற்சிக்கிறோம். இத்தகைய பணி, ஆண் மக்களை விட, பெண் மக்களுக்கே ஏற்புடையது. ஆண் மக்கள் ஜாதி சமயத்தால் தூண்டப்பட்டு, சரித்திர உண்மைகளை மறைத்தும், திரித்தும் எழுதலாம். பெண் மக்கள் இயல்பாகவே ஆழ்ந்து சிந்திக்கும் மனத்தன்மையும், இரக்கமும் உடையவர்கள். எனவே, புத்துலகம் புது மாற்றம் விழையும் முஸ்லிம் உலகம் மறுமலர்ச்சி விரும்பும் தமிழர் உலகம் தம் நாட்டுப் பெண் எழுத்தாளர்களை வரவேற்குமாக!"

"என் எழுத்துலக நுழைவிற்கு எனக்கு முன்மாதிரியாக நான் யாரையும் பின்பற்றவில்லை. என் இறந்துபட்ட, அஞ்சலகத்தலைவர் என் சகோதரர் ஹுஸைன் பேயும், நானுந்தான் ஒன்றாய் உட்கார்ந்து படிப்போம், எழுதுவோம். எனது சிறுகதை, நவீனம் எல்லாம் இயல்பாக எனக்கமைந்த சொந்த நடை என்றே நினைக்கிறேன்" இது அம்மையார் அவர்களே முஸ்லீம் முரசு இதழிற்கு அளித்த நேர்காணலில் கூறியதாகும்.

காதலா? கடமையா? என்ற நாவலை எழுத எந்தக் காரணமும் தமக்கு அமையவில்லை என்றும் எழுத வேண்டும் என்று தோன்றியது எழுதினேன் அவ்வளவுதான் என்றும் கூறும் ஜுனைதா பேகம் அவர்கள் இதற்கான அணிந்துரையைத் தம் தந்தையாரின் நெருங்கிய நண்பர் ஒருவரிடம் கேட்டதாகவும் அதற்கு அவர், "இதெல்லாம் பெரிய திறமையா?" என்று எள்ளியதால் உ.வே.சா. அவர்களிடம் அணிந்துரை பெற்றதாகவும் அவரே குறிப்பிட்டிருக்கிறார்..

இந்த நாவல் சிங்கப்பூர், இலங்கை போன்ற அண்டை நாடுகளிலும் கூட புகழப்பட்டது. தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிக்கைகள் இதற்கான மதிப்புரைகளை எழுதின. ஒரே ஆண்டில் அச்சிட்ட அத்தனைப் புத்தகங்களும் விற்றுத் தீர்ந்துவிட சுதேசமித்திரன் பத்திரிக்கை அலுவலகத்தில் எழுதிக் கேட்டு மீண்டும் புத்தகத்தை மறு பதிப்பாக வெளியிட்டதாக அவரது குறிப்பில் சொல்லியிருக்கிறார்.

காதலா? கடமையா? நாவலைத் தொடர்ந்து சண்பகவல்லிதேவி அல்லது தென்னாடு போந்த அப்பாசிய குலத்தென்றல் நாவல் (1947), மகிழம்பூ நாவல், இஸ்லாமும் பெண்களும் என்ற கட்டுரைத் தொகுப்பு, காஜா ஹஸன் பஸரீ (ரஹ்) வரலாற்று ஆவணம், ஹலிமா அல்லது கற்பின் மாண்பு, பெண் உள்ளம் அல்லது கணவனின் கொடுமை மற்றும் நாகூர் ஆண்டகை வரலாறு என்று நிறைய எழுதியவர் வஸ்வாஸ் என்ற அதீத சுத்தம் பார்க்கும் பிணியில் ஆட்பட்டார் என்றாலும் எழுதுவதையும் சிந்திப்பதையும் நிறுத்திக்கொண்டதேயில்லை.

அவரது முடிக்கப்படாத நாவல்களும் கட்டுரைகளும் இன்னமும் கைப்பிரதிகளாக இருப்பதாக நாகூர் ரூமி சொல்கிறார்.

இத்தனைச் சிறப்புகளும் வாய்க்கப்பெற்ற நாவலாசிரியை சித்தி ஜுனைதா பேகம் அவர்கள் (19.03.1998) தனது 81வது வயதில் இயற்கை எய்தினார்.

அவர் வளரும் எழுத்தாளர்களுக்காக, தனது நேர்காணலில் சொல்லியதைச் சொல்லி முடிப்பதே இக்கட்டுரைக்குச் சிறப்பு என்று கருதுகிறேன்:

"இன்றைய சமுதாயத்தில் வளர்ந்த எழுத்தாளர்களும், வளரும் எழுத்தாளர்களும் என் ஆலோசனையைக் கேட்க விரும்பினால் நான் கூற விரும்புவது இதுதான்; நீங்கள் உங்களுக்காக மட்டும் வாழ விரும்பாதீர்கள். உங்கள் நாட்டிற்காக உங்கள் இனத்திற்காக உங்கள் சமுதாயத்திற்காக உங்கள் மக்கட்காக வாழுங்கள். பிறர் நலத்திற்காக வாழுங்கள். உங்கள் நலத்திற்காக மட்டும் வாழாதீர்கள். இந்த எளியாளின் புத்திமதி இதுதான்."

கட்டுரை

தொடர் - 4

• கரிகாலன்

ஓவியம் : அன்பழகன்

# தேநீர் சாலை







**பள்ளு பாடுவோமே!**

~

96 வகை தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் பள்ளு இலக்கியமும் ஒன்று. பாரதி 'பள்ளு பாடுவோமே!' என்கிற அளவு களிப்பு நிறைந்தவை பள்ளுப் பாடல்கள்.

பள்ளமான மருதவயல்களில் நடவுத் தொழிலோடு காதலையும் தொழிலாகக் கொண்ட பள்ளர்கள் பள்ளிகளின் வாழ்வைப் பாடுவதே பள்ளு இலக்கியம். 17ஆம் நூற்றாண்டில் நாயக்கர் காலத்தில் நம் மண்ணில் எழுந்தவை இப்பாடல்கள்.

இவ்வகையில் திருவாரூர்ப் பள்ளு, குருகூர்ப் பள்ளு, திருமலைப் பள்ளு, சிவசயிலப் பள்ளு, வைசியப் பள்ளு, வடகரைப் பள்ளு, உரிமை நகர்ப் பள்ளு, சீகாழிப் பள்ளு, தில்லைப் பள்ளு, கண்ணுடையம்மை பள்ளு, கதிரைமலைப் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு, சேற்றூர்ப் பள்ளு, திருவிடைமருதூர்ப் பள்ளு, மாந்தைப் பள்ளு, கூடற் பள்ளு, தஞ்சைப் பள்ளு, தென்காசைப் பள்ளு, கொடுமளூர்ப் பள்ளு, இராசைப் பள்ளு, புதுவைப் பள்ளு, முக்கூட்டுப் பள்ளு, மன்னார் மோகனப் பள்ளு, சண்பகராமன் பள்ளு, வையாபுரிப் பள்ளு, திருச்செந்தில் பள்ளு என நிறைய பள்ளுகள் தமிழ் நிலத்தின் உழவு மற்றும் காதல் வாழ்வைப் பாடுபவை.

இதில் முக்கியமானது முக்கூடற் பள்ளு.

முக்கூடல் என்பது தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு கூடுகிற இடம்.

இதில் வரும் பள்ளன் ரெண்டு பெண்டாட்டிக்காரன். ஆக இதுவும் ஒரு முக்கூடலே. என்ன பள்ளன் இளைய மனைவியிடமே மயங்கிக்கிடக்கிறான் என்பது மூத்தவளின் ஆதங்கம். அது மட்டுமில்லை. இதில் இளையவள் சைவம். மூத்தவள் வைணவம். கேட்க வேணுமா? அடிக்கடி தசாவதார யுத்தம்!

ஒரு கிளுகிளுப்பான நடவுப்பாடல்.

சின்னியும் குருந்தியும் அருதியும் மருதியும் செல்லியும் இருவியும் எல்லியும் கலிச்சியும் திருவியும் அணைஞ்சியும் வெழுதியும் பெரிச்சியும் செம்பியும் வம்பியும் தம்பிச்சாளும் நன்னியும் உடைச்சியும் சடைச்சியும் மூக்கியும் நல்லியும் பூலியும் ஆலியும் வேலியும் நாச்சியும் பேச்சியும் சுந்தியும் எழுவியும் நாகியும் போகிலாளும் பொன்னியும் அழகியும் நூவியும் சேவியும் பூவியும் குருந்தியும் நடவு நடுகிறார்கள்.

போனவருடம் வரை சின்னப்பொண்ணா இருந்த குருந்தி பருவத்துக்கு வந்து தளதள வெனத் தளும்பி நிற்கிறாள். ஒரு உழத்தி அவள் அழகைப் பாடுகிறாள்...

**'கண்டோ மிதென்ன புதுமையோ**
**தொடையென்றால் வாழைத் தண்டைப்போல் –**
**விழிக் கடையென்றால் கணை ரெண்டைப்போல்**
**சொருக்கென்றால் மேக படத்தைப்போல்–**



முலை நெருக்கென்றால்
இணைக் குடத்தைப்போல்
இடையென்றால் வஞ்சிக் கொடியைப்போல் –
வரும் நடையென்றால் இளம் பிடியைப்போல்
இருந்த சாயலுக்கிப்பாற் –
குருந்தி திருந்தினாளடி பள்ளீரே'.

தமிழ்க் கள்ளருந்த நினைப்போர் பள்ளு பாடிக் களிப்பீர்!

....

**ஈகோ**

~

எனது தந்தையின் மரணத்திற்கு அத்தை குடும்பத்தோடு வந்திருந்தார். ஏதோ ஒரு கசந்த தருணத்தில் உதிர்ந்த வார்த்தைகளில் சிதறியது எங்கள் உறவு. பிறகு நெடுநாட்களாக அந்தக் கசப்பின் திரை விலகவே இல்லை.

எங்கள் வீட்டில் இரு மணங்கள். அவர்கள் வீட்டிலும் சுப நிகழ்வுகள். யாரும் போகவில்லை.

வெறும் வைராக்கியம், ஒரு அண்ணன் தங்கையின் பாதிக்கும் மேற்பட்ட வாழ்நாட்களை இருளாக்கிவிட்டன.

எனது அத்தை அழுதுகொண்டே இருந்தார். எனது தந்தையோ தான் மார்பிலும் தோளிலும் தூக்கி வளர்த்த தங்கையின் அழுகையைத் தேற்றாமல் மௌனமாகப் படுத்திருந்தார்.

அநித்யமான இவ்வாழ்வில் வெறும் வைராக்கியம் மனிதர்களைத் தனிமைப் படுத்திவிடுகிறது.

கசந்து விலகிய எல்லோரிடமும் மன்னிப்புக் கேட்க, மன்னிக்க, நாம் தயாராக வேண்டும்.

கண்ணீர் எத்தகைய கடின இதயத்தையும் கரைத்துவிடக்கூடியது.

பேசாது திரும்பிக்கொண்ட எல்லோரையும் தழுவுங்கள். இல்லாவிடில் மரணம் முந்திக்கொள்ளும்!

...

**கலையும் பரிசோதனையும்!**

~

பரிசோதனை முயற்சிகளே மனித குலத்தை இன்றைய தூரத்திற்கு அழைத்து வந்திருக்கிறது. செய்யச் சொன்னதைச் செய்யாமல், எல்லோரும் செய்ததைச் செய்யாமல் புதிதாய்ச் செய்து பார்ப்பதிலிருந்தே கலையும் அறிவியலும் பிறக்கின்றன. தீண்டக்கூடாத கனியைப் புசித்த ஆதாம் ஏவாளிடமிருந்து தொடங்குகிறது இந்தப் பரிசோதனை முயற்சி.

அந்தப் பரிசோதனை முயற்சியே, மோகன்லால், சூர்யா, ஆர்யா என மல்ட்டி ஸ்டார்ஸ் நடிக்கும் காப்பான் படத்துக்குப் போகாமல், தனிஒருவனாகப் பார்த்தீபன் நடித்திருக்கும் ஒத்த செருப்பு சைஸ் 7க்குக் கரிகாலனை அழைத்துச் சென்றது.

பார்த்தீபன் சற்று புதுமைத்தாகம் கொண்டவர்.

பெரும்பாலும் அவை எனக்கு அசட்டுத்தனங் களாகவே தோன்றும். முதன்முறையாக ஒரு புதுமையைக் கலையுணர்வோடு படைத்திருப்பது இந்த ஒத்த செருப்பில்தான்.

ஒரு நடிகர் மட்டுமே நடித்த நிறைய படங்கள் வந்திருக்கின்றன. டாம் ஹாங்க்ஸ் நடித்த Cast Away,



சுராஜ் ஷர்மா நடித்த Life of Pi, வில் ஸ்மித் நடித்த I Am Legend, ஜேம்ஸ் ஃப்ரான்கோ நடித்த 127 Hours, ரியான் ரெய்னால்ட்ஸ் நடித்த Buried இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இந்தப் படங்களில்கூட, ஒரு சில நிமிடங்கள் வேறு பாத்திரங்கள் ஊடாடியிருக்கின்றன. ஆனால் ஒத்த செருப்பை முழுவதுமாகத் தோளில் தாங்கியிருப்பது பார்த்தீபன் மட்டுமே!

படத்தில் ஒரு இடத்தில் பார்த்தீபன் சொல்வார். 'தலையணையில பஞ்சை வச்சி அடைச்சாத்தான் தூங்க முடியும். தங்கத்த வச்சு அடைச்சா எப்படி தூங்க முடியும்?'

இதுதான் படத்தின் ஒன் லைன், நீதி எல்லாம்!

ஒரே மனிதர். கிட்டத்தட்ட ஒன்றே முக்கால் மணி நேரம். இந்த மோனோ ஆக்டிங் போரடித்திருக்க வேண்டும். ஆனால் பின்னி எடுத்திருக்கிறார் மனுஷன். நடிப்பில் விஸ்வரூபம் எடுத்திருக்கிறார்!

அமைதி, ஆச்சர்யம், கோபம், வெறுப்பு, அருவருப்பு, ஆனந்தம், வீரம், நகைச்சுவை, கருணை என நடிப்பில் நவரசங்களையும் கொண்டுவருகிறார்.

ஒரு கொலைக் குற்றத்துக்காகப் பார்த்தீபனைப் போலீஸ் கஸ்ட்டடியில் விசாரிக்கிறார்கள். வெளியில் பார்த்தீபன் மகன். அபூர்வமான நோயின் பிடியில் இருப்பவன்.

பார்த்தீபன் சொல்லத் தொடங்குகிறார். பார்த்தீபனை மட்டும்தான் காமிரா காட்டுகிறது. பார்த்தீபன் குரலால், விழி அசைவால், உடல் மொழியால், அவரைச் சுற்றும் உலகின் இயக்கம் நம் கற்பனையில் விரிகிறது.

ஒரு கொலை. போலீஸ் பார்த்தீபனை விசாரிக்க, அவர் தான் செய்த மூன்று கொலைகளை, அதற்கான காரணங்களைப் படிப்படியாகக் கூறுகிறார்.

அது, அன்பும், பண ஆசையும், செல்வத்தின் மீதான மயக்கமும், துரோகமும், அப்பாவி ஒருவனைக் கொலை செய்யத் தூண்டவுமான கருணையே இல்லாத கதை.

சிறிது காலத்தில் சாகப்போகிற மகன் ஒருவனையும், அவனுக்காகவே வாழும் தகப்பன் ஒருவனையும் அனாதைகளாகத் தவிக்கவிட்ட அன்பின் வாசனை இல்லாத கதை.

இந்தக் கதையைக் கூறக்கூற நாம் ஒரு மனிதனை மட்டும்தான் பார்க்கிறோம். ஒரு வேளை மற்ற முகங்களைப் பார்த்து ஏன் நாம் வீணாகப் பதற்றமடைய வேண்டும் என நினைத்துத்தானோ என்னவோ பார்த்தீபன் அந்த முகங்களை நம் கற்பனையில் மட்டும் வனைகிறார்.

சிறிய உயிரிகள் மீது அன்பு, நோயுற்ற மகன் வாழும்வரை வாழ்ந்தால் போதும் என நினைக்கிற பாசம், வாழைப் பூ வடை சுடும் மனைவிக்கு வாழைப்பூ மடல்களாலேயே பொக்கே செய்து தரும் காதல், பணமிருந்தால் எந்தப் பாவத்தையும் செய்யலாமெனத் துணியும் மனிதர்களை எண்ணிக் கொதிக்கும் ரௌத்திரம் என்று பொங்கிப் பிரவகிக்கிறார் பார்த்தீபன்.

ஒரு துளியில் ஒரு கடலைக் காண்பதுபோல, ஒரு சொட்டு இனிப்பில் தேன் கூட்டையே அறிவதுபோல, ஒரு இலையில் ஒரு வனத்தைப் பார்ப்பதுபோல ஒரே ஒரு மனிதனின் கதை வழியாகப் பார்த்தீபன் நாம் வாழும் உலகின் அன்பை, கசப்பை, தியாகத்தை, நோயை, காதலை, துரோகத்தை, எளிமையை, வன்முறையை, கவித்துவத்தை, கருணையைக் காட்டிச் செல்கிறார்.

சற்று ஆழ்ந்து சிந்தித்தால் நாயகனின் தியாக பிம்பமும், நாயகியின் துரோக பிம்பமும் லேசாக உறுத்துகிறது. இவ்வளவு ஆற்றலையும், திறமையையும் 'கொலையும் செய்வாள் பத்தினி' என்கிற பழைய செய்தியைக் கூறவா பயன்படுத்துவது! எனத் தோன்றுகிறது.

மற்றபடி, குறையொன்றுமில்லை. விசாரணையிலிருந்து தன் புத்திசாலித்தனத்தால் வெளியே வருகிறார். மகனுடைய பட்டம் வானில் பறக்கிறது. அது நடுவானில் அறுந்துவிடக்கூடாது எனப் பதைக்கிறது மனம். அதுவே கலையின் வெற்றி. ஒத்த செருப்பு, பார்த்தீபன் கேரியரில் அவருக்கு அழியாத பெருமிதத்தைத் தேடித் தருகிற படம். ■

ஓவியங்கள் : அன்பழகன்

நான்கு சுவர்களுக்குள்
இருள் என் மீது படுத்திருக்கிறது
தன் அத்தனை பலத்தையும்
பிரயோகித்தபடி

எந்தத் திசையில் பார்த்தாலும்
இருளின் புன்னகை கருப்பாகவே இருக்கிறது
கைகளால் எவ்வளவுதான் தள்ளினாலும்
விலகாமலேயே நின்றிருக்கிறது

அன்பாகப் பேசி
என் பிரியங்கள் அனைத்தையும்
ஒருமுகப்படுத்தி
ஒரு முத்தமொன்றைக் கொடுத்து
இருளைக் கொஞ்சம் விலகச் சொன்னேன்
அது அப்படியே கொஞ்சம் கூட விலகாமல்
என் மீது படுத்திருக்கிறது

நகங்களால் கீறிக் கால்களால் உதைத்துக்
கைகளால் இருளின் கன்னங்களில்
பலம் கொண்ட மட்டும் அறைந்து அறைந்து
விலகச் சொன்னேன்
அத்தனை அடிகளையும் வாங்கிக்கொண்டு
கொஞ்சம்கூட அழாமல் விலகாமல்
அப்படியே படுத்திருக்கிறது

இருட்டின் கரங்கள்
மென்மையாக இருந்தாலும்
அவ்வளவு உறுதியாக இருக்கின்றன
அவற்றை உடைக்கவே முடியவில்லை
அடித்து உதைத்ததில்
எனக்குத்தான் கைகால் வலிக்கிறது

இருட்டின் மௌனம்
ஏன் இத்தனை கனமானதாக
இருக்கிறதெனத் தெரியவில்லை
அது இருட்டைக் காட்டிலும்
பெருங்கனமாயிருக்கிறது
இருட்டின் மௌனம் என்
சொற்களனைத்தையும்
பிடுங்கித் தின்றுவிட்டு
அமைதியாக உட்கார்ந்திருக்கிறது

மேற்குப்புற சன்னலில் ஓர் ஓட்டை இருக்கிறது
எங்கிருந்தேனும்–
நிலவிலிருந்தோ நட்சத்திரத்திலிருந்தோ
சூரியனிலிருந்தோ
ஓர் ஒற்றைத் துளி வெளிச்சம்
இந்த இருட்டினைப் பொசுக்க
எனக்குத் துணையென வரலாம்

அதுவரை இந்த இருட்டு
அதனிஷ்டப்படி ஆடட்டும்

– சௌவி

### மாறாத மாற்றம்

முன்புபோல் இல்லை
இப்பொழுது முற்றிலுமாக
மாறிவிட்டது எங்கள் வீட்டின்
சமையலறை

சிமெண்ட் தரைத்தளத்தைப்
பெயர்த்தெடுத்து டைல்ஸ்
கற்களைப் பதித்துவிட்டோம்

வெகு நாட்களாகக் கரிப்பிடித்துக்
கிடந்த சுவருக்கு
ஏற்ற வண்ணப்பூச்சும்
செய்தாயிற்று



ஓவியங்கள் : அன்பழகன்

எந்நேரமும் புகைந்து
கனன்றுகொண்டிருக்கும்
விறகடுப்பிற்கு மாற்றாகக்
கேஸ் சிலிண்டரும் வந்துவிட்டது

ஆட்டுக்கல் அமர்ந்திருந்த
மூலை இடத்தையும்
புதிதாக வந்த கிரைண்டர்
ஆக்கிரமித்துக்கொண்டது

எவர்சில்வர் பாத்திரங்களெல்லாம்
சீன ரக பீங்கான்
கோப்பைகளாகவும்
தட்டுகளுமாக உருமாறிவிட்டன

இப்படியே ஒன்றிற்குப் பதிலாக
மற்றொன்று வந்துவிட்ட
அந்தச் சமையலறையில்

எந்நேரமும் ஓய்வின்றி
உழைத்துக்கொண்டிருக்கும்
அம்மாவிற்கு மாற்றாக எந்த
ஒரு பொருளும் இன்று வரை
வந்ததாகவே தெரியவில்லை.

– **வெ.தமிழ்க்கனல்**



உடைத்தெறிந்த குச்சி
மீண்டும் அதே மரத்தில்
காக்கையின் கூடாய்

••

தும்பியின் சிறகுகள்
விரிந்ததும் சிறைபட்டுப்போனது
இயற்கை

••

புல்லில் பனித்துளி
தொட்டுப்பார்க்கிறாள் சிறுமி
தன் மூக்குத்தியை

••

பணத்தின் மதிப்பு
நன்றாகவே தெரிகிறது
தெய்வ தரிசனம்

••

கணித பாடம்
கூட்டியபடியே பெருக்கிப் பார்க்கிறாள்
வேலைக்காரச் சிறுமி

••

கடந்து செல்லும்போதெல்லாம்
என்னைப் பார்க்கத் தவறுவதேயில்லை
நிலைக்கண்ணாடி

••

மனிதனின் நம்பிக்கை
சிறை வைக்கப்படுகிறது
ஜோதிடக் கிளிக்கூடு.

– **ஜீவா** ■

• பிரசாந்த் வே
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்

# காட்டுப்பள்ளி



**கா**ற்றில் அசைந்தாடும் மரங்களின் ஓசை, காடெங்கும் கேட்டது. காய்ந்த இலைகளை இழுத்துப்போட்டு, காற்று சரசரத்தபடி போனது. வானம் கருத்து இருண்டு வரத் துவங்கியது. வெளிச்சம் குறைவாக இருந்தது. அடர்ந்த வனத்திற்குள் மரங்களுக்கும், மலைகளுக்கும் இடையே தடம் சென்றது. அந்த மலை கிராமத்திற்குச் சாலை வசதியில்லை. காலை, மாலை என இருவேளை மட்டுமே எட்டிப் பார்க்கும் பேருந்தும், ஆறேழு கிலோமீட்டருக்கு முன்புள்ள ஆலமரமேட்டில் நின்றுவிடும். அங்கிருந்து கால்தடத்தில் காட்டிற்குள் நடந்து செல்லவேண்டும். கரடுமுரடான காட்டுப் பாதையில் எப்போதும் கிடக்கும் யானைச் சாணங்களும், அவ்வப்போது தென்படும் சிறுத்தை, காட்டுமாட்டின் கால் தடங்களும் பயத்தைக் கூட்டும். அடிக்கடி பாம்புகள் தடத்தில் இருந்து புதருக்குள் ஊர்ந்து செல்லும். இடையிடையே இரண்டு காட்டாற்றுப் பள்ளங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியிருக்கும்.

“கூ... கூ...” எனக் குயில் மரத்தின் மீதிருந்து கத்திக்கொண்டிருந்தது. ஒற்றையடி பாதையில் ஜெயராஜ் நடந்துகொண்டிருந்தார். கையில் கருப்பு நிற பேக் இருந்தது. மெலிந்த ஒல்லியான மாநிறத் தேகம். நடுத்தர உயரம். கிளின் சேவ் செய்த முகம். வெள்ளை நிற முழுக்கைச் சட்டையை அரைக்கைக்கு மடித்துவிட்டிருந்தார். சட்டைப்பையில் ஒரு பேனா, இடதுகையில் வாட்ச் இருந்தன. வெகு தொலைவிற்கு முன்னால் இரண்டு பெண்கள் தலையில் கட்டைப்பைகளைச் சுமந்து சென்றனர். பின்னால் பேச்சுச் சத்தம் கேட்டு, ஜெயராஜ் திரும்பிப் பார்த்தார். பள்ளிச் சீருடையோடு சடையன், அவனது அப்பாவோடு நடந்து வந்தான்.

சடையன் நான்காம் வகுப்பு மாணவன். சுருட்டை முடியோடு அப்பாவின் இடுப்பு உயரத்திற்கு இருந்தான். சடையனது அப்பாவின் நீல நிறக் கோடு போட்ட சட்டை லுங்கிக்கு வெளியே வந்திருந்தது. மடித்துக் கட்டப்பட்ட லுங்கி காக்கி நிற டவுசர் தெரியும்படி மேலே ஏறியிருந்தது. சடையன் ஒரு சைக்கிளைத் தள்ளிக்கொண்டு வந்தான். புதிதாக வாங்கிய சைக்கிள் என்பதற்கு அடையாளமாக, பிளாஸ்டிக் கவர்கள் பிரிக்கப்படாமல் இருந்தன.

“சார்.. வணக்கமுங்க.”

“வணக்கம்.”

“என்ன சடையா, ஸ்கூலுக்கு வரீலியா?”

“வூட்டுக்குப் போயி பேக் எடுத்திட்டு வந்துருவேன் சார்.”

“எங்க போயிட்டு வரீங்க?”

“டவுனுக்கு சைக்கிள் வாங்க நேத்து போனோம், ராத்திரி இருட்டுனனால மேட்டுல மல்லி வீட்டுல தங்கிட்டோம்,” எனச் சடையனின் அப்பா சொன்னார்.

“ம்ம்ம்.. எதும் வேலைக்கீது போகவா?”

“எனக்கில்ல சார், பையனுக்குத்தான்.”

“இங்க ஓட்ட எடம் எங்கிருக்கு?”

“காட்டுமேட்டுல எங்க ஓட்ட முடியும் சார்? ஆலமரமேட்டுக்குப் போனாத்தான் ஓட்ட முடியும்.”

“அப்புறம் எதுக்கு?”

“மவன் ஆசப்படுறான் சார்.”

அந்தப் பதில் ஆச்சரியமாகவும், அர்த்தம் மிகுந்ததாகவும் இருந்தது. பேசிக்கொண்டே மூவரும் நடந்தனர். எதிரே ஒரு ஆண் கையில் குடையோடு நடந்து வந்தான். அவனது கழுத்தில் காவி நிற வேட்டியைத் தொட்டில் போலக் கட்டியிருந்தான். அதனை இடதுகையால் பிடித்தபடி நடந்து வந்தான். அருகே வரவர அத்தொட்டிலில் ஒரு குழந்தை இருப்பது தெரிந்தது. காட்டுப்பாதையில் நடக்கும்போது, முட்கள் குழந்தையின் உடலைக் கிழிக்காமல் இருக்க இப்படி தொட்டில் கட்டிச் செல்வது வழக்கம். பின்னால் அவனது மனைவி நடந்து வந்தாள்.

நடந்து வந்தவன் ஜெயராஜிடம், “பள்ளத்துப் பக்கத்துல ராசா கூட்டமா இருக்கும் போல, சத்தம் கேட்டுச்சு.. பாத்துப் போங்க,” என்றான்.

“சரிசரி, எங்க கிளம்பீட்டிங்க?”

“ஆஸ்பத்திரிக்கு சார்.”

“உடம்புக்கு எதும் முடியலயா?”

“இல்ல, புள்ளக்குத் தடுப்பூசி போடப் போறோம்.”

“பாக்கலாம்” என அவர்களுக்கு விடை கொடுத்து, மூவரும் நடக்கத் துவங்கினர்.

காட்டுப்பள்ளி ஒரு துவக்கப்பள்ளி. செவ்வக வடிவக் காங்கிரீட் கட்டிடம். அதில் இரண்டு வகுப்பறைகள். பூசப்பட்டிருந்த மஞ்சள் பெயிண்டினை, வெயிலும், மழையும் உதிர்த்திருந்தன. மஞ்சள் நிறத்தில் கருப்பேறி யிருந்தது. அப்பள்ளியில் உள்ள முப்பத்தியொரு மாணவர்களுக்கு ஜெயராஜ் மட்டுமே ஒரே ஆசிரியர். ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு வரை ஒரு வகுப்பிலும், நான்கு, ஐந்து வகுப்பினர் ஒரு வகுப்பிலும் அமர வைக்கப்படுவர். கட்டிடத்திற்கு முன்பிருந்த கொஞ்ச இடம் மட்டுமே சமமாக இருந்தது. சுற்றிலும் மேடும் பள்ளமுமாக இருந்தது. பள்ளியைச் சுற்றிலும் இருந்த மலைகள் பசுமை போர்த்தியிருந்தன. மழைத் தூறல் மெல்ல விழுந்துகொண்டிருந்தது.

“டிங்.. டிங்.. டிங்”

பள்ளிக்கூடத்தில் மணியடிக்கப்பட்டது. இரட்டைச் சடை மாணவி ஒருத்தி மணியடித் தாள். மலைகளில் இருந்து புத்தகப்பையுடன் இறங்கி நடந்து வந்துகொண்டிருந்த மாணவர்கள், மணிச்சத்தம் கேட்டதும் பள்ளியை நோக்கி ஓடினர். பள்ளிக்கட்டிடத்தின் முன்பு வகுப்புவாரியாக மாணவர்கள், மாணவிகள் தனித்தனியாக நின்றனர். “நீராருங் கடலுடுத்த...” தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. தாமதமாக ஓடி வந்த மாணவர்கள் தோளில் இருந்த பைகளைக் கழட்டி வைத்து, வரிசையில் நின்றனர். எப்போதும் மணியடிக்கும் முன்பு வந்துவிடும் ஆசிரியர் ஜெயராஜ் வரவில்லை. பிரேயர் முடியும்போது, சடையன் வேகமாக ஓடி வந்து வரிசையில் நின்றான். ஜெயராஜ் இல்லாதது அதிர்ச்சியாய் இருந்தது. “நம்ம கூடத்தானே வந்தார், இன்னும் ஏன் வரல?” என முணுமுணுத்தான். பிரேயர் முடிந்து மாணவர்கள் வகுப்புகளுக்குச் சென்றனர்.

“சார், சேம்புக்கரை பிரிவு வர கூடத்தான் வந்தார், இந்நேரம் ஸ்கூலுக்கு வந்திருக்கணுமே?” என்ற சடையன் யோசித்தபடி, “ராசா சத்தம் கேட்டதா வேற சொன்னாங்க” என மற்ற மாணவர்களிடம் சொன்னான்.

ஏதோ பிரச்சனை ஏற்பட்டிருக்கும் என்பதை உணர்ந்து சடையனும், மற்ற மாணவர்களும் பதியை நோக்கி ஓடினார்கள்.

• • •

“யான, புலிக்குப் பாடம் எடுக்கறதுதான் மிச்சம்.”

“காட்டுப்பயலுகளுக்கு மனுசன் பாடம் எடுப்பானா?... ச்ச்சை.”

மாணவர்கள் அமைதியில் உறைந்திருந்தனர். ஆசிரியர் ராமன் கத்திக்கொண்டிருந்தான். சொட்டைத் தலை, நெற்றி நிறைய திருநீறு, கையில் பிரம்போடு இருந்தான். மாணவர்களை வரிசையாக நிற்கவைத்துப் பிரம்பால் அடித்தான். அதற்கு, பேசிக்கொண்டே இருக்கிறார்கள், வேடிக்கை பார்க்கிறார்கள், சரியாகப் படிக்கவில்லை.. எனக் காரணங்கள் சொன்னாலும், ‘வேண்டாத பொண்டாட்டி கைப்பட்டாலும் குத்தம், கால்பட்டாலும் குத்தம்’ என்ற கதையாய் ராமனுக்குக் காட்டுப்பள்ளியைப் பிடிக்காததே காரணம்.

காட்டுப்பள்ளியின் முதல் ஆசிரியர் ராமன். ஒரு வாரம் வந்திருந்தான். ஒருநாள் வரும் வழியில் யானையின் பிளிறல் கேட்டுப் பயந்து ஓடிப்போனான். மருத்துவ விடுப்பு எடுத்து,

இடமாறுதலுக்கு முயன்றான். அமைச்சரைப் பிடித்து இடமாறுதல் பெற்றான். அடுத்து வந்தவர்களும் அதே முயற்சியில் இறங்கினர். இடமாறுதல் கைக்கூடும்வரை பள்ளிக்கு வருவதாகக் கணக்கு காட்டி, பள்ளிக்கே வராமல் சம்பளத்தைப் பெற்றனர். முதலிரண்டு ஆண்டு களில் நான்கு ஆசிரியர்கள் மாறிவிட்டார்கள். பள்ளிக்கு வந்து ஒருவரும் பாடம் நடத்திய தில்லை. மாணவர்களைக் கணக்கெடுக்கவும், பாடப்புத்தகங்களைக் கொடுக்கவும் ஓரிருமுறை தலைகாட்டியதுண்டு.

மாணவர்கள் ஆசிரியருக்காக நம்பிக்கையோடு காத்திருந்தனர். அந்த நம்பிக்கை பருவமழையாகப் பொய்த்துப்போனது. மாணவர்களுக்குப் பள்ளி வரும் ஆர்வமும் குறைந்திருந்தது. ஓடியாடி விளையாடுவதற்கான இடமாகப் பள்ளி மாறிப் போனது. விறகு பொறுக்கவும், தேனெடுக்கவும், ஆடு, மாடு மேய்க்கவும் பெற்றோர்களுக்குத் துணையாக மாணவர்கள் செல்லத் துவங்கினர்.

காட்டுப்பள்ளிக்கு ஆசிரியராக ஜெயராஜ் வந்தார். எத்தனை நாட்கள் வருவாரோ என்ற கேள்விதான் அநேகம் பேரின் மனதில் இருந்தது. துவக்கத்தில் மாணவர்களும், பதிக்காரர்களும் மற்றவர்களைப் போலத்தான் இருப்பார் என நினைத்தார்கள்.

வீராதான் ஜெயராஜ் உடன் பழகிய முதல் பதிக்காரன். அந்தக் காட்டுக் குழந்தைகளுக்காகச் சிரமம் பாராமல், இவ்வளவு தூரம் வந்ததே ஜெயராஜைப் பிடித்துப்போகக் காரணமாக இருந்தது. காலையில் பேருந்தில் இருந்து இறங்கி வரும் ஆசிரியரை அழைத்து வரச் செல்வான். மாலையிலும் அவரோடு துணையாகச் செல்வான். “நானே போயிக்கிறேன்'' என ஜெயராஜ் சொன்னாலும், துணையாக வருவான்.

அதற்கு, “நா தா படிக்கல, பதி கொழந்தக படிக்கோணும்'' என்பது வீராவின் பதிலாக இருக்கும்.

ஜெயராஜ்க்கு இருவேளை வீரா வீட்டிலிருந்து கருப்புத் தேநீர் வரும். ஒருமுறை “இங்க யாரும் ஏன் டீயில் பாலூற்றதில்ல?” என ஜெயராஜ் கேட்டார்.

“குட்டிக்கு நீவிர கொடுப்பீரு?” எனச் சட்டென வீரா பதிலளித்தான். அது முகத்தில் அறைந்தது போல இருந்தது. அதன்பின் ஜெயராஜ் தேநீரில் பாலினைச் சேர்ப்பதே இல்லை.



பள்ளிக்கு வந்து செல்வது ஜெயராஜ்க்குச் சிரமமாக இருந்தாலும், நாளாகநாளாகப் பழகிப்போனது. பள்ளிக்கு வருவதைக் காட்டிலும், காடுகளில் சுற்றவே மாணவர்கள் விரும்பினர். தேடிச்சென்றால் முகம் காட்டத் தயங்கி, பேச மறுத்து ஓடி ஒளிந்தனர். தேடிப் பிடித்துப் பேசிப் பள்ளிக்கு இழுத்து வந்தார். வகுப்பறை எப்போதும் கலகலப்பாக இருக்கும். புத்தகங்களுக்கு வேலை இருக்காது. பிரம்பு களுக்கும் வேலை இல்லை. சின்னச்சின்ன விஷயங்களுக்கும் ஜெயராஜிடம் பாராட்டு கொட்டும். விடுப்பு எடுக்காமல் வந்தால் பேனா, பென்சில் போன்றன கிடைக்கும். மாணவர் களுக்குப் பிடித்தமான ஆசிரியரானார், ஜெயராஜ். பள்ளியிலும், பதியிலும் சில வசதிகள் எட்டிப் பார்க்கக் காரணமாகவும் இருந்தார்.

மலைகளைத் தாண்டி மேகங்கள் ஓடுவது போலக் காலங்கள் ஓடின. காட்டுப்பள்ளிக்கு ஜெயராஜ் வந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது.

• • •

கருமேகங்கள் வானில் கூடு கட்டின. சடசடவென மழைத்துளிகள் விழுந்தன. காட்டிற்குள் நடக்க நடக்க ஜெயராஜின் உடல் நடுங்கியது. சடையனும், அவனது அப்பாவும் சேம்புக்கரை பிரிவில் மலையில் மேலேறிய பாதையில் பிரிந்து சென்றிருந்தனர். வழக்கமாக வந்து அழைத்துச் செல்லும் வீரா காய்ச்சலில் படுத்துள்ளதால், எதிரே வர வாய்ப்பில்லை. மழை வேகமெடுப்பதற்குள், பள்ளிக்குச் சென்றுவிட வேண்டுமென ஓட்டமும், நடையுமாகச் சென்றார்.

காட்டாற்றுப் பள்ளத்தில் தண்ணீர் சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது. பேண்டினை மடித்து விட்டபடி, தண்ணீருக்குள் கால் வைத்தார். “படார்” என மரக்கிளை உடைபடும் சத்தம் கேட்டது. பள்ளத்தின் மேலிருந்து சத்தம்

வந்தது. சத்தம் வந்த பக்கம் பார்வையைத் திருப்பினார். கருத்த உருவம் அசைவது தெரிந்தது. தண்ணீருக்குள் அசைவற்று நின்ற அவரின் முகமெங்கும் வியர்த்துக் கொட்டியது. எச்சியினைக் கூட்டி விழுங்கினார். இதயம் படபடப்பாகத் துடித்தது. "யான கூட்டமாக இருக்குனு சொன்னாங்கலே, பின்னால ஏதாச்சும் இருக்குமோ?'' என்ற நினைப்பு, திரும்பிச் செல்வதைத் தடுத்தது. வாயின் மேல் விரலை வைத்தபடி அமைதியாக அப்படியே நின்றார். மூச்சுக்காற்றின் சூடு விரலை உரசிச் சென்றது.

மரக்கிளை உடைபட்ட இடத்திற்குப் பார்வையைத் திருப்பினார். மரங்கள் அசைவற்று நின்றன. ஆசுவாசப்படுத்திக்கொண்டு மெல்லச் சத்தம் வராதபடி அடியெடுத்து வைத்தார். கால் தண்ணீரில் பட்டதும் "சளீர்" என்றது. யானையின் பிளிறல் கேட்டது. இதயத் துடிப்பு அதிகமானது. கண்களை மூடித் திறந்தார். குட்டியோடு தாய் யானை பள்ளத்தின் மேட்டில் இருந்து இறங்கிக்கொண்டிருந்தது. திக்.. திக்.. என இதயம் வேகமாகத் துடித்தது. அடி வயிறு பகீரென்றது. யானைக்கூட்டத்திடம் சிக்கி விட்டதாக நினைத்தார். மனம் பதைபதைத்தது. உடல் நடுக்கம் அதிகமானது. எந்தப் பக்கம் செல்வதெனச் செய்வதறியாது திகைத்தார்.

பாக்கெட்டில் இருந்த செல்போன் அலறியது. பெண் யானையின் வால் முறுக்கேறியது. யானையைப் பார்த்தபடி பதட்டத்தோடு போனை அணைக்க முயன்றார். தும்பிக்கையைத் தூக்கிப் பிளிறியபடி, சில அடிதூரம் முன்னே வேகமாக வந்தது. அப்போது பின்னால் இருந்தும் யானைப் பிளிறல் கேட்டது. போனைத் தூக்கி எறிந்துவிட்டுப் பள்ளத்திற்குள் இடதுபுறம் தலைதெறிக்க ஓடினார். தண்ணீருக்குள் இருந்த பாறையில் பட்டு போன் "டமார்" என உடைந்து தெறித்தது. மேட்டில் ஏறும்போது, கால் இடறிக் கீழே உருண்டு விழுந்தார். அப்போதுதான் பெண்யானை குட்டியை விட்டுவிட்டு, இவரை நோக்கி வரவில்லை என்பது தெரிந்தது. அப்படியே படுத்துக் கிடந்தவரின் கண்களில், ஆண் யானை ஒன்று வந்து குட்டியோடு இருந்த பெண் யானையை அழைத்துச் செல்வது தெரிந்தது.

வெகுநேரம் அப்படியே பயத்தில் உறைந்து படுத்துக் கிடந்தார். துணிகள் கிழிந்து இரத்தக் காயங்களோடு உடலெல்லாம் சேறு அப்பியிருந்தது. பதிக்காரர்கள் வந்து சேர்ந்தார்கள். ஒருவன் கைகொடுத்துத் தூக்கிவிட்டான். ஜெயராஜால் காலினை முன்வைத்து நடக்க முடியவில்லை. வலியால் துடிதுடித்தார். எலும்பு முறிந்திருந்தது. தொட்டில் கட்டி மேட்டிற்குத் தூக்கிச் சென்றனர். சடையனின் அப்பா சைக்கிளில் அழைத்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்தார். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமெனவும், மூன்று மாதங்கள் ஓய்வு எடுக்க வேண்டுமெனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

காட்டுப்பள்ளி மாணவர்கள் கவலையில் உறைந்தனர்.

"ஜெயராசு சார் இனி எப்படியும் காட்டுப்பள்ளிக்கு வரமாட்டார். ஜெயராச தவிர வேற யாரு வந்து பாடம் எடுப்பாங்க? பசங்க படிப்பு அவ்வளவுதான்" எனப் பதிக்காரர்கள் பேசிக்கொண்டனர்.

ஒரு வார காலம் ஓடிப்போனது. ஒரு இளைஞன் வந்தான். பள்ளியில் சில மாணவர்களே இருந்தனர்.

"என் பேர் சுதாகர், ஜெயராஜ் சார் வர வரை உங்களுக்கு நான்தான் டீச்சர்" எனத் தன்னை அறிமுகப்படுத்திய அவன், "நாளீல இருந்து எல்லாரையும் வரச் சொல்லுங்க" என்றான். மாணவர்கள் ஒவ்வொருவராக எழுந்து தங்கள் பெயர்களைச் சொல்லினர்.

வீராவும், பதிக்காரர்களும் வந்து சுதாகரிடம் பேசினர். அப்போது, தன்னால் குழந்தைகள் படிப்பு கெடக்கூடாது என எண்ணிய ஜெயராஜ், டிகிரி படித்த தன்னைப் பாடம் எடுக்க அனுப்பி வைத்ததோடு, அதற்காக ஒரு தொகையைச் சம்பளமாகக் கொடுக்க உள்ளார் என்பதைச் சொன்னான்.

வீராவும், பதிக்காரர்களும் மருத்துவமனைக்கு ஜெயராஜைப் பார்க்கச் சென்றனர். அறுவை சிகிச்சை முடிந்து காலில் கட்டுடன் படுத்துக் கொண்டிருந்தார். ஜெயராஜைப் பார்த்ததும் வீராவின் கண்களில் கண்ணீர் முட்டியது.

ஜெயராஜின் வலது கையினைத் தூக்கி அழுத்திப் பிடித்தபடி, "காட்டுப்பயலுக எங்களுக்காக நீங்க ஏன் சார் சிரமப்படுறீங்க?" என வீரா கேட்டான்.

மெல்லிய புன்னகை மட்டுமே ஜெயராஜின் பதிலாக இருந்தது. ■

• கவிஞர் வசந்தகுமரன்

# உவப்பத் தலைகூடி..



கவி தர்பாரில் கவிஞர்கள்



ஓவியர் சாங்வி அமைத்த நினைவுச் சிற்பம்

பஞ்சாப் மாநிலத்தின் சாகித்ய அகாதமி பொறுப்பாளர் திரு.மன்மோகன்சிங் அவர்களிடமிருந்து 2019 நவம்பர் 8 முதல் 11வரை பஞ்சாப் மாநில அரசால் கொண்டாடப்படவிருக்கும் தேவ் குருநானக் மகானின் 550வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாகிய கவி தர்பாரில் கலந்துகொண்டு கவிதைகள் வாசிக்கவேண்டுமென்று எனக்கும் கவிஞரும் கலை விமர்சகருமான இந்திரனுக்கும் மின்னஞ்சல் வந்தது. உடனே ஒப்புதல் தெரிவித்தோம். நான் ஏற்கனவே சாகித்ய அகாதமியும் நாகாலாந்து பல்கலைக்கழகமும் இணைந்து கோஹிமா மலை நகரில் நடத்திய கவிதை வாசிப்பு நிகழ்ச்சியில் சிறப்பாகக் கவிதைகள் வாசித்ததை நினைவு கூர்ந்து இவ்விழாவுக்கும் என்னை அழைத்திருப்பதை அறிந்துகொண்டேன். மொழி பெயர்ப்புக்காகச் சாகித்ய அகாதமி விருதினை ஏற்கனவே பெற்ற இந்திரன் இந்நிகழ்ச்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டதில் வியப்பேதுமில்லை. மனமொத்த இரண்டு படைப்பாளிகளை ஒருசேர அழைத்த இச்செயல் இயல்பாக நடந்ததுதான் ஆச்சரியம்.

தேவ் குருநானக் குறித்து அறிந்திருந்தபோதும் அவரது சித்தாந்தங்களை முழுமையாக அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்தது பஞ்சாப் மாநில அரசின் இந்த அழைப்பு. கடவுள் உருவமற்றவன் / அரூபமான கடவுளை அடைவதற்கான வெவ்வேறு வழிகளே மதங்கள் / பசிப்பிணி போக்குதலே மிகச் சிறந்த ஆன்மீகத் தொண்டு / என்று போதித்தவர் தேவ் குருநானக். மற்ற மதங்களிலிருந்து சற்றே வேறுபட்ட மதம் சீக்கிய மதம். கிரந்த வழிபாடு சீக்கியர்களுடையது.

தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா உன்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா என்று பாடிய பாரதிக்கும், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளலாருக்கும் முன்னத்தி ஏர் தேவ் குருநானக் மகான்தான் என்பதை உணர்ந்து சிலிர்த்தேன்.

நானும் இந்திரனும் 2019 நவம்பர் 8 அன்று அதிகாலை ஹைதராபாத் வழியாக அமிர்தசரஸ் நோக்கிப் பயணப்பட்டோம். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய தேசியக் கால்பந்தாட்ட வீரர் தீபக் தாங்கிரி எங்களோடு பயணம் செய்தார். நாங்களிருவரும் கவிஞர்கள் என்பதையும், பஞ்சாப் மாநில அரசின் விருந்தினர் என்பதையும், தேவ் குருநானக் பற்றிக் கவிதை வாசிக்க வந்துள்ளோம் என்பதையும் அறிந்து அமிர்தசரஸ் விமான நிலையத்திற்கு வெளியே எங்களை வரவேற்கக் காத்திருந்த அரசு அதிகாரி ஜிதேந்தர்சிங் வசம் எங்களைச் சிரமமின்றிச் சேர்ப்பித்த பிறகே விடைபெற்றார்.

அமிர்தசரஸ் நகரின் மையப்பகுதியில் அமைந்த ஒரு நட்சத்திர விடுதியில் நாட்டின் பல்வேறு மொழிக்கவிஞர்கள் யாவரும் தங்கவைக்கப்பட்டோம். பங்கேற்க வந்திருந்த கவிஞர்களில் ஹிந்தி மொழி தெரியாத ஒரே கவிஞன் நானாகத்தானிருந்தேன். இந்திரன் ஹிந்தி மொழியறிந்தவர் என்பதால் மற்ற மொழிக் கவிஞர்களோடு சகஜமாக அவர் உரையாடினார். இந்திரனின் பரந்துபட்ட அறிவின்பால் ஈடுபாடுகொண்ட அவருக்கு ஏற்கனவே அறிமுகமான படைப்பாளிகள் பலர் வந்திருந்தனர். அவர்களுடனான அறிமுகம் மற்றும் இந்திரன் வழியான உரையாடல் எனக்குப் புதிய தரிசனங்களைத் திறந்துவைத்தது என்றே கூறவேண்டும்.

அமிர்தசரஸ் நகரிலிருந்து சுமார் 45 கி.மீ. தொலைவில் இந்தியா பாகிஸ்தான் எல்லையிலிருந்த தேரா பாபா நானக் என்னுமிடத்தில்தான் ஐந்து நாள் விழா நிகழ்ச்சிகளும் அரங்கேறின. இங்கு ஆயிரக்கணக்கான வெண்ணிறக் கூடாரங்களை அமைத்து ஒரு கூடார நகரத்தை Tent city என்ற பெயரில் அமைத்திருந்தனர். அந்தக் கூடாரங்களில் தங்கவைத்து ஒரு மாறுபட்ட சூழலைப் படைப்பாளி



தீபக் தாங்கிரி – தேசியக் கால்பந்தாட்ட வீரருடன் கவிஞர்கள்



ஓவியர் சித்தார்த் உடன்

கவிஞர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த டெண்ட் சிட்டி



களுக்கு ஏற்படுத்தி இன்ப அதிர்ச்சி தரவேண்டு மென்பது விழாக்குழுவினரின் விருப்பம். அந்த விருப்பத்திற்கு இடையூறாக அமைந்துவிட்டது முதல் நாள் பெய்த மழை. எனவே படைப்பாளிகள் அனைவரும் அமிர்தசரஸ் நகரில் தங்கவைக்கப்பட்டு மகிழுந்தின்மூலமாகக் கூடார நகருக்கு அழைத்து வரப்பட்டனர்.

சராசரித் தோற்றமுடைய கிமானி யு முலானி என்ற சிந்திக் கவிஞர் வலிய வந்து எங்களிடம் அறிமுகப்படுத்திக்கொண்டார். சற்றே ஊனமுற்ற கால்களுடன் தடியூன்றியவாறே எங்களோடு பொற்கோயிலுக்கும் ஜாலியன்வாலாபாக் நினை விடத்துக்கும் வந்தார். ஏன் இந்தி கற்றுக்கொள்ள வில்லை என்று என்னிடமும், ஹிந்தி தெரிந்தும் ஆங்கிலத்தில் ஏன் பேசுகிறீர்கள் என்று இந்திரனிடமும் கேள்விகள் கேட்டு எங்களை நச்சரித்துக்கொண்டே வந்தார். 70 வயதுதானே ஆகிறது அதற்குள் ஏன் தடியூன்றி நடக்கிறீர்கள் என்ற என் குறும்புக் கேள்வியை ஒரு புன்னகையோடு கடந்து போனார். அவர் எல்லோராலும் தனித்து விடப்பட்டார். பிறகுதான் அவர் சாகித்ய அகாதமியின் மூன்று முக்கிய விருதுகள் பெற்ற இந்தியாவின் மிக முக்கியமான கவிஞர்களில் ஒருவர் என்று அறிந்து வியந்தோம். சென்னை திரும்பிய பிறகு முலானியின் ஆங்கில மொழியாக்கக் கவிதைகளை வாசித்துப்பார்த்த இந்திரன், அபாரமான கவிதைகளை முலானி எழுதியிருப்பதாகவும், அவற்றைத் தமிழில் மொழிபெயர்க்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சிகள் அனைத்தும் சுமார் நானூறு பேர் வரை அமரக்கூடிய வண்ணமய உட்பகுதிகளைக் கொண்ட நான்கு கூடாரங்களுக்குள் நடந்தன.

முதல்கூடாரத்தில் ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. இந்தியாவின் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர் தேவ் குருநானக் தத்துவங்களைப் பறைசாற்றும் ஓவியங்களை வரைந்துகொண்டிருந்தனர். வளரத் துடிக்கும் இளம் ஓவியர்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறையாகத் திகழ்ந்தது அந்த அரங்கு. குறிப்பிடத்தகுந்த இரண்டு ஓவியர்களான சித்தார்த் மற்றும் சாங்வி ஆகியோரின் படைப்புகள் அனைவரையும் கவர்ந்தன. இரு ஓவியர்களையும் சந்தித்துப் பேசினோம்.

ஓவியர் சித்தார்த் ஒரு சீக்கியர். புத்த மதக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுப் புத்த பிட்சானார். புத்தரின் தியான ஓவியங்களை நவீனக் கலை உத்திகளோடு வரைந்து புகழ் பெற்றார். தனது 42வது வயதில் திருமணம் செய்துகொண்டு துறவறம் துறந்தார். இரண்டாமவர் திரு. சாங்வி. இவர்தான் பிரதமர் மோடி அவர்களால் திறந்துவைக்கப்பட்ட இந்தியாவையும் பாகிஸ்தானையும் இணைக்கும் கர்தாப்பூர் சாலையின் இந்திய முகப்பில் தேவ் குருநானக் உபதேசித்த ஆன்மீக முத்திரையை நினைவுத்தூண் உச்சியில் சிற்பமாக வடிவமைத்தவர். இவர் இந்திரனின் நெருங்கிய நண்பரென்பதால் மகிழுந்துவில் எங்களை ஏற்றி ராணுவக் கெடுபிடிகளைத் தளர்த்திக் கர்தாப்பூர் சாலையை எங்களுக்குச் சுற்றிக் காண்பித்தார்.

இரண்டாவது கூடாரத்தில் 24 மணி நேரமும் உணவும், மசாலாத் தேநீரும் தயாரித்து அனைவருக்கும் வழங்கினர். தேவ் குருநானக் உபதேசித்தபடி பசியோடு யாரும் வாழக்கூடாது என்கிற உயரிய சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் சீக்கியர்கள் காட்டும் இம் முனைப்பைப் பொற்கோயிலிலும் காண முடிந்தது.

வசதி படைத்தவனும் ஏழையும், முதலாளியும் தொழிலாளியும் ஒரே வரிசையில் நின்று தட்டேந்தி உணவைப் பெற்று ஒரே வரிசையில் அமர்ந்து உண்ணும் அரிய காட்சியை நான் இங்குதான் கண்டேன். சமத்துவம் என்பதும் குருநானக்கின் சித்தாந்தம். அந்தச் சித்தாந்தத்தைச் செயல்படுத்தும் காரியம் பஞ்சாப் மக்களின் அனிச்சையான நடைமுறையாகவே உள்ளது.

மூன்றாவது கூடாரத்தில் கருத்தரங்குகள் நடந்தன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த அறிஞர்களும் சான்றோர்களும் உரையாற்றினர். இடையிடையே பஞ்சாப் மக்களின் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறின.





கோ.வசந்த குமரன் – கட்டுரையாளர்



வசந்த குமரன் கவிதை வாசிப்பு

நான்காவது கூடாரத்தில் சுமார் நானூறு பேர் கண்டும் கேட்டும் ரசிக்க நான்கு நாட்கள் ‘கவி தர்பார்’ நடைபெற்றது. இந்தியாவின் சலித்தெடுக்கப் பட்ட சுமார் 48 கவிஞர்கள் நாளொன்றுக்கு 12 கவிஞர்கள் வீதம் கவிதைகள் வாசித்தனர். பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த பல கவிஞர்களுக்கும் தத்தம் கவிதைகளை அரங்கேற்ற இடையிடையே வாய்ப்புகள் வழங்கப்பட்டன. சாகித்ய அகாதமி விருது பெற்ற கவிஞர்களும் இதில் அடக்கம். வெவ்வேறு மாநிலக் கலாச்சாரப் பெருமைகளையும், தேவ் குருநானக் பற்றிய வெவ்வேறு மொழிக் கவிஞர்களின் பார்வைகளையும் ‘கவி தர்பார்’ பறைசாற்றியது. கவியரங்கத் தலைமை தவிர்க்கப் பட்டது. மேடையில் கவியரங்கத் தொகுப்பாளர் வீற்றிருப்பார். ஒரு கவிஞர் அழைக்கப்பட்டுக் கவிதை வாசித்துக்கொண்டிருக்கும்பொழுதே தொகுப்பாளர் அருகே அடுத்த கவிஞர் காத்திருப்பார். இந்தப் புதிய நடைமுறை மேடையில் நெரிசலைத் தவிர்த்த தோடல்லாமல் புதுமையாகவும் இருந்தது. நேரத்தின் அருமை கருதிக் கச்சிதமாகக் கவிதைகளை அமைத்திருந்த நேர்த்தி இயல்பாக அனைவராலும் கடைபிடிக்கப்பட்டது. கவி தர்பார் நிகழ்ச்சிக்கு முன்பு ஒவ்வொரு முறையும் புல்லாங்குழல் இசைக் கச்சேரியும் நிகழ்த்தப்பட்டது.

8.11.19 அன்று மாலை 6 மணிக்கு நான் கவிதை வாசிக்கும் அமர்வு. ஐந்தாவது நபராக அழைக்கப்பட்ட நான் ‘ஞானமும் ஞானியும்’ என்ற தலைப்பில் தேவ் குருநானக் பற்றி ஒரு கவிதையையும், ‘முரண்’ என்ற தலைப்பில் அங்கதம் ததும்பிய ஒரு கவிதையையும் வாசித்துக் கைதட்டல்கள் பெற்றேன். மேற்கண்ட எனது இரண்டு கவிதைகளும் முறையே ‘Wise and Wisdom’ என்றும் ‘Paradox’ என்றும் மதுரைப் பேராசிரியர் வின்சென்ட் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டவை. அந்த ஆங்கில மொழிபெயர்ப்பைத்தான் அரங்கில் நான் வாசித்தேன். இந்தியாவின் கடைக்கோடி கிராமத்திலிருந்து வந்து இப்பேரரங்கில் கவிதை வாசித்த வசந்தகுமாரனைப் பாராட்டுகிறேன் என்று என்னைப் பெருமிதம் கொள்ளவைத்தார் கவியரங்கத் தொகுப்பாளர்.

நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக 11.11.19 அன்று நடைபெற்ற கவியரங்கில் இந்திரன் சிறப்பான கவிதையொன்றை வாசித்தார். நல்ல வரவேற்பினைப் பெற்ற சில கவிதைகளில் இந்திரன் கவிதையும் ஒன்று. என்னுடைய கவிதையில் மகாகவி பாரதி பற்றியும் வள்ளலார் பற்றியும் குறிப்பிட்டேன். இப்பகுதியை வாசிக்கும்பொழுது பார்வையாளர்களிடம் வியப்புக்குறி தென்பட்டது. பாரதியின் மேதைமையையும் வள்ளலாரின் ஞானத்தையும் இந்தியா முழுதும் முன்னெடுத்துச் செல்ல வேண்டியதின் அவசியத்தை இந்த அரங்கு எனக்கு உணர்த்தியது. அரங்குக்கு அப்பால் உரையாடியதில் தமிழின் தொன்மை குறித்த வியப்பு அனைவரிடமும் சந்தேகமற இருந்ததை உணர்ந்துகொள்ள முடிந்தது.

சாகித்ய அகாதமியின் துணைத் தலைவர் மாதவ் கௌசிக், சாகித்ய அகாதமியின் பஞ்சாப் மாநிலப் பொறுப்பாளர் மன்மோகன்சிங், சிந்திக் கவிஞர் கிமான் யு முலானி, ஹிந்தி மொழிக் கவிஞர் ராஜ்கிஷோர் ராஜன் ஆகியோர் கவி தர்பார் நிகழ்ச்சிக்குச் சிறப்பான கவிதைகளைத் தந்தனர்.

தேவ் குருநானக் 550வது பிறந்த நாள் விழாவின் ஒரு அங்கமாகவே, பாகிஸ்தானில் உள்ள தேவ் குருநானக் பிறந்த ஊரான கர்தாப்பூர் செல்லும் சாலையைப் பாரதப் பிரதமர் மாண்புமிகு மோடி நாட்டுக்கு அர்ப்பணித்தார். பாகிஸ்தான் சென்று கர்தாப்பூரிலுள்ள தேவ் குருநானக் பிறந்த பூமியைத் தரிசிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டோம். இதற்கான நடைமுறைகளைப் பூர்த்தி செய்து அனுமதி பெற குறைந்தபட்சம் மூன்று நாட்களாவது ஆகும் என்று கலைஞர் சாங்வி தெரிவித்தார். மறுநாள் காலை சென்னை திரும்பவேண்டிய கட்டாயம் எங்கள் ஆசைக்குத் தடைபோட்டுவிட்டது.

இந்த ஐந்து நாட்கள் விழாவினையும் பஞ்சாப் மாநிலக் கூட்டுறவுத்துறை மிகச் சிறப்பாக நடத்தியது. விழாவின் இறுதி நாளன்று பஞ்சாப் மாநிலக் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு சுக்ஜிந்தர் சிங் ரந்தவா கவிஞர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார். ■

தொடர் 1

• கவிஜி

# உலக சினிமா ஒரு பார்வை






பரந்த மைதானத்தில் விரிந்த கண்களில் ஊரே திரைக்குள் வண்ண வண்ணமாய்ச் சுழன்றுகொண்டிருக்கிறது.

நான் திரும்பி "றர்ர்ர்ர்ர்" என்று சத்தம் வந்துகொண்டிருக்கும் திசையில் ஒற்றைக்காலில் நொண்டிக்கொண்டு நிற்கும் ஒருவகையான ரோபோ பூதம் போல இருக்கும் ப்ரொஜெக்டரைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தலைகீழாய் ஓடிக்கொண்டிருக்கிறது சினிமா. தலைக்குள் நேராய் விழுந்துகொண்டிருக்கிறது சினிமா பத்தின கேள்விகளும் தேடல்களும். திரையில் நேராகக் காட்சி விழ ப்ரொஜெக்டரில் தலைகீழாய்த்தான் விழும். அதுதான் அறிவியல். பின்னாளில் புரிந்தது.

உள்ளூர் சினிமாவுக்குள் நுழைந்த கேள்வி மெல்ல மெல்லத் தன்னை வீரியமாக்கிக் கொண்டு கற்பனைகளின் சிறகை விரித்துப் பறக்கத் தொடங்கியது. அது உலக சினிமாவைக் கண்டுபிடித்து ரசித்தது. உலக சினிமாவை ரசிக்க வைக்க உரமாகியிருந்த உள்ளூர் சினிமாவை ஒருபோதும் குறைத்து மதிப்பிடுவதில்லை இத்தொடரின் நோக்கம். அதேநேரம் உலக சினிமாவின் பார்வை மூலமாக நான் கற்றுணர்ந்த மிகப்பெரிய உலகத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதுதான் இதன் எண்ணம். உலக சினிமாக்கள்தான் எனக்கு இலக்கியங்களை அறிமுகம் செய்தன. இலக்கியமும் சினிமாவும் இரு பக்கம் கொண்ட வாழ்வின் நாணயம். அது கை கோர்த்துக்கொண்டு ஒரு வகையில் நம்மைச் செம்மைப்படுத்தும் என்றால் மிகை இல்லை. சினிமாவைப் பார்த்துக் கெட்டுப்போகிறார்கள் என்று சொல்வதெல்லாம் நம்புவதற்கில்லை.

நம்புங்கள். சினிமாதான் என்னைப் போன்ற இலக்கியவாதிகளை உருவாக்கியது. சினிமாவின் மூலமாகவே உலக அரசியல் எனக்குப் பிடிபட்டது. உலகத்தின் வாழ்வுமுறை எனக்குத் தென்பட்டது. உலக நாகரிக வளர்ச்சியை உற்று நோக்க முடிந்தது. வெவ்வேறு நாடு கலாச்சாரங் களைக் கைக்கொள்ள முடிந்தது. சினிமாக்கள் என்பன மானுட வாழ்வின் அங்கம். அது சமகாலத்தைப் பதிவு செய்துகொண்டே செல்லும் உலக ஆவணம்.

சினிமாவை அனைவரும் திரையில் பார்க்க, திரைக்கு எப்படி இந்தச் சினிமா வருகிறது என்று ப்ரொஜெக்டரை நோக்கித் திரும்பிய யோசனையே என்னைச் சினிமாவைத் தேடி ஓட வைத்தது. சினிமா அழகியலின் மாயம். அது இனம் புரியாத இன்பத்தை வாரி வாரி வழங்குகிறது. சினிமாவைக் காண்பதே சுகம் என்றால், அந்தச் சினிமாவைக் காட்டும் ப்ரொஜெக்டரை இயக்குவது என்பது......!

நினைக்க நினைக்கத் ததும்பும் சந்தோசத்தில் நினைக்காத காட்சிகளின் கூடு சிறகை அடிக்கத் தொடங்கியது அற்புதம். கூடு விட்டு வானம் சமைக்கவைத்த என் தேடலைத் தெவிட்டாத

சக்கரவாகப் பறவையாகக் கணப் பொழுதில் அது மாற்றியது. வானம் கொத்தத் துவங்கிய துருவ நட்சத்திரமாய் என் விழியெங்கும் சிதறிக் கிடந்த கற்பனைகளின் நீட்சியின் முதல் துளி அது. எடுக்க எடுக்க தீராத அமுத சுரபியாய் எனக்குள் அமிழப் போகும் சினிமாவைக் கொத்தித் தின்னும் கூர் அலகின் அழகியலோடு ஆனந்தப் பரவச முக்தி நிலையின் ஒரு படிக்குத் தலைவணங்கி நின்ற தருணம் அது.

என்னைப்போலவே ஒரு சிறுவன் "இத்தாலி" க்குள் இருக்கிறான். அங்கிருந்துதான் அந்தப் படம் உருவாகிறது. நாம் காணத் தொடங்கு கிறோம்.

"கிசிபோ டோர்னடோரா" இயக்கிய "சினிமா பாரடைசோ" என்ற சினிமா "டோடோ" என்ற ஒரு சிறுவனின் சினிமா சார்ந்த வாழ்வை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட படம்.

இத்தாலியில் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னான நாட்கள்..

சினிமா விரும்பிகள் மாலையானால் அந்த ஊரில் இருக்கும் "சினிமா பாரடைசோ" என்ற தியேட்டருக்குச் சென்று கொண்டாட்டத்துடன் சினிமா பார்ப்பது வழக்கம். எல்லாச் சிறுவர்களும் பள்ளி விட்டால் வீடு வருகையில் "டோடோ" மட்டும் நேராகச் சினிமாத் தியேட்டருக்குச் சென்றுவிடுகிறான். அவனுக்கும் சினிமா ஆப்ரேட்டர் ஆல்பெரடோவுக்கும் வயது வித்தியாசமில்லாத நட்பு. அவர் அவனைத் தன் பிள்ளையைப் போலத்தான் பார்க்கிறார். கணவன் ராணுவத்தில் மரித்துப்போன வெறுப்போடு வாழ்வை நகர்த்தும் டோடோவின் தாய்க்குத் தன் பிள்ளையின் இந்தச் சினிமாப் பைத்தியம் பயங்கர கோபத்தை வரவழைக்கிறது. ஆல்பெரடோவைக் கூடத் திட்டித் தீர்க்கிறார்.

அவனின் விளையாட்டாகவே மாறுகிறது சினிமா. ஆல்பெரடோ அவனுக்கு சினிமா ஓட்டக் கற்றுக் கொடுக்கிறார். அவனும் அவ்வப்போது பிலிம் ரோல் மாற்றுவதற்கு உதவுகிறான். அவர் சற்று நேரம் ஓய்வெடுக்க அவனே படம் ஓட்டுகிறான். ஒருநாள் தியேட்டரில் ஏற்படும் ஒரு தீ விபத்தில் ஆல்பெரடோவைக் காப்பாற்று கிறான் டோடோ. ஆனால் அவருக்குக் கண் பார்வை போய்விடுகிறது. படம் ஓடாமல் ஊரே கொந்தளிக்கிறது. அவருக்குப் பிறகு அந்த ஊரிலேயே அந்த சினிமா மெசினை ஓட்டத் தெரிந்தவன் அவன் மட்டுமே. எல்லாரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவன் அந்த வேலையைச் செய்ய ஆரம்பிக்கிறான். நாட்கள் நகர அவனும் வளர்கிறான். பள்ளிப் படிப்பு முடியும் நேரமும் நெருங்குகிறது. சினிமாக்களின் வாயிலாக அவனுக்கு இந்த உலகைக் காட்டுகிறார் ஆல்பெரடோ. நிறைய நல்ல சினிமா பார்க்கும் வாய்ப்பு கிடைக்கிறது. சினிமா மூலமாக இந்த வாழ்வின் சந்து பொந்துகளில் எல்லாம் சிறகடிக்கிறான். அவன் கனவுகளும் வாழ்வின் லட்சியங்களும் சுருண்டிருக்கும் சினிமா பிலிம் ரோலில் இருந்து விடுபடுவதாகவே நம்புகிறான்.

எல்லாவற்றையும் மறக்கடித்துவிட்ட சினிமா அவனை எப்போதும் ஒரு படச்சுருளாகப் புத்தம்புதிதாகவே நினைக்கத் தூண்டுகிறது. அந்தச் சிறுவன் சினிமாவில் தனக்கான சந்தோஷங்களைத் தேடுகிறான்.

ஆல்பெரடோ கொடுத்த கேமராவில் படங்கள் எடுத்துப் பழகுகிறான். அவன் வாழ்வை அந்தக் கேமராவின் வழியே வாழப் பழகுகிறான். இதற்கிடையில் அவனுக்கு ஒரு காதலி கூட கிடைக்கிறாள். பிறகு கட்டாய ராணுவ சேவைக்குச் சென்றுவிட்டு ஊர் திரும்புகையில்.. காதலியும் இல்லாமல் போகிறாள். டோடோ மனம் உடைந்து திரிகிறான். அவனின் தடுமாற்றத்தைக் கண்ட ஆல்பெரடோ "இந்த ஊர் உன் வாழ்க்கைக்கு உதவாது. உன் தேடல் இங்கு பூர்த்தியாகாது. நீ இனி இங்க இருக்காதே.. போ.. எங்காவது போ.. பெருசா சாதிச்சிட்டு வா.." என்று அவர் கூறுகிறார். வேறு வழியில்லாமல் வருத்தத்தோடு அவன் ஊரை விட்டுச் செல்கிறான்.

சினிமாவின் சூட்சுமம் புரிந்த பின்னாளில் அவன் ஒரு புகழ்பெற்ற சினிமா இயக்குனராக மாறுகிறான். அவன் படங்களை ஊரில் இருந்தவாறே ரசிக்கிறார் ஆல்பெரடோ. நாட்கள் நகர்கின்றன.

பிறகு ஒரு நாள் தனக்கு சினிமா கற்றுக் கொடுத்த.. தனக்கு வாழ்வைக் காட்டிக் கொடுத்த... அன்பான குரு.. நண்பன்.. அப்பா ஸ்தானம் உள்ள ஒரு மனிதன்.. ஆல்பெரடோ இறந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அமைதிக்குள் போகிறான். படத்தின் முதல் காட்சி இதுதான். அன்றிரவு



தன் மனைவியிடம் சொல்வதுதான் இத்தனை நேரம் நாம் பார்த்தது.

மறுநாள் காலை சொந்த ஊர் திரும்புகிறான் டோடோ. அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்கிறான். கூட்டத்தோடு கூட்டமாக நடக்கிறான். ஊரே மாறி இருக்கிறது. தியேட்டர் இருந்த இடத்தில் மால்கள் இருக்கின்றன. மனிதர்களின் ரசனை கூட மாறி இருக்கிறது. சினிமாவுக்குக் கூடிய கூட்டங்களைக் காண முடியவில்லை. சினிமா அவரவர் விருப்பமாக மாறி இருக்கிறது. யாருக்கும் அவனைப் பெரிதாக அடையாளம் தெரியவில்லை. அவன் அமைதியாக அந்த இறுதி ஊர்வலத்தில் நடக்கிறான்.

அந்த அமைதி நமக்குள் ஏற்படுத்தும் படபடப்பு சொற்களில் அடங்காதவை.

அன்று இரவு ஆல்பெரடோ தனக்காகப் பாதுகாத்து வைத்த பரிசுப் பொருட்களில் படச் சுருள் ஒன்றும் இருப்பதைக் காண்கிறான். அதைப் ப்ரொஜெக்டரில் போட்டு இரவின் தனிமையில்... இருளின் உண்மையில்.. பார்க்கத் தொடங்குகிறான். அதில் சிறு வயதில் தனக்கு மறைக்கப்பட்ட முத்தக் காட்சிகளின் தொகுப்பு இருக்கிறது. விரிந்த கண்களில் கண்ணீரை விழுங்கிக்கொண்டே பார்க்கிறான். வாழ்வின் மறுபக்கம் விடுபடுவதாகவே நம்புகிறான்.

"இனி இந்த ஊருக்கு வராதே.. போ.. எங்கயாது போய்ப் பொழைச்சுக்கோ" என்று அவர் கூறிய வார்த்தைகள்... இன்னும் காதுக்குள் நெருடலாய் மலருகின்றன. பிரிந்துபோன பதின் பருவத்துக் காதலியும் நினைவுக்கு வருகிறாள். நினைவுகளின் நீட்சிக்குள் படச் சுருள் தன்னைச் சுருட்டிக் கொண்டே இருப்பதாக அவன் மனக் கண்கள் மூடுகிறான். தனக்குச் சினிமா ஓட்டக் கற்றுக்கொடுத்த ஆல்பெரடோ.. திரைக் குள்ளிருந்து அவனுள் இருக்கும் சிறுவனைப் பார்ப்பதாக முடிகிறது படம்.

சினிமா வெறும் பொழுது போக்கல்ல. அதன் வழியே நம் சக வாழ்வைப் பார்க்க முடிகிறது. நம் கடந்த காலங்களை அசை போட முடிகிறது.

நம்மை நாமே கொண்டாடும் மாயக் கண்ணாடி அது. நம்மைத் தாலாட்டும் மடி அது. ஆத்மார்த்தமான அனுபவங்களை சினிமா தன்னுள் வைத்திருக்கிறது. சினிமா நமக்கு எல்லாமாய் இருக்கிறது. நிழலின் தொடர்ச்சியில் நிஜங்கள் நிஜமாய் முகமூடி கழற்றுகிறது. ஒவ்வொரு கால கட்டத்தையும் தனக்குள் பதிந்துகொள்கிறது. அந்தந்தக் காலத்தின் கலாசாரம்.. நாகரீகம்.. பண்பாடு.. வாழ்வியல்.. வன்கொடுமை.. சண்டை.. போர் என எல்லாவற்றையும் கிரகித்துக்கொண்டே ஒரு மலைப் பாம்பாய்.... காலத்தை நீட்டித்துக் கொண்டே இருக்கிறது சினிமா. கண்டவர் போனபின்னும் அது காணப்படாத விழிகளைத் தேடிக்கொண்டே இருக்கிறது.

இப்படி படம் நெடுக ஒரு சிறுவனின் குறும்பும் அப்பாவைப் பிரிந்த ஏக்கமும் அவன் கண்களில் நிழலாடிக்கொண்டே இருக்கின்றன. அவனின் தீரா சினிமாத் தாகம் அவனைப் பின்னாளில் மிகச் சிறந்த ஒரு இயக்குனராக மாற்றி விடுகிறது. எது வருமோ அதை நோக்கிச் செல்கையில் நம் இலட்சியங்கள் நிரூபிக்கப்படுகின்றன.

ஏனோ வைரமுத்துவின் வைர வரிகள் நினைவுக்கு வருகின்றன.

'எவனுக்கு என்ன பலம் எவனுக்கு என்ன குணம்

கண்டதில்லை ஒருவருமே

ஒரு விதைக்குள்ள அடைபட்ட ஆலமரம் கண் விழிக்கும்

அது வரை பொறு மனமே'.

**படம் : சினிமா பாரடைசோ**

**மொழி : இத்தாலி**

**இயக்குனர் : கிசிபோ டோர்னடோரா**

**வருடம் : 1988.**

– உலக சினிமா தொடரும். ■

• கவி : சூர்யநிலா
சித்திரம் : அன்பழகன்

இந்நாளின்
ஏகாந்த வெளியில்
நின்றபடி
தவிக்கிறேன்..
கொடூரத்தின் பற்களில்
மாட்டிக்கொள்கிறது
எனது காலம்..
ஆயாசமாகயிருக்கிறது
நாட்களைத் தள்ள..
வலுவற்ற கைகளை
வைத்து எங்ஙனம்
நகர்த்துவது?
அன்பின் பரிமாணங்கள்
ஒவ்வொன்றும்
கரையத் தொடங்குகிறது..
நாட்களின் கரையில்
நின்று தவிக்கிறேன்..
ஓர் நாள் தள்ளிப் போகலாம்
இப் பெரும் நதியில்..
இந்த முரட்டு நாட்கள்
அப்போது
கைத்தட்டிக்
கெக்கலிக்கலாம்..! ■



• முனைவர் பூங்குழலி

# சிந்தையில் உரம் பெற்ற தமிழ்



கற்றது தமிழ் என்று எழுதத் தொடங்கும்போதே மனதுக்குள் மல்லிகை மணம் பரவுகிறது. காலச் சக்கரம் சுழன்று, சிறகு முளைத்த சிங்கப்பெண்ணாய் நான் திரிந்த நாட்களைக் கண்முன்னே வண்ணத் தூறலாகத் தூவுகிறது.

தமிழ்க்கடவுள் முருகனின் படைவீடொன்றாம் பழனியம்பதியில் மார்க்சியத் தம்பதிக்கு இரண்டாம் மகளாகப் பிறந்தேன். தந்தை எழுத்தாளரென்பதால் உதிரத்திலேயே தமிழுணர்வு உரமேற்றியது. ஆனால் கணினிப் படிப்பும் அறிவியற்கல்வியுமே சோறுபோடும் என நம்பிய என் பெற்றோர் இயற்பியல் இளங்கலைப் பட்டப் படிப்பில் என்னைச் சேர்த்தனர். புனித சிலுவைக் கல்லூரியில் இயற்பியல் கற்றேன். ஆனால் உள்ளம் தமிழுக்காக ஏங்கித் துடித்தது.

கால்வனோமீட்டர் பற்றி வகுப்பறையில் பாடம் நடக்கும்போது என் விரல்கள் சாளரத்திற்கு வெளியே மரமேறிக்கொண்டிருக்கும் அணிலைக் கண்டு கவிதை எழுதிக்கொண்டிருக்கும். பெற்றோர் - ஆசிரியர் சந்திப்புகளில் நான்

குறைவாய் வாங்கிய மதிப்பெண் குறித்துப் பேராசிரியர்கள் என் தந்தையிடம் பேசிக்கொண்டிருக்கும்போதே பேச்சுப்போட்டி களில் நான் வாங்கிய பரிசுகளை நிறைவாய் மேசையில் அடுக்கிக்கொண்டிருப்பேன் நான். குட்டுவார்கள் என நினைத்தேன். ஆனால் சிரித்துக்கொண்டே தட்டிக்கொடுத்தார்கள் என் இயற்பியல் பேராசிரியர்கள். தமிழ் மன்றங்கள் மூலம் என்னை உயிர்ப்போடு வைத்திருந்தது புனித சிலுவைக் கல்லூரி. கட்டுண்டவாறே இளங்கலைப் படிப்பை முடித்தேன்.

முதுகலையிலாவது தமிழ் படிக்க பெற்றோரிடம் அனுமதி கேட்டேன். அனுமதி ஆலயமணியாக ஒலித்தது. முதுகலைச் சேர்க்கைக்கான நேர்காணலுக்கு அழைப்பு வந்தது பிஷப் ஹீபர் கல்லூரியிலிருந்து. இயற்பியல் படித்திருக்கிறீர்கள் எம்.சி.ஏ., எம்.எஸ்.சி., என்று இடம் கிடைத்தால் இடையிலேயே சென்று விடுவீர்கள். இந்த இடம் வேறு யாருக்கேனும் உதவட்டுமென்று சொல்லி இடம்தர மறுத்தார்கள். பின் வேறெங்கும் வேறெதற்கும் நான் விண்ணப்பிக்கவில்லை. தமிழைக் கற்கவே அருந்தவமிருக்கிறேனெனச் சூடமடித்துச் சத்தியம் செய்யாத குறையாகச் சொன்னபிறகுதான் முதுகலைத் தமிழ்த்துறையில் கால்வைக்கவே விட்டார்கள்.

நான் சிறகு முளைத்த சிங்கப்பெண்ணாக உணரத் தொடங்கியது இங்கிருந்துதான். சங்க இலக்கியச் சோலையில் உலவத் தொடங்கிய எனக்கு ஒவ்வொரு செய்யுளும் தருநிழலாக இருந்தது. பூட்டிவைத்த கவிக்காதல் தாவியோடிச் சிரித்தது. உலகிலேயே மகிழ்வானவள் நான் தானெனத் தமிழன்னையின் கரம்பிடித்து நடைபழகினேன். பேச்சுக்கலையில் தமிழக மெங்கும் பன்னூறு போட்டிகளில் பங்கெடுத்து வெற்றிபெற்றேன்.

தமிழ் இலக்கிய உலகில் பல படைப்புகளை ஆக்கிவரும் தந்தையின்வழி சிந்தையில் தமிழ்



உரம்பெற்றிருந்ததால் முனைவர் பட்டம் வரை தமிழ்த்துறையிலேயே பெறும் பேறுபெற்றேன். தந்தை வாழ்வியலைச் சொல்லித்தரும் ஆசிரியராகவும், ஆசிரியர் தந்தைபோன்று அன்புகொண்டும் அமைவது சிலருக்கே வாய்க்கும். அத்தகைய சிலருள் அடியேனுக்கு முதலிடத்தைக் கொடுத்தது இயற்கை. முனைவர் திரு. மன்சூர் ஐயாவின் வழிகாட்டலில் முனைவர் பட்டம் பெற்றேன்.

எழுத்தில் மாந்தநேயச் சிந்தனை நோக்கியும் பெண்களின் உயர்வு நோக்கியும், ‘மானுடம் பேசும் கவிதைகள்’, ‘எரிமலைப் பூக்கள்’ என இரு தலைப்புகளில் விருதுகள் பெற்ற ஆய்வு நூல்களைப் படைக்கும் வாய்ப்புப்பெற்றேன். திருச்சி புனிதசிலுவை மகளிர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினேன். பின் பழனியில் வணிகவியல் துறைப் பேராசிரியராகத் தாயார் பணியாற்றிய அதே பழனியாண்டவர் மகளிர் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினேன்.

பொதிகைத் தொலைக்காட்சியில் வாய்ப்பு கிட்டவே சென்னைக்கு வந்து செய்தி வழங்குநராக வாழ்வமைத்துக்கொண்டேன். இமைக்குமுன் இத்துறையிலும் பதினைந்தாண்டுகளை நெருங்கி யிருப்பதைக் கண்டு மலைத்து நிற்கிறேன்.

அழகிய தமிழ்ப்பெயரை எனக்கு என் தந்தை சூட்டியதாலோ என்னவோ நிமிர்ந்த நன்னடை யோடே பயணிக்கிறேன். என் பிள்ளைகளுக்கும் தமிழிலேயே பெயர்சூட்டி.. தென்றலாகவும் கன்னலாகவும் தமிழோடே வாழ்கிறேன். ■

• ர.கிருஷ்ணவேணி
ஆய்வியல் நிறைஞர் (தமிழ்), கருவூர் – 4.

# நீதிநூல் வரிசையில் ஒரு புதினம்



பழமை என்று சொன்னாலே இக்கால கட்டத்தில் வெகுவான வரவேற்பு நிகழ்கின்றது. பழமையின் நாகரீகத்தை வெளிக்கொணரும் உணவும், உடையும், பண்பாட்டுக்கூறுகளும் தற்போது ஆங்காங்கே தலையெடுத்து வருகின்றன. இவ்வரிசையில் தொல் சிறப்பு வாய்ந்த நூல்கள் தங்களின் தரத்தின் வாயிலாகவும், பதிப்புகள் வழியாகவும், தரமான உரைகள் ஊடாகவும் தம் புகழை நிலை நாட்டுகின்றன. இலக்கியம் என்பது ஒரு மனிதனைப் பண்படுத்துவதற்காக அமைந்த கூட்டமைப்பு. ஒரு மொழியின் ஏற்றம் அதன் இலக்கிய வளத்தினாலும், இலக்கியச் செழிப் பாலும் உணரப்படும். முதன்மை என்ற சொல்லிற்கு மாபெரும் சக்தியுண்டு. முதல் வெற்றி, தோல்வி, வகுப்பு, மதிப்பெண், தவழ்ந்த நிலை, காதல், முத்தம் போன்றவற்றை நம்மால் மறக்கடிக்க இயலாத முதன்மையும், அதனால் உண்டாகும் சிறப்பும் பேரின்பமும் இலக்கிய வரிசைக்கும் உண்டு.

தமிழின் முதற் புதினம் மாயூரம் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பட்ட "பிரதாப முதலியார் சரித்திரம்''. இப்புதினத்தின் முக்கியக் கதாபாத்திரமாக விளங்குபவர்கள் பிரதாப முதலியும், ஞானாம்பாளும். கருத்து வளமும், வசீகரமான நடையும் கொண்ட இப்புதினமானது நகைச்சுவைப் பகுதிகளைப் பெரும்பாலான இடங்களில் முதன்மையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேவாமிர்தமாக இந்நாவலில் இடம்பெறும் அறக்கருத்துக்கள் அமைந்துள்ளன.

நாலடியாரைப் போல நீதிக்கருத்துக்களையும் ஆசிரியர் தம் பாத்திரத்தின் வாயிலாகப் படைத்தளித்திருப்பதால் இதனை நீதிநூல்களின் வரிசையில் அமைத்தும் கூறலாம். பழைமைக்குத் தகுதியான தரத்தை இந்நாவலில் அமைக்கப் பட்டுள்ள இனிய கருத்துக்கள் மீண்டும் மீண்டும் நிரூபணம் செய்கின்றன. நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட நாவலாதலால் இதன் எழுத்து நடையினை நம்மால் உணர முடியாதோ என்று அச்சப்படத் தேவையில்லை. படிக்கத் துவங்கும் முதல் பக்கமே நாவலின் மீதான உற்சாகத்தையும், மனநிறைவையும் உண்டாக்குகின்றது.

பிரதாப முதலி என்னும் பெயரைத் தாங்கிய சிறுவன் செய்யும் குறும்புத்தனமான செயல்கள் நகைச்சுவை உணர்வையும், தவறைத் திருத்திக் கொள்ள வேண்டிய போதனைகளையும் கற்றுக் கொடுக்கின்றன. நாவலின் இடைப்பகுதி சுவாரசியமாகவும், எதிர்பார்த்திட முடியாத திடுக்கிடும் இரகசியங்களையும் அள்ளித் தெளித்துக் கற்போரின் வேகத்தை மேலும் கூட்டுகின்றது. பாத்திரங்களின் வாயிலாகவும், ஆசிரியரின் பேச்சு நடை வாயிலாகவும் கதைக்களம் நகர்வு பெறுகின்றது.

ஒரு பானை சோற்றில் ஒரு கல் விழுந்துவிடின் அதனைப் பொறுக்கி எடுத்துவிட்டு அவ்வுணவை உண்பது போல இப்புதினத்தின் சிறுசிறு களைகளால் இதனைத் தவிர்த்திடாமல் இந்நாவலின் பேரின்பச் சுவையை அடைய வேண்டும். மனதினைக் களவு செய்திடும் இப்புதினத்தின் சுவையை நாம் படித்து நம் மனதாரக் களவு செய்வதினால் மகிழ்வான வாழ்வையும், நியாயப் போக்கின் பாதையையும் அமைத்துக்கொள்ளும் பேற்றை இந்நாவல் கற்றுத்தரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ■

ஆய்வு

தொடர் - 2

• கடையநல்லூர் பென்சி

# கீழடி – தமிழின் தாய்மடி



கடந்த "தகவு" இதழில் அரிக்கமேடு (புதுச்சேரி), காவேரிப்பூம்பட்டினம் (பூம்புகார், நாகை மாவட்டம்), ஆதிச்சநல்லூர் (திருவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம்) மற்றும் கீழடி தொல்லியல் களத்தின் பொறியிலிருந்து அவை தமிழின் தாய்மடியானதையும் கண்டோம். தொடர்ந்து அகழ் ஆராய்வோம், ஆராய்ந்ததையும் அறியத் தயாராவோம்.

**அழகன்குளம் தொல்லியல் களம்:**

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது அழகன்குளம் கிராமம். கடற்கரையிலிருந்து (வங்காள விரிகுடா) மூன்று கிலோமீட்டர் தொலைவு. 1980களில் சிறிதளவில் நடைபெற்ற அகழ்வாய்வு இங்குத் தொல்லியல் எச்சங்களை உறுதிசெய்ய, 36 வருடங்களுக்குப் பிறகு 2016ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்றாம் தேதி முறையான அகழ்வாய்விற்குத் தமிழக அரசு உத்தரவிடுகிறது.

இனி, தமிழகத் தொல்லியல்துறை இயக்குநர் டாக்டர் பாஸ்கர் (The Director of Excavation Works):

“அழகன்குளம் தொல்லியல் களத்தில் முதலில் பத்தடி நீளம், பத்தடி அகலம், இருபதடி ஆழம் கொண்ட ஐந்து பள்ளங்கள் தோண்டப்பட்டன.

இந்த அகழாய்வில் கிமு 375க்கு முந்தைய, மத்தியத் தரைக்கடல் ஒட்டிய நாடுகளில் புழங்கப்பட்ட மண் ஓடுகள், மட்பாண்டங்களின் சில்லுகள் மற்றும் ஜாடித் துண்டுகள் கிடைத்துள்ளன. இவற்றை அப்போதைய ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.நடராஜன் அவர்களும் நேரடியாகப் பார்வையிட்டார்."

கிமு முதல் நூற்றாண்டுக் காலத்திய தமிழ் பிராமி எழுத்துக்களில் எழுதப்பட்ட சிவப்பு நிற ஓடுகள் கிடைத்துள்ளன. பிற தொல் பொருட்களான மணிகள், துளையிடப்பட்ட ஓடுகள், பல அளவுகளால் ஆன செங்கற்கள் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இங்குக் கிடைத்த நாணயங்களின் முன்புறத்தில் ரோமானிய மன்னரின் (Valentinian II Augustus of the Western Roman Empire) முகமும், பின்புறத்தில் ரோமானியர்களின் வெற்றிக்கான தேவதையின் (Victoria, the Roman goddess of victory) உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்நாணயங்களை, கிமு 392இல் ரோமப் பேரரசை (கிமு 392 - 375 முடிய) ஆண்ட இரண்டாம் வாலெண்டைன் வெளியிட்டிருக் கலாம் எனக் கருதப்படுகிறது. இதன் மூலம் பாண்டியர்களுக்கும், ரோமானியர்களுக்கும் இடையே நடந்த கடல் வணிகம் அறியப்படுகிறது.

சங்க காலத்திய அழகன்குளம் பகுதி, கிமு 300 முதல் கிபி 300 முடிய பாண்டியர்களின் வணிக நகரமாகவோ அல்லது துறைமுக நகரமாகவோ இருந்திருக்கலாம் எனத் தொல்லியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

மேலும் ஏழாவது சுற்றில் நடைபெற்ற அகழாய்வில், ரோமானியர்களுடனான வணிகம் மற்றும் ரோமானிய மற்றும் மத்தியத்தரைக்கடல் நாடுகளின் வணிகர்களின் வணிகக் குடியிருப்புகள் அழகன்குளத்தில் கண்டறியப்பட்டுள்ளன.

• • •

இந்த அழகன்குளத்திற்கு அருகேதான் அகநானூற்றில் இடம்பெற்றிருக்கும் ஊணூர், மருங்கூர்ப்பட்டினம் ஆகிய ஊர்கள் அமைந்துள்ளன. இவ்வாறாக, சங்க இலக்கியம் ஊணூர், மருங்கூர்ப்பட்டினம் நகரங்களை ஆவணப்படுத்திய வரலாறும் நம்மிடமுண்டு.

"அகநானூறு" தனது 227வது பாடலில்

(1) தலைவன் பிரிவின்கண் வேறுபட்ட தலைவியிடம் தோழி கூறியதுபோலவும் (2) தலைவன் பிரிவின்கண் வேறுபட்ட தோழியிடம் தலைவி கூறியதுபோலவும் அமைந்த பாடல்

#

**நுதல் பசந்தன்றே தோள் சாயினவே**
**திதலை அல்குல் வரியும் வாடின .....**

என்று தொடங்கும் "அகநானூறு" பாடல் (227),

#....

**பிடி மிதி வழுதுணைப் பெரும் பெயர்த் தழும்பன்**
**கடி மதில் வரைப்பின் ஊணூர் உம்பர்,**
**விழு நிதி துஞ்சும் வீறு பெறு திரு நகர்,**
**இருங் கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து,**
**எல் உமிழ் ஆவணத்து அன்ன,**
**கல்லென் கம்பலை செய்து அகன்றோரே**

#

என முடிகிறது (வரிகள் 17 - 22).

தழும்பன் ஆளும் ஊணூர் நகரைத் தாண்டிச் சென்றால் மருங்கூர்ப்பட்டினம் இருக்கும். தழும்பன் ஊணூர், மருங்கூர்ப்பட்டினம் ஆகியவற்றைக் கொண்ட நாட்டை ஆண்ட அரசன்.

விழு நிதி துஞ்சும் - great wealth resides,

வீறு பெறு திரு நகர் - prosperous rich/beautiful town,

இருங்கழிப் படப்பை - huge backwatersand groves,

மருங்கூர்ப்பட்டினத்து - in Marunkur City,

எல் உமிழ் ஆவணத்து அன்ன - like the light emitting shopping street

(ஆவணத்து - ஆவணம், அத்து சாரியை),

கல்லென் கம்பலை செய்து - causing great up-roar (கல்லென் - ஒலிக்குறிப்பு மொழி),

அகன்றோரே - the one who went,

ஏகாரம் - அசை நிலை, an expletive.



ONE OF THE finds, a bead necklace.

**A BEAD NECKLACE**



CARNELIAN BEADS FOUND at the site.

**CARNELIAN BEADS**

கடற்கரை உப்பங்கழி அருகே மிகப்பெரிய சொத்தாக, விளக்கு ஒளியால் பிரகாசிக்கும் செழிப்பான தெருக்களைக் கொண்ட மருங்கூர்ப் பட்டினத்திற்கு எனைப் பார்க்க எப்போது வருவாய் எனப் பொருளீட்டச் சென்ற தலைவனை எதிர்பார்த்துத் தலைவி ஏங்குவதாக அமைந்த பாடல்.

தொல்லியல் ஆய்வு முடிவுகளுக்கும் சங்க இலக்கியத்திற்கும் என்ன தொடர்பு எனக் கேட்பவர்களுக்கு விடையாக அமையட்டும்.. இந்த அழகன்குளம் தொல் ஆய்வு முடிவுகள்.

• • •

**பொருந்தல் அகழ்வாய்வு :**

பழனிக்கு அருகே தென்மேற்கில் அமைந்துள்ள ஊர் பொருந்தல். இது சங்க காலக் கவிஞர் பொருந்தில் இளங்கீரனார் வாழ்ந்த ஊராகக் கருதப்படுகிறது. சங்கநூல் தொகுப்பில் இவரது பாடல்கள் மூன்று உள்ளன. தம் பாடலில் புலவர் கபிலர் இறந்துபோன செய்தியையும் பதிவுசெய்துள்ளார். சங்க காலத்தில் பழனி மலை 'பொதினி' மலை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடையேழு வள்ளல்களான பாரி, காரி, ஓரி, பேகன், ஆய், அதிகமான், நள்ளி ஆகியோரில் பேகன் என்ற குறுநில மன்னனின் நிலப்பகுதிதான் இந்தப் பொருந்தல்.

தொல்லியல் அறிஞரான முனைவர் பேராசிரியர் கா.ராஜன் உலக அளவில் மதிக்கப்படும் தொல்லியல் அறிஞர்களில் ஒருவர். ஆழ்கடலுக்குக் கீழ் சென்று ஆய்வுகள் நடத்திய முதல் இந்தியத் தொல்லியல் வல்லுநர். இனி பேராசிரியர் கா. ராஜன்..

“பொருந்தல் அகழ்வாய்வை 2010 ஆம் ஆண்டில் செய்தோம். ஒரு கல்லறையைத் தோண்டும்போது வட்டமாக ஒரு தாங்கி (மட்பாண்டங்களை வைக்க ஸ்டாண்ட் போல் பயன்படும் மண் வளையம்) அந்தக் கல்லறையில் இருந்தது. அதற்கு 'வைரா' என்று பெயர். அதில் பெரிய ஜாடியில் 2 கிலோ அளவில் நெல்மணிகளை வைத்திருந்தார்கள். முதல் தடவையாகத் தமிழகத்தில் நெல் கிடைக்கிறது. எவ்வளவு வியப்பான விசயம். இந்த நெல்லை அறிவியல்பூர்வமாகக் காலக்கணிப்பு செய்தோம். தானியங்களைக் காலக்கணிப்பு செய்ய கார்பன் டேட்டிங்கை விட நவீன முறையான ஆக்ஸ்சிலேட்டர் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (Accelerator Mass Spectrometry - AMS) முறையில் செய்தபோது காலக்கணிப்பு கிமு 490ஆம் ஆண்டு என்று வந்தது. உலகத்திலேயே பீட்டா பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் அமெரிக்காவில்தான் உள்ளது. அங்கு அனுப்பியபோது இந்தக் காலக் கணிப்பு வந்தது. அது இன்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முந்தையது என வரவும் வியப்பில் ஆழ்ந்தோம்.

நெல் வகைகளில் மூன்று விதங்கள் இருக்கின்றன.

1. வேளாண்மை செய்து வளர்க்காமல் தானே விளையக்கூடிய காட்டு நெல்.

இதற்குப் புழுதி நெல் என்று பெயர்.

2. விதைத்து வளர்க்கிற விளைச்சல் நெல்.

3. நாற்று விட்டுப் பறித்து நடுகின்ற ரீ பிளான்டேஷன் நெல்.

நம்மிடமுள்ள நெல்மணிகளை ஒரு ஆய்வுக்கூடத்தில் மட்டும் செய்யும்போது இந்தக் காலக்கணிப்பு அங்கு நடந்த சிறு தவறாகக் கூட இருக்கலாம். அப்படி என்றால் காட்டு நெல்லா, பயிர் செய்த நெல்லா என்று தெரிவதற்கும் இதை உறுதி செய்யவும் இன்னொரு சோதனை வேண்டும். நம்முடைய அரசு சட்டப்படி நெல்லை வெளியில் அனுப்பக்கூடாது என்பதால், Indian institute of advanced archeological study என்று இலங்கையில் உள்ள மையத்தில் இருந்து டாக்டர் பிரேம திலகா என்பவரை இங்கே வரச் சொன்னோம். அவரோடு பாண்டிச்சேரியில் உள்ள பிரஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆப் பாண்டிச்சேரி ஆய்வாளர்களும் சேர்ந்து இது விளைச்சல் நெல்தான், இதன் தாவரவியல் பெயர் ஒரைசா சட்டைவா இண்டிகா, (Species - Oryza sativa, Family - Poaceae) என்று உறுதி செய்தார்கள்.

இதேபோல 4 பெருங்கற்படை சின்னங்களை ஆய்வு செய்தோம். நான்கிலும் நெல்மணிகள் கிடைத்தன."

வாழ்வியல் இடங்களின் அகழ்வாய்விற்குப்பின், பொருந்தல்லில் உள்ள ஈமக் காட்டில் அகழ்வாய்வுகள் தொடங்கப்பட்டன. நான்கு ஈமச்சின்னங்கள் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டன. இந்தக் குழிகளில் நான்கு கால்களைக் கொண்ட ஜாடியில் நெல் மணிகள் வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. அதில் இரண்டு ஈமக் குழிகளில் கிடைத்த நெல்மணிகள் அமெரிக்காவில் உள்ள பீட்டா அனாலிட்டிக் ஆய்வுக்கூடத்தில் காலக்கணிப்பு செய்யப்பட்டது. இந்த



அகழ்வாராய்ச்சியில் ஒரு தமிழி எழுத்துப் பொறிப்பு பெற்ற பிரிமனை வைக்கப்பட்டிருந்தது. அந்த எழுத்துப் பொறிப்பு அறிஞர்களால் "வைரா" என்று எழுதப்பட்டுள்ளதாகக் கண்டறிந்துள்ளனர்.

1. அசோகருக்கு முந்தைய காலத்திய பண்டைய தமிழகத்தில் தமிழி எழுத்துக்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

2. கி.மு. 500ஆம் ஆண்டு காலத்தில் தமிழகத்தில் நெல் சாகுபடி நடந்து வந்துள்ளது என்பதும் அறியமுடிகிறது.

பொருந்தல் பகுதியின் வாழ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைத்த கண்ணாடி மணிகள் மெருகேற்றப்பட்ட அழகிய கண்ணாடி மணிகளாக இருக்கின்றன. இந்த மணிகள் பல்வேறு நிறங்களில் காணப்படுகின்றன.

சதுரங்கத்தில் பயன்படுத்தும் காய்கள், சுடுமண் பொம்மைகள், தந்தத்தில் ஆன தாயக் கட்டைகள், சுடுமண்ணில் ஆன காதணிகள், செப்புக் காசு, தங்கப் பொருள்கள் போன்ற தொல்பொருள்கள் இங்கு கிடைத்துள்ளன.

பொருந்தல் அகழாய்வில் கிடைத்த தமிழ் பிராமியின் (தமிழி) காலம் கி.மு. 5ஆம் நூற்றாண்டு ஆகும். இது ஓரளவு வளர்ச்சி அடைந்த தமிழ் வரிவடிவம். இரண்டாம் நிலை, தமிழ் பிராமி2. முதல் நிலை இதற்குப் பல நூற்றாண்டுகள் முந்தியதாகும்.

ஆக, தமிழ் பிராமியின் தொடக்க நிலையைக் கி.மு. 8ஆம் நூற்றாண்டு எனலாம்.

- தொடரும் ■

• மூலம் : வால்ட் விட்மன்
மொழிபெயர்ப்பு : தங்கேஸ்
சித்திரம் : அழ. ரஜினிகாந்தன்

# என்னையே பாடுகிறேன்

## (Song of myself)

நான் எனக்கே விழா காண்கிறேன்
என்னையே பாடிக் களிக்கிறேன்
நான் என்னை எவ்விதம் கொண்டாடுகிறேனோ
உன்னையும் அவ்விதமே
என்னுடைய ஒவ்வொரு அணுவும் எனக்கு எவ்வளவு முக்கியமோ
உனக்கும் அவ்விதமே
நான் ஊரெல்லாம் சுற்றி வருவேன் இலக்கின்றி
அவ்வப்போது ஆன்மாவிற்கும் அழைப்பு விடுவேன்
சோம்பிச் சாய்ந்திருக்கும்போது
கோடைப் புற்களின் ஈட்டி முனைகளில்
மனதைச் சேர்ப்பேன்
என் குருதியில் நடனமிடும் ஒவ்வொரு அணுவும்
இந்த மண்ணில் இந்தக் காற்றில் பிறந்ததே
என் பெற்றோர்களுக்கும் அவ்விதமே அது வாய்த்தது
பெற்றோர்களின் பெற்றோர்களுக்கும்
தலைமுறை தலைமுறைகளுக்கும் அதே அவ்விதமே
எனக்குத் தற்போது முப்பத்தி ஏழு வயது
முழு ஆரோக்கியம் இறக்கும் வரைக்கும் மாறாது என்பேன்
என் நம்பிக்கைகளையும் நம்பிக்கை வளர்த்த மதக்கூடங்களையும்
நான் மறக்கவில்லை
அவை போதுமான அளவு மாறாமலிருக்கின்றன
ஆனால் நான் மாறியிருக்கிறேன்
நான் நல்லது கெட்டது இரண்டிற்குமிடையில் முகாமிட்டுத் திரும்புகிறேன்
ஒவ்வொரு தடையும் என்னிடமும் உரையாடிப்போகின்றன
ஆனால்
இயற்கையின் கரங்களில் மட்டும்
என்னை அப்படியே ஒப்படைத்துவிடுகிறேன். ■



• வீரசோழன் க.சோ.திருமாவளவன்

# “ஒரு எழுத்தாளனுக்குத் திருவிழா எடுத்த நாள்”



## எழுத்தாளர் பொன்னீலன் - 80
## எழுத்துலகில் பொன்னீலன் - 55

நாஞ்சில் நாட்டு இளம் எழுத்தாளர், திருக்கார்த்தியல் எனும் அருமையான சிறுகதைத் தொடர்பைத் தந்த, திரு. ராம் தங்கத்தின் முழு முயற்சியோடு, அர்ப்பணிப்பு உணர்வோடு ஏற்பாடு செய்யப்பட்ட முழுநாள் கொண்டாட்ட மான பொன்னீலன் 80 விழா 16.11.2019 சனிக்கிழமை திட்டமிடப்பட்டிருந்தது.

ஐயா பொன்னீலன் வாசகர்களுக்காகவே வெள்ளி (15.11.2019) மாலை மணிக்கட்டுப் பொட்டிலில் ஐயா பொன்னீலன் அவர்களின் இல்லத்தின் முற்றத்தில் ‘வாசகர்களுக்கான சிறப்புச் சந்திப்பு’ ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

அதன்படி சரியாக மாலை 6.00 மணியளவில் எளிமையின் சிகரம் ஐயா நல்லகண்ணு அவர்கள் வருகை புரிந்தார்கள். ஐயா பொன்னீலன் அவர்கள் ஓடோடிச் சென்று தனது தோழமையை ஆரத் தழுவி வரவேற்றார்கள்.

பொன்னீலன் ஐயா அவர்கள் தனது இல்லத்தின் முன் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கும் ஐயா ஜோடி குரூஸ் அவர்களுக்கும் நடுவில் கம்பீரமாக அமர்ந்து தனது பழைய நினைவுகளையும், தோழர் ஐயா நல்லகண்ணு அவர்களுடனான நட்பு பற்றியும் சிலாகித்துப் பேசினார்கள். அதிலும் தங்களின் பால்யகாலம் முதல் இப்போது வரையிலும் அறுபது வருட நட்பைத் தனது வாசகர்களுடன் பகிர்ந்துகொண்டார். அந்த நேரத்தில் ஐயா பாரதி மணி அவர்கள் வருகை புரிந்தார். உடனே பொன்னீலன் ஐயா எழுந்து பாரதி மணி ஐயாவைக் கட்டிப் பிடித்து முத்தம் தந்து உட்கார வைத்தார். பின் முத்தம் கொடுத்தது பற்றி ஒரு சிறு குறிப்புரையே வழங்கினார்கள்.

உலக வில்வித்தைப் போட்டியில் தங்கம் வென்ற அஷ்வத் எனும் சிறுவன் ஐயாவிடம் வாழ்த்து சொல்லி ஆசீர்வாதம் வாங்கினான்.

பின்னர் பொன்னீலன் ஐயா அவர்கள் தான் எழுதிய வீராயி கேரக்டர் பற்றியும், மலர்வதி எழுதிய தூப்புக்காரி எனும் நாவலுக்கு அணிந்துரை கேட்டபோது திட்டியதையும் பின் அந்த நாவலை முழு மூச்சாய்ப் படித்துவிட்டு உடனே அணிந்துரை எழுதி அவர் வேலை பார்க்கும் இடத்திற்கே கொண்டு சென்று கொடுத்து வந்தது பற்றியும் தனது நினைவு நாட்களைத் திருப்பினார்.






தனது வீட்டின் பழம் பெருமைகளைப் பற்றியும் அதனுடைய பாரம்பரியத்தையும் சிலாகித்துப் பகிர்ந்தார்கள். அவர் வாழ்வின் பல சுவையான செய்திகள் எல்லாமே இந்த வீட்டிலிருந்தே துவங்கியது என்றும், பல கதைகள் உருவாகக் கருவாக வீடு இருந்தது எனவும் வீட்டின் நினைவுகளைப் பகிர்ந்தார்கள்.

விழாவின் இறுதியாகக் கதை சொல்லி வனிதாமணி அருள்வேல் மொத்த முற்றத்தையும் கலகலப்பாக்கினார்கள். அதிலும் சிறுவர்களாக வாழ்ந்த காலங்களுக்கு அழைத்துச் சென்றார். ஐயா நல்லகண்ணு, பாரதிமணி, பொன்னீலன் ஐயா ஆகிய மூவரும் குழந்தைகளாகவே விளையாடிய தருணங்கள் பொன்னான நிமிடங்கள் அவை.

விழா நாளான.....

சனிக்கிழமை...

16.11.2019 காலை மணிக்கட்டுப் பொட்டலில் சீதாலட்சுமி கல்யாண மண்டபத்தில் பறை இசை ஆட்டத்துடன் நிகழ்வு இனிதே துவங்கியது.

மண்டபத்தின் வாசலில் ஒலித்த பறையிசை உற்சாகத்தையும் ஆட்டத்தையும் வரவழைத்தது. அகிலம் அதிர அதிர மேளம் கொட்ட எழுத்துலக மேதை பொன்னீலன் பறையிசை முழக்கத்தோடு வாசலில் வந்திறங்கினார்கள். அந்தப் பறையிசை ஒவ்வொருவரையும் நடனமாடத் தூண்டியது. இதில் பொன்னீலன் ஐயாவும் விதிவிலக்கல்ல. அந்தப் பறையிசைக்கு ஏற்றவாறு மெல்லிய நடனத்துளியைத் தனது இணையருடன் வீசிச் சென்றார்.

குத்துவிளக்கைத் திருமதி கமலா சுந்தரராமசாமி, திரு.ரெங்காபாய் சதாசிவன், தியாகி திரு.கோ.முத்துக்கருப்பன், தியாகி திரு.கொடிக்கால் ஷேக் அப்துல்லா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

எழுத்தாளரும் நிகழ்ச்சியின் ஒருங்கிணைப் பாளருமான தோழர் ராம் தங்கம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இதன் பின் நிகழ்வு தொடங்கியது.

ஐயா நல்லகண்ணு அவர்கள் விழாவினைத் துவக்கிவைத்துத் தலைமை உரை ஆற்றினார்கள்.

தனக்கும் பொன்னீலனுக்குமான நட்பு எப்படி இருந்தது என்பது பற்றியும், கல்வியாளராக அவர்



இருந்தபோதும் ஓய்வு பெற்றபோதும், இப்போதும் எப்படியான நட்பு இருவருக்குமிடையே இருந்தது என்பது பற்றியும் அந்தக்கால நினைவுகளைப் பகிர்ந்தார்.

கையால் எழுதி எழுதியே தனது அத்துணைப் படைப்புகளையும் கொண்டு வந்தவர். ஒரு நூலிற்காக ஆய்வு செய்து தரவுகளோடும் புதுப் புது செய்திகளோடும் அவரின் எல்லாப் படைப்புகளையும் தந்தார். அத்துணைப் படைப்புகளும் கைவிளக்கில் கையால் எழுதி வெளிவந்தவை என்றும் புகழாரம் சூட்டினார்.

எழுத்தாளரும் கதை சொல்லியுமான பவா செல்லத்துரை அவர்கள் பேசுகையில்...

“எழுத்தாளர் பொன்னீலன் எங்களுக்குத் தலைமையாசிரியர் போன்றவர். அவர் எழுதிய அத்துணைப் படைப்புகளும் காலத்தால் பேசப்படுபவை. எழுத்தில் முற்போக்கு பிற்போக்கு என்ற ஒன்றில்லை எல்லாமே எழுத்துதான். சினிமாவுக்குச் செல்லாமல் வேறு எங்குமே செல்லாமல் தனது சொந்த ஊரிலே அத்துணைப் படைப்புகளையும் படைத்திருக்கிறார். நிறைய பக்கங்களை எழுதிக் குவித்தவர் பொன்னீலன்” என்றார். மேலும் குமரியைச் சேர்ந்த திரிசை சிவா என்பவர் பொன்னீலனால் அவரின் எழுத்தால் தான் கதை எழுத ஊக்கப்படுத்தப்பட்டு எழுதியதாகவும் கூறினார். தான் துபாயில் சந்தித்த அந்த இளம் எழுத்தாளரின் கதையைச் சொல்லி, “இப்படியான இளம் எழுத்தாளர்களுக்கு நீங்கள் இன்னும் ஊக்கமாகவும் உத்வேகமாகவும் இருக்கிறீர்கள்.. உங்களைப் பாராட்டி வாழ்த்துகிறேன்”, என்றார்.

மலையாள எழுத்தாளர் மனோஜ் குரூர் பேசுகையில் மறுபக்கம் புதிய தரிசனம் போன்ற பொன்னீலன் அவர்களின் நூல்கள் மலையாளத்திற்கு மொழிபெயர்க்கப்பட வேண்டும் எனத் தன் ஆதங்கத்தை வெளிப் படுத்தினார்.

பொன்னீலன் 80 எனும் புத்தகத்தை எழுத்தாளர் ராம் தங்கம் தொகுப்பு செய்திருந்தார். அந்தத் தொகுப்பைத் தோழர் நல்லகண்ணு அவர்கள் வெளியிட எழுத்தாளர் கவிதைக்காரன் இளங்கோ, யாவரும் பதிப்பகம் நிறுவனர் திரு. ஜீவகரிகாலன், மொழிபெயர்ப் பாளர் குளச்சல் மு.யூசுப், எழுத்தாளர்கள் திரு.ஏக்நாத், திரு.லா.ச.ரா.சப்தரிஷி, திரு.முத்தாலங்குறிச்சி காமராசு, வழக்கறிஞர் கணபதிசுப்ரமணியம், கதைசொல்லி வனிதாமணி அருள்வேல், கவிஞர் வீரசோழன். க.சோ.திருமாவளவன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்

நிறைவுரையாக எழுத்தாளர் ஜெயமோகன்...

“சின்ன மாவட்டமான குமரியில்தான் தலைதலைமுறையாக எழுத்தாளர்கள் உருவாகிறார்கள். ஹரியானாவில் பார்த்தால் ஒரு தெரு முழுவதும் கிரிக்கெட் ஆடும் சிறார்களைப் பார்க்கலாம். அங்கிருந்துதான் ஒரு கபில்தேவ் உருவாக முடிந்தது. குமரியின் முன்னோடி வழிகாட்டி எப்போதுமே பொன்னீலன்தான். எளிய மக்களின் வாழ்வை அவர்களின் குரலைத் தனது கதைகள் மூலம் பதிவு செய்தவர். அதோடு நின்றுவிடாமல் பழங்குடியினரின் வாழ்வையும் பத்திரப்படுத்தியவர் பொன்னீலன். வரலாற்றை அதன் பக்கங்களில் பதிவுசெய்து அரசியல், பண்பாடு, சமூகத்தைத் திடகாத்திரமாகத் தன் படைப்புகள் வாயிலாக மக்களிடத்தில் சேர்த்தவர். பத்தாயிரம் பக்கங்களுக்கும் மேல் எழுதித் தீட்டியவர் பொன்னீலன். கரிசல், புதிய தரிசனம், மறுபக்கம் மூன்றையும் ஒரு ஆய்வாகக் காட்டலாம்” என்று முத்தாய்ப்பாகப் புகழாரம் சூட்டினார்.

இறுதியாக ஏற்புரை ஐயா பொன்னீலன் அவர்கள் பேசி முடித்தார்கள்.

அன்றைய நாள் முழுவதும் தமிழகத்தின் அத்துணை எழுத்தாளர்களையும் நாகர் கோவிலில் காண முடிந்தது. வாழும் காலத்திலேயே ஒரு எழுத்தாளன் கொண்டாடப் பட வேண்டும் என்ற வகையில் மிகச்சிறப்பாக முத்தாய்ப்பாய் விழாவை நடத்திக் காட்டிய பெருமை எழுத்தாளர் ராம் தங்கத்தையே சாரும்.

ஒரு மகத்தான படைப்பாளியை, எளியோர் களின் குரலாய் வாழ்ந்த மகத்தான மனிதரைக் குமரியில் அதுவும் அவர் வாழ்ந்த பகுதியிலேயே அந்த மண்ணின் மைந்தனைக் கொண்டாடியது பெரும் உவகையான தருணங்கள்.

ஒரு எழுத்தாளனுக்குத் திருவிழா எடுத்த நாள். திருவிழா நாயகன் ஐயா பொன்னீலன் அவர்களைத் தமிழகமே கொண்டாடிய பெரும் விழாவாகப் பெருமை தரும் நிகழ்வாகக் குமரி மாறியிருந்தது.

திரு.பொன்னீலன் ஐயா அவர்களைத் தமிழகத்து எழுத்தாளர்கள் கொண்டாடிய பொன்னான நாளாக இருந்தது.. அந்நாள்.■

கவியும் சித்திரமும் :
• அழ.ரஜினிகாந்தன்

# ஊர்மிளை

அன்னை செய்த
ஆர்ப்பாட்டம் எல்லாம்
அதற்குள்
அந்தப்புரத்தை-
எட்டியிருக்குமோ
ஆசைக் கணவன்
ஆரண்யம் போவதை
எண்ணி
அவளது கருவிழியிரண்டிலும்
கண்ணீர் வந்து -
முட்டியிருக்குமோ
அரசிளங்குமரியை
அபாக்கியவதியாய்
ஆக்கிப் போகும்
தன்னைச் சபித்து
அவளது அதரங்கள் -
திட்டியிருக்குமோ
ஆற்றாமையில்
பொங்கிய கண்ணீர்
அவளது
அங்கத்தை நனைத்தபடி
அருவியாய் -
கொட்டியிருக்குமோ
எனப்
பலப்பலவாய் யோசித்தபடியே
படியேறினான்
அந்தப் பரந்தாமனின் -
சகோதரன்....!

அவனுக்குள்
நடையடைக்கும் முன்பாக
ஒருமுறை
தரிசிக்க நினைக்கும்
பக்தனின் -
பரிதவிப்பு
இடையணைக்கும் முன்பாக
எழுமே
எல்லோருக்கும்
அப்படியோர் -
படபடப்பு.....!

அழுது புரண்ட
அன்னையை எப்படியோ
அரும்பாடுபட்டு
ஆற்றிவிட்டேன்
இனி
அருமை மனையாளை
எவ்விதம்-
ஆற்றுவது
ஆதிமுதலாய் உள்ள
அகராதிகளை எல்லாம்
அறிந்திருந்தாலும்
எந்த வார்த்தை சொல்லி
அவளைத் -
தேற்றுவது....

அப்பழுக்கற்ற ஊர்மிளை
அடம்பிடித்து
அழுவாளோ
இதற்கு
ஒப்புக்கொள்ளாமல்
ஓலமிட்டழுது
காலடி வீழ்ந்து -
தொழுவாளோ..?
எனத்
தாழிக்குள் அடைபட்ட



ஆழிபோல்
அவன் –
தளும்பினான்

அஞ்ஞாத வாசம்
கொள்ள
அண்ணனோடு
ஆரண்யம் –
போகவேண்டும்
அண்ணனைக் காக்கும்
பணியில்
ஆபத்து நேர்ந்தால்
அவனுக்கு முன்பாகவே
தான் –
சாகவேண்டும்
எனவே
அவசியம் வந்தாலொழிய
அவளை
ஆறுதலுக்காக கூட –
அணைத்துவிடக் கூடாது
எடுத்த காரியத்தை
முடிக்கும் வரை
எள்ளளவும் அவளை –
நினைத்துவிடக் கூடாது
என
எண்ணியவாறு சென்ற
இலக்குவனின்
நெஞ்சம்
அவளைக் கண்டதும்
கழிவிரக்கம் கொண்டு –
கனிந்தது
கரம்பிடித்தவளின்
கண்களைச்
சந்திக்க முடியாமல்
தானாகவே தலை –
குனிந்தது...

ஒப்பனை கலையாமல்
அங்கே
உதட்டுச்சாயம்
தீட்டிக்கொண்டிருந்தாள் –
ஊர்மிளை
மப்பேறிய விழிகளும்
மந்தகாசப் புன்னகையுமாய்
நின்றபடி வரவேற்ற
அவளது முகத்திலோ–
மன்மதக் களை
கணவனைப்
பிரியும் ஏக்கம்
அம்முகத்தில்
கடுகளவும் –
இல்லை
காடேகப் போகும்
கணவனுக்காக அவள்
கண்கலங்கவும் –
இல்லை
மாறாக..
கணவனை
ஏறெடுத்துப் பார்த்துக்
களுக்கென்று –
சிரித்தாள்
அவள் மீது அவன்
கொண்டிருந்த
அளப்பரிய காதலை
மளுக்கென்று –
முறித்தாள்

அடிமனசில்
கிளர்ந்தெழுந்தது
அவளைக் கண்டதும்
அந்த
அரசிளங்குமரனுக்கு –
ஆத்திரம்
அந்தி சாயும் வேளையில்
சிவக்கும்
அடிவானத்தின்
நிறங்கொண்டது அவனது –
ரௌத்திரம்......!
வெளிச்ச நாற்றுகளை
வீதியெங்கும்
நட்டதற்குக்
குறைச்சலாய்ப்
பூமி தந்த
ஊதியத்தைக் கண்டு
கோபித்துச் சிவந்த
வானம்போல்
கொந்தளித்தான் –
இலக்குவன்......



ஆத்திரம் வேண்டாமென
அவனது
அகம் –
சொன்னது
அறிவுரை சொல்லிய
அகத்தைப் புறந்தள்ளி
அக்கினிப்பிழம்பாய்
ஆகிவிட்டான்
அவனென்பதை
முகம் –
சொன்னது.....

உள்ளம் நொறுங்கிட
அவளை
உற்றுநோக்கியபடி
'ஊர்மிளை'
என்று
அவன் அழைத்ததை
அவள் –
கண்டுகொள்ளவில்லை
மாறாக
எடுத்து வீசினாள்
எள்ளலும் ஏகடியமும்
இளக்காரமும் கலந்த
ஏகப்பட்ட –
சொல்லை......
இதற்கு முன்
அவளின் இதழ்திறந்து
இப்படியான
வார்த்தைகளைப்
பேசியதே –
இல்லை
இலக்குவன் நழுவவிட்டான்
இருகரத்திலுமாய்
பற்றியிருந்த –
வில்லை.......

'அரசகட்டளைக்குப் பணிந்து
உன் அண்ணன்தானே
ஆரண்யம்
போகவேண்டும்...
அவன் பின்னே போகும்
உன்னோடு வந்து
ஆயுளுக்கும்
நான் ஏன் –
சாகவேண்டும்...?'
என
அம்பறாத் தூணி ஏந்தி
ஆரண்யம் போவானைத்
தெம்பேற்றித்
திலகமிட வேண்டியவள்
இப்படி
வம்படியாய்ப் பேசி
வழக்கொன்றைத் –
தொடுத்தாள்
வாயிற்படியிலேயே
நிற்கும் அவனை
வாவென்று அழைக்காமல்
சாவகாசமாய்
நடந்து சென்று
சயனமஞ்சத்தில் –
படுத்தாள்

எரிதழலாய் நிற்கும்
இலக்குவனை
ஏளனமாய்ப் பார்த்தவள்
இதழ்க்கடையோரம்
இளக்காரச் சிரிப்பொன்றைப் –
படரவிட்டாள்
அவன் பார்க்கட்டும்
என்பதற்காகவே
மெல்ல தன்
மேலாடையை –
நழுவவிட்டாள்.......

சயன மஞ்சத்தில்
இருக்கும் அந்த
நயன தேவதையைச்
சாந்தப்படுத்தும் நோக்கில்
சத்தமின்றிச்
சன்னமாய் அழைத்தான்
சக்கரவர்த்தியின் –
பிள்ளை
சலனமற்ற விழிகளோடு
அவனைச்
சட்டைசெய்யாது
விட்டத்தை வெறித்தபடி
இருந்தாள் அந்தச்
சனகனின் –
பிள்ளை.......

ஆத்திரம் மறுபடியும்
அவனுக்குள் –
அலையடித்தது
அதுகாறும்
அடக்கிவைத்திருந்த
சினமென்னும் –
உலை வெடித்தது....

அவளைக்
கைத்தலம் பற்றிய
நாள்
கண்ணுக்குள் –
வந்து போனது
அவளை
நினைக்க நினைக்க
நெஞ்சுக்குழி –
வெந்துபோனது....
வரம்பில்லாது பேசும்
அவளது
நரம்பில்லா நாக்கை
எண்ணி எண்ணி
உள்ளம் –
நொந்து போனது....

பள்ளியறையில்
பதிவிரதம் பூண்டவளா
இப்படி
கொள்ளி வார்த்தைகளால்
கோபத்தை –
தூண்டுகிறாள்
வில்லம்பை ஏந்தி
வந்தவன்
அவள் மீது தொடுக்க
இப்போது
சொல்லம்பை ஏந்தி –
நின்றான்......!

– தொடரும் ■

வீரக்கல்

சிறுகதைகள் - 4

நட்ட கல்லும் பேசுமோ?

• பிரேம பிரபா

# நல்லையனும் வீரம்மாவும்

துறையூர் ஜமீன் பண்ணை வீட்டின் தலைவாசலின் இருபுறமும் இருக்கும் கரி படர்ந்த விளக்கு மாடத்தில் ஏற்றியுள்ள அகல் விளக்கு காற்றிற்குத் தடுமாறி மாடத்தில் - சூழ்ந்திருந்த இருளை விலக்க அரைமனதுடன் போராடியது. இடதுபுறத்தில் உள்ள அகன்ற திண்ணையில் அடுக்கி வைத்திருந்த நெல் மூட்டைகளிலிருந்து உதிர்ந்த நெல்மணிகளைப் பதட்டத்துடன் கொத்துவதும், பிறகு பறப்பதுமாக இருந்த சிட்டுக் குருவிகளைப் பார்த்த ஜமீந்தார் நல்லையனிடம் கொஞ்சம் நெல்லை எடுத்து வாசலில் தூவச் சொன்னார்.

நல்லையனும் இரண்டு கைகள் நிறைய தரையில் சிந்திய நெல்லை எடுத்து வாசலில் வீசிவிட்டு உள்ளங்கையை முகர்ந்துபார்த்தான். பச்சை நெல் வாசம் அவனுடைய மனதை அப்படியே முழுவதும் கிளர்த்திப்போட்டது. திருமணம் ஆன புதிதில் - அறுவடைக் களத்து மேட்டிலிருந்து வரும் நல்லையனின் உள்ளங்கைகளை உரிமையுடன் பற்றி இழுத்து முகர்ந்துபார்க்கும் வீரம்மாளிடமிருந்துதான் இந்தப் பழக்கம் அவனைத் தொற்றிக்கொண்டது. அவனுக்கென்னவோ நெல்லின் வாசத்தை விட பால் பிடித்த சோளக் கதிர்களின் வாசம்தான் மிகவும் பிடிக்கும். தொழுவத்தில் கட்டியிருந்த மாடுகளின் கழுத்து மணி ஓசை அந்தக் காலை நேரத்தை மேலும் ரம்மியமாக்கியது.



இரண்டு ஆள் உயரத்தில் அடுக்கி வைத்திருந்த வைக்கோல் போரைக் காற்று செல்லமாக உரசிக் கடந்துபோக ஒரு சில வைக்கோல்கள் கட்டிலிருந்து விலக மனமில்லாமல், ஒரு நாகம் போலப் படம் எடுத்துத் தலை நிமிர்வதும், பின் தளர்ந்து பழைய நிலைக்கு வருவதுமாக இருந்தன.

அடுக்களையில் வேலை பார்க்கும் பூவாயி நல்லையனைச் சாப்பிட அழைக்க, அவனும் வாசல் மேடையில் அமர்ந்திருந்த ஜமீந்தாரைக் கைகட்டி மரியாதையுடன் கடந்து பின் கட்டு வழியாக வேகமாக உள்ளே சென்றான். ஏதோவொரு யோசனையில் பழைய சோற்றை விரல்களால் விரவிக்கொண்டிருந்தவனைப் பார்த்த ஜமீந்தாரின் மனைவி "என்ன ரோசனை பண்ணிக்கிட்டு இருக்கே.. மறுபடியும் வீரம்மாளோட சண்டை போட்டையா? நம்மளை நம்பி வந்த பொண்ணுடா. நம்மதான் விட்டுக்கொடுக்கணும். நான் அவகிட்டே பேசறேன். எதையும் இப்போ மனசுலே போட்டு உளப்பிக்காமே கை நிறைய நல்லா எடுத்து அள்ளிச் சாப்பிடுய்யா" என்று ஊறுகாய் தட்டத்தை அவனருகில் நகர்த்தி வைத்தாள்.

துறையூர் ஜமீன் - எல்லைக்கு உட்பட்ட தம்மம்பட்டியிலிருந்து வந்த கணக்கர் நடுக்கூடத்தில் ஜமீந்தாரின் முன் கைகட்டி நின்றுகொண்டிருந்தார். வெற்றிலையை மிகுந்த அக்கறையுடன் வேட்டி நுனியில் துடைத்துக்கொண்டே "அப்போ தம்மம் பட்டியிலிருந்து யாரும் அந்த வேங்கையை இன்னும் பிடிக்கலை, அப்படித்தானே?" என்று கேட்டார் ஜமீந்தார். கணக்கர் எதுவும் பதில் கூறாமல் தலையை மட்டும் தயக்கத்துடன் ஆட்டினார். "அது சரி, நான் ஒரு ஆளை அனுப்பறேன்" என்று கூறிவிட்டு நல்லையனை அழைத்தார். குரல் கேட்டுப் பாதிச் சாப்பாட்டுடன் எழப்போன நல்லையனை ஜமீந்தார் மனைவி சாப்பிடச் சொல்லிவிட்டுக் கூடத்திற்குச் சென்றாள்.

“சாப்பிட்டுக்கிட்டு இருக்கான். வந்திடுவான்” என்று சொல்ல ஜமீந்தார் எதுவும் பேசாமல் தலையை மட்டும் ஆட்டினார்.

விபரம் அறிந்த நல்லையன் தம்மம்பட்டிக்குச் செல்ல ஆயத்தமானான். புறப்படும் முன் வீட்டிற்குச் சென்று மனைவி வீரம்மாளிடம் கூறிவிட்டுச் செல்ல எண்ணினான். நல்லையனின் வீரத்தைப் பலமுறை நேரிலே பார்த்தவளாயிருந்தும் தன் தயக்கத்தை வெளிக்காட்டாமல் அவனைக் கணக்கருடன் வழியனுப்பினாள். வீட்டின் முன் வளர்ந்திருந்த முருங்கை மரத்தின் ஒரு கிளை காய்களின் பாரம் தாங்காமல் காற்றிற்கு உடைந்து சரிந்து பெருத்த சப்தத்தை எழுப்பியது. எதையும் கண்டுகொள்ளாமல் தூரத்தில் சென்றுகொண்டிருந்த நல்லையனை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தாள் வீரம்மாள்.

தம்மம்பட்டிக்குச் சென்ற நல்லையன் வேங்கையைப் பிடிப்பதற்கான தகுந்த இடத்தை ஆராய்ந்தான். ஊரிலிருந்த பலரிடம் வேங்கை நடமாட்டத்தைப் பற்றிக் கேட்டறிந்தான். தொண்ணூறு வயதைத் தாண்டிய ஊர்க்கிழவி ஒருத்தி முன்பெல்லாம் அறுவடைக் காலத்தில் வேங்கை சில நாட்கள் ஊரில் இப்படி நடமாடும் எனவும் பிறகு அதுவே மீண்டும் காட்டிற்குச் சென்றுவிடும் என்றும் நல்லையனிடம் கூறினாள். அவன் தன் இடுப்பு முடிச்சை உன்னிப்பாகக் கவனிப்பதைப் பார்த்த கிழவி, அதிலிருக்கும் புகையிலையைப் பாதி முறுக்கி நல்லையனிடம் கொடுத்துக்கொண்டே “கொல்லிமலைக்குப் போனா அதோட நடமாட்டத்தை நல்லாக் கவனிக்கலாம்” என்று துப்புக் கொடுத்தாள்.

கொல்லிமலைச் சாரலில் உள்ள வனத்தில் கூடாரம் அமைத்துஅங்கேயே தங்கியிருந்து வேங்கை வருவதை நோட்டமிடத் தீர்மானித்தான் நல்லையன்.

நல்லையன் தங்கியிருந்த இடத்தின் அருகில் உப்பிலிய நாயக்கரின் செங்கட்சூளை இருந்தது. அங்கு வேலை பார்க்கும் சின்னம்மாள் நல்லையனைக் கடந்துபோகும் போதெல்லாம் அவனை ஓரக்கண்ணால் பார்ப்பதும் சிரிப்பதுமாக இருந்தாள். அவளின் திமிறிய அழகும், விரிந்த கண்களும் நல்லையனை ஏதோ செய்தன. வீரம்மாளைவிடச் சின்னம்மாள் அவ்வளவு ஒன்றும் அழகி இல்லை என்றாலும் நல்லையனைக் கடந்துபோகும் ஒவ்வொரு முறையும் சின்னம்மாள் தன் ஈரம் படர்ந்த உதட்டுச் சுழிப்புடன் மெலிதான புன்னகையைக் கரைத்து அவனைத் தடுமாற வைத்திடுவாள். தாமரைத் தண்டெனச் சிறுத்த அவளின் இடையில் பெரும் பாரமெனத் தள்ளாடும் தாமரை மலர்கள் நல்லையனின் பார்வையில் பட வெட்கிச் சிவக்கும் அவளின் கன்னம் காண அவன் தவம் இருந்தான். அவளின் பெருமூச்சுக் காற்றில் தன்னை முழுவதுமாகக் கரைத்துக்கொண்டு அவளுடன் வாழ ஆசைப்பட்டான். நல்லையனின் மனதும் பல சமயங்களில் ஏதோவொன்றைக் குறிப்பால் அவனுக்கு உணர்த்த அவளில்லாமல் ஒவ்வொரு நாளும் பெரும் பாரமாக அவனுக்குக் கடந்துபோனது.

ஒருநாள் வேலை முடிந்து வீட்டிற்குச் செல்லும்போது தூறலாய் ஆரம்பித்த மழை கட்டவிழ்த்துப் பொழிந்தது. மழையின் காரணமாகக் கூடாரத்தின் அருகில் மறைவாக ஒதுங்குவதைக் கவனித்த நல்லையன் அவளை உள்ளே வருமாறு செய்கையால் அழைத்தான். தயக்கத்துடன் கூடாரத்தினுள்ளே சென்றவள் உடம்பில் படர்ந்த ஈர உடையை இரு கைகளாலும் அழுத்தி மேலிருந்து கீழ் வழிக்கக் கால்பாதங்களில் மழை நீர் சிறிய குளம் போல் தேங்கி நின்றது. இதைக் கவனித்த நல்லையன் தனக்கு மீறிய ஏதோ ஒன்று தன்னில் நிறைந்து வழிவதாக உணர்ந்தான். எதற்கும் காத்திராமல் அவளின் கைகளைப் பற்ற மறுப்பேதும் கூறாமல் தன்னிலை மறந்தாள் சின்னம்மாள். நல்லையனின் மனதிற்குள் சின்னம்மாள் முழுவதுமாக இருந்தாள்.

இதற்கிடையே ஒருநாள் நல்லையன் வேங்கையை நேருக்குநேர் எதிர்கொண்டான். அன்று காலை லேசான பனிமூட்டத்துடன் இருந்தது. கூடாரத்திலிருந்து ஐம்பது அடி தூரத்திலிருக்கும் பாறைக் கூட்டங்களின் மறைவிலிருந்து வேங்கையின் உறுமல் கேட்டது. அதை அடுத்து அடர்ந்து வளர்ந்த கோரைப் புற்களிடையே கேட்டது. நல்லையன் ஒவ்வொரு அடியாக வைத்து முன்னேறினான். மீண்டும் வேங்கையின் உறுமல் சப்தம் கேட்டது. ஆனால் இந்த முறை பாறைக் கூட்டங்களிற்கு அப்பால் வெகு தொலைவில் கேட்பது போலத் தோன்றியது. அருகில் இருக்கும் மரத்தில் ஏறிக் கிளைகளைத் தாண்டி உச்சிக்குச் செல்ல எண்ணினான். கிளைகளைத் தாண்டி ஏறும் போது இலைகளால் எந்தச் சப்தமும் வராமலிருக்கக் கூடுதல் அக்கறையுடன் மேலேறினான். தூரத்தே உயர்ந்து வளர்ந்த புற்களின் நடுவில் கம்பீரமாக அமர்ந்திருந்த வேங்கை தன்னையே உற்றுப்பார்ப்பதாக உணர்ந்த நல்லையன் துளியும் எதிர்பாராமல் தலைக்கு மேல் உள்ள காக்கையின் கூட்டைத் தட்டிவிட எங்கிருந்தோ வந்த காக்கைக் கூட்டங்கள் பெருத்த ஒலி எழுப்பிக்கொண்டு மரத்தைச் சுற்றிப் பறந்தன.

மீண்டும் சிறுத்தையின் உறுமல். ஆனால் இந்த முறை வெகு அருகில் கேட்டது. மரத்திலிருந்து நல்லையன் கீழிறங்க அவனைத் தாக்க வேங்கை பத்தடி தூரத்தில் தயாராய்க் காத்திருந்தது.

நல்லையன், வீரத்துடன் போராடி வேங்கையை வெட்டி வீழ்த்தினான். வேங்கையின் தலை அருகில் இருக்கும் முட்புதருக்குள் விழுந்தது. குதிரையில் இருந்தபடியே முட்புதருக்குள் கிடந்த வேங்கையின் தலையைக் காலால் எட்டி உதைத்து எடுக்க முயன்ற போது அங்கிருந்த நல்ல பாம்பு அவனைத் தீண்டி விட்டது. உடனே எதற்கும் காத்திராமல் வேகமாகச் செங்கற்சூளைக்கு விரைந்தான். யாரும் அங்கு இல்லாதது கண்டு நேராக உப்பிலிய நாயக்கரின் வீட்டிற்குச் சென்று விஷத்தை முறிக்க வேண்டினான். அதற்கான ஏற்பாடும் உடனே நடந்தது. சின்னம்மாவுடனான அவனுடைய சினேகத்தை அறிந்த சில வஞ்சகர்கள் விஷத்தை முழுவதுமாக முறிக்கவிடாமல் வேண்டுமென்றே நல்லையனைப் பாதி சிகிச்சையில் அனுப்பிவைத்தார்கள். அங்கிருந்து புறப்பட்டுப் போகும் வழியில் ஆச்சா மரத்தடியில் மயக்கமுற்றுக் கீழே விழுந்து இறந்துபோனான் நல்லையன்.

வேங்கையைப் பிடிக்கச் சென்ற தன் கணவன் நீண்ட நாட்கள் ஆகியும் வீடு திரும்பாததை எண்ணி வருந்திய வீரம்மாள் விடிந்ததும் யாரையாவது துணைக்கு அழைத்துக்கொண்டு தம்மம்பட்டிக்குச் செல்லத் தீர்மானித்தாள். இரவு முழுவதும் அவள் தூங்கவே இல்லை. இடையே சற்று கண் அயர்ந்தவள் அப்படியே நீண்ட நேரம் தூங்கிவிட்டாள். திடுக்கிட்டு எழுந்தவள் கண்களைக் கசக்கித் தன்நிலை மீள அவள் கண்ட கனவை மீண்டும் நன்றாக நினைத்துப்பார்த்தாள். கொல்லிமலையின் அருகில் இருக்கும் ஆச்சா மரத்தடியில் நல்லையன் விழுந்து கிடந்தான். அந்த நிலையில் அவனைக் கண்டவள் அப்படியே நிலைக்குத்திச் செய்வதறியாது சிலையாக நின்றாள். அவன் உடல் கிடந்த இடத்திற்கு மேலே கருடன் ஒன்று சுற்றிக்கொண்டிருக்கும் என்று நல்லையன் அவளின் கனவில் உணர்த்தியதை அறிந்தாள். சுவாசம் இழந்த தடுமாற்றத்தில் அவள் விழித்திருக்கவேண்டும். உடனே அவனுடைய உடலைக் காணக் கொல்லிமலைக்கு விரைந்தாள். கணவனைத் தேடிச்சென்ற வீரம்மாள் கருடன் சுற்றுவதைக் கண்டு நல்லையன் இறந்த இடத்தை அறிந்தாள். உறவினர்கள்ஒன்று திரண்டு வந்து நல்லையன் இறந்த இடத்திலேயே தீமூட்டி எரித்தனர். வீரம்மாளும், சின்னம்மாளும் நல்லையனின்சிதையில் புகுந்து உயிரை மாய்த்துக்கொண்டனர். இம் மூவருக்கும் அவ்விடத்திலேயே புடைப்புச் சிற்பமாக ஒரேகல்லில் உருவம் பொறித்து நடுகல் எடுத்தார்கள்.

ஊரின் பொது நன்மைக்காக வேங்கையைக் கொன்று மக்களைக் காப்பாற்றியதற்காக நல்லையன் இறந்தான் என்ற காரணத்தால் அவனை இன்றளவும் தம்மம்பட்டி ஊர்ப்பிடாரிக் கோயிலில் பட்டவனாக வழிபடுகின்றனர். அந்நடுகல் உள்ள இடத்தைத் “தோரண ஆச்சான் கோயில்” என்றும் அழைக் கிறார்கள். பவித்திரம் கம்பராயன் கோயிலிலுள்ள நல்லையன், வீரம்மாள், சின்னம்மாள் முதலிய தெய்வங்களுக்குச் சிலை ஏதும் இல்லை. இவர்களுக்கான தெய்வப்படிமங்களை உருவாக்கப் புதுவேட்டி வாங்குகின்றனர். வேட்டியை முறுக்கி முடிச்சிட்டு மனித வடிவத்தை உருவாக்குகின்றனர். நல்லையன், சின்னம்மாள் படிமத்திற்கு வீட்டுக்கோயிலில் இரண்டு கிடா பொதுவில் வெட்டுகின்றனர்.

வீரம்மாளுக்குச் சூலாடு அறுத்துச் சுடுவாங்கறி வைத்துப் படைக்கின்றனர். பெரும்பூசை முடிந்ததும் வேட்டியிலுள்ள முடிச்சினை அவிழ்த்துத் தெய்வ உருவத்தை விடுகின்றனர். தெய்வத்தை எழுந்தருளச் செய்து வேட்டியைத் தங்கள் வயதான பங்காளி களுக்குக் கட்டிக்கொள்ளத் தருகின்றனர். கம்பராயன் கோயிலில் கரகம் பாலிப்பது இருமுறை நடக்கிறது. கம்பராயனுக்கு ஒருமுறை கரகம் பாலித்துக் காட்டுக்கோயிலில் கிடா வெட்டிப் பாலித்து எரிகாவம் கொடுக்கின்றனர். மறுநாள் பட்டவனுக்குக் கரகம் பாலித்துக் கிடா வெட்டிச் சூலாடு அறுத்துச் சமைத்துப் படைக்கின்றனர். அடுத்ததாகப் பழையபாளையம் சென்று அங்காயி கோயிலில் கிடா, கோழி, பன்றி என முப்பூசை கொடுக்கின்றனர்.

இவையாவும் குடிபெயர்ந்து வருபவர்கள் எவ்வாறு தங்களதுமுன்னோர் வழிபட்ட கடவுளையும், தங்கள்குலப்பட்டவனையும் தனித்தனியே பல கட்டங்களாக இணைத்துக்கொண்டு வழி படுகின்றனர் என்பதைக் காட்டுகின்றன. கம்பராயன் கோயிலில் பட்டவன் என்கிற நல்லையன், வீரம்மாள், சின்னம்மாள், பாட்டன், பாட்டி, காத்தவராயன், மதுரைவீரன், பாப்பாத்தி முதலான தெய்வங்களும் இடம்பெற்றுள்ளன. கம்பராயன் கோயிலில் கம் பராயனுக்கு அடுத்து வணங்கப்படுவது பட்டவன் என்ற நல்லையன். கோயில் கோபுர வாசலில் குதிரை மேல் நின்ற நீலவண்ணத்தில் கம்பராயனும், மற்றொரு பக்கம் குதிரை மேல்அமர்ந்தபடி பட்டவனும் சுதைச் சிற்பமாக உள்ளனர். ■

**நோபல் இலக்கியங்கள் அறிமுகம்**
**தொடர் - 13**
**இலக்கியத்தின் தோரண வாயில்**

• தா. ஜோ. ஜூலியஸ்

# பீட்டர் ஹாண்ட்கே



உலகம், அறம், சமூக மாற்றம் எனும் விழுமியங்களின் அடிப்படையில் அமைந்த புனைவுலகிற்குச் சொந்தக்காரர் ஆகிய **பீட்டர் ஹாண்ட்கே** 2019ஆம் ஆண்டுக்கான நோபல் விருதினைப் பெற்றுள்ளார். இவருக்கு எப்படி இந்த விருதினைக் கொடுக்கலாம் என இன்றளவும் விமர்சனங்கள் வலுத்துவரும் நிலையில் நோபல் விருது பெறும் இந்தப் படைப்பாளி யார்? என்ன சாதித்துவிட்டார் என்ற கேள்விகள் நம் மனதில் எழுகின்றன.

1942ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் க்ரிஃப்ஃபின், ஆஸ்டிரியாவில் பிறந்தவர். நாடக ஆசிரியர், புதினம் படைப்பவர், கவிஞர், கட்டுரையாளர் என ஜெர்மனி மொழியில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொடி கட்டிப் பறந்தவர். இவருக்கு நோபல் விருது கொடுத்த ஸ்வீடிஷ் அகாடமி, “மொழியின் அதீத நுட்பத்தினால் மானுட அனுபவத்தை மேற்புறமாகவும் குறிப்பாகவும் ஆய்வு செய்திடும் மிக அதிக தாக்கம் அளிக்கும் படைப்புகளைப் படைத்தவர்” எனப் பாராட்டிக் கூறியுள்ளது.

ஒரு வங்கி எழுத்தரின் மகனான ஹாண்ட்கே 1961 முதல் 1965 வரை கிராஸ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயிலும்போதே அப்போது பிரபலமான **மானுஸ்க்ரிப்ட்** எனும் சஞ்சிகைக்குத் தம் படைப்புகளை அனுப்பி வெளியிடச் செய்தார். பழமைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்திய இவரது **“பார்வையாளர்களை அசிங்கப்படுத்துதல்”** எனும் பொருள் கொண்ட ஜெர்மன் மொழியிலான நாடகம் இவர் மீது

எல்லோரும் கவனம் செலுத்தும்படிச் செய்தது. இந்த நாடகமானது, நான்கு நடிகர்கள் நாடக அரங்கின் இயல்பினை ஒரு மணிக்கூறு வரை திறனாய்வு செய்துவிட்டு, பார்வையாளர்களை இழிவாகப் பேசிவிட்டு, தங்கள் நடிப்புத் திறத்தினைப் புகழ்ந்துகொள்வது போல் அமைந்த ஒன்றாகும். இதனைத் தொடர்ந்து, பல நாடகங்கள் கதைக் கட்டுக்கோப்பு இல்லாமல், வசனங்களும் இல்லாமல் கதாபாத்திரங்களின் நடிப்பினைச் சார்ந்தே இயங்குவதைப் போல் எழுதப்பட்டன. ஆனாலும் இவரது மிகச் சிறந்த நாடகம் எனப் பார்க்கையில் அது, ஒரு முழு நீள நாடகமாக அமைந்த.. 1968இல் வெளியான **"கஸ்பார்"** எனச் சொல்லலாம். இதில் கஸ்பார் ஹாசர் எனும் பேசா மடந்தையாகவும் குற்றமற்றவனாகவும் இருந்த ஒருவன் மீது சமூகம் தனது மொழியினையும் அதன் விழுமியங்களையும் திணிக்கும்போது அவன் படும் அவலங்களைச் சித்தரிக்கிறது.

இவரது இதர நாடகங்கள் **"சிறுவன் காவலனாக நினைக்கிறான்" (1969), "எனது பாதம் எனது ட்யூஷன் மாஸ்டர்'', "கான்ஸ்டன்ஸ் ஏரியினூடாக ஓட்டம்" (1971)** போன்றவை ஆகும்.

இவரது புதினங்களில் வரும் முக்கிய கதா மாந்தர்கள் எப்போதும் உச்சகட்ட மனநிலையில் இருப்பவர்களாய்த் தம் கொள்கை முடிவில் மாறாதவர்களாக இருப்பதைக் காண்கிறோம். 1970இல் வெளியான இவரது மிகப் பிரபலமான புதினம் **"பெனால்டி உதையின்போது கோல் கீப்பரின் அச்சம்''** எனும் பொருளுடையது ஆகும். இது முன்னாள் கால்பந்தாட்ட வீரர் ஒருவரின் அர்த்தமற்ற கொலைகளையும் அவர் தன்னைக் காவலர்கள் வந்து கைது செய்யும்படி காத்து இருப்பது பற்றியும் எழுதப்பட்ட விறுவிறுப்பு நிறைந்த புனைவுப் புதினம் ஆகும். 1976ஆம் ஆண்டில் வெளியான **"இடக்கைப் பழக்கமுடைய பெண்"** எனும் புதினம் தன் கணவனைப் பிரிந்த பின்னர் தனியே இருக்க இயலாத சூழலில் ஒரு பெண் படும் அவத்தைகளை அதிரடியாகப் பிட்டு வைக்கும் பாணிக்குப் பெயர்போன ஒன்றானது. இது பின்னாளில் திரைப்படமாக்கப்பட்டபோது அதற்கான திரைக்கதையினையும் ஹாண்ட்கேவே எழுதினார். கான்ஸ் திரைப்பட விழாவில் இது தங்கக் கோப்பையும் வென்றது. 1972இல் வெளியான **"கனவுகட்கு அப்பாற்பட்ட சோகம்"** எனும் புதினம், நோய்வாய்ப்பட்டு இறந்த ஹாண்ட்கேயின் அன்னையின் நினைவில் எழுதப்பட்டதாகும். இது நோயில் வீழ்ந்தோரை ஆசுவாசப்படுத்த உதவும் வசனங்களால் வெகு அதிகம் பேரைத் தாக்கம் செய்த நூல் ஆகும்

**"தவறான செயல்பாடு"** எனும் பொருளில் 1975இல் வெளிவந்த ஜெர்மானியத் திரைப்படத்திற்கும் ஹாண்ட்கே வசனம் எழுதிப் பொன் பரிசு பெறச் செய்தது. **"ஆசையின் சிறகுகள்"** எனும் படத்திற்கு இயக்குனர் விம் வெண்டர்சுடன் இணைந்து எழுதிய திரைக்கதையும் துவக்கத்தில் பாடிய கவிதையும் இவருக்குப் பல பாராட்டுகளைப் பெற்றுத் தந்தன. **பெட்ரார்க்கா ப்ரெய்ஸ்** எனும் ஐரோப்பிய விருது வழங்கும் குழுவிலும் இவர் உறுப்பினர் ஆக்கப்பட்டார்.

1979இல் வெளியான இவரது படைப்பு ஆகிய **"மெதுவாக வீடு திரும்புதல்"** என்பது மூன்று பகுதிகளைக் கொண்ட புதினம் ஆகும். இதில் ஒரு பகுதி ஒரு தந்தையின் கடமைகள், பொறுப்புகள், கஷ்டநஷ்டங்களைப் பட்டியலிடுகின்றது. பின்னர் 1997இல் **"ஒரு கரிய இரவில் நான் பேச்சற்ற வீட்டை விட்டுப் பிரிந்தது"** எனும் புதினம் காயங்களால் பேச்சினை இழந்த ஒரு மனிதனின் வாழ்வையே மாற்றிடும் ஒரு பயணம் பற்றிய புனைவு ஆகும். 2002இல் வெளியான **சியெர்ரா டெ க்ரேடோஸ்** எனும் புதினம், ஐபீரிய மலை அடுக்குகளைக் கடக்க முயலும் ஒரு பெண்ணின் புனித யாத்திரை மற்றும் அவளது அந்தரங்க வாழ்க்கை பற்றிய வருணனை ஆகும்.

அவரது பிற்காலத்திய புதினங்கள் ஆகிய 2011இல் வெளிவந்த **"மிகப்பெரிய வீழ்ச்சி''** என்பது வயது முதிர்ந்த ஒரு நடிகனின் ஒரு நாள் நிகழ்வுகளை எடுத்து உரைப்பதாக அமைந்துள்ளது. 2017இல் வெளிவந்த **"ஒரு பழத் திருடன் அல்லது அந்தரங்கத்திற்குள் ஒரு சாதாரண பயணம்''** இவரது சமூகப் பார்வையையும், அலசி ஆராயும் திறனையும் வெளிப்படுத்துவது ஆகும்.

2011இல் நாடகமாக்கப்பட்ட **“புயல் அமைதி”** எனும் இவரது படைப்பு நாடகம் எனினும் புதினமாகவே வெளியிடப்பட்டு உள்ளது. ஏனெனில் இந்த நூலின் இரட்டை தன்மைகள் ஆகிய நாடகம் மற்றும் உரை நடை இந்தப் படைப்பினைப் **“படித்த நாடகம்”** எனும் புதின வகைமையைத் தோற்றுவித்துவிட்டதால் எழுத்தில் புரட்சி செய்யும் எழுத்தாளர் எனும் நிலைக்கு ஹாண்ட்கேவியை உயர்த்திவிட்டது. வாசகர்கள் இதைப் படிக்கும்போது இது நாடகமாய் நடிக்கப்படவேண்டிய ஒன்று என்ற எண்ணம் தோன்றினாலும் வசனப் பேச்சில் அழுத்தம் இருப்பதால் தனிமொழியாக இருப்பினும் இருவர் உரையாடலாய் இருப்பினும், இது ஹாண்ட்கேயின் தனி முத்திரை தாங்கிய ஒன்று என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

ஒரு புதினத்தில் ஒரு கதாநாயகன், அவனது வாழ்க்கை, அவனுக்கு எதிராகச் செயல்படுவோர், அவர்களது சதி, அவற்றை அவன் முறியடிக்கும் விதம் என ஒரு கட்டுமானம் இருக்கும். ஆனால் இவை அனைத்துமே ஹாண்ட்கேவின் புதினங்களில் இருக்காது என்பதால் அவை அர்த்தமற்றவை எனக் கூறிட இயலாது. இவை எல்லாம் இல்லாமலேயே “அடுத்தது என்ன” என வாசகரைச் சிந்திக்கவைக்கும் திறம் அவரது எழுத்துக்கு ஒரு மிகப் பெரிய பலம். **“பெனால்டி உதையின்போது கோல் கீப்பரின் அச்சம்”** எனும் புதினம் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

ஆயினும் இவரது புதினங்களில் ஆரம்பம், இடைநிலை, கடைநிலை என மூன்று பகுதிகள் கட்டாயம் இருக்கும் என்பதால் கனவு போன்ற ஒரு குணத்தைக் கொடுத்து உண்மை நிலையின் விளிம்புகளை வெளியேற்றி அவற்றைக் காக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் விட்டு விடுதலையாகிய ஒரு சுதந்திரப் படைப்பாக உருவகங்கள் கண்முன் சித்தரிக்கப்பட்டுள்ளன.

**“நதிகளுக்கு ஒரு பயணம்”** எனும் தலைப்பில் 1966இல் இவர் எழுதிய படைப்பு, உலகில் மிகப்பெரிய முரண்பாட்டினைத் தோற்றுவித்தது. யுகொஸ்லாவியச் சண்டைகளில் செர்பியா பலிக்கடா ஆனதாக இவர் படம் பிடித்துக் காட்டியதும், இந்தப் போரின்



காரணங்களையும் விளைவுகளையும் தவறாகச் சித்தரிப்பதாக மேற்கத்திய ஊடகங்களை இவர் சாடி இருந்ததுமே இதற்கு மூல காரணங்கள் ஆயின. ஐக்கிய நாடுகள் சபையினரால் போர்க் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஸ்லொபொடோன் மிலோசேவிக்கினை ஆதரித்து இவர் எழுதியதும் அவரது அடக்கச் சடங்கின்போது பேசியதும், எல்லோரையும் இவரை வெறுக்க வைத்தது. போர்க் குற்றவாளிகளுடன் உடந்தையாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளான ஹாண்ட்கேவுக்குப் **பன்னாட்டு இஸ்பென் விருது** வழங்கப்பட்டபோது நார்வே ஊடகம் இவரை **ஃபாசிஸ்டு** என்றே குறிப்பிட்டு இவருக்கு விருது வழங்கியோரை ராஜினாமா செய்யும்படியும் விமர்சனம் செய்தது.

இவருக்கு 2019ஆம் ஆண்டுக்கான நோபல் விருது அறிவிக்கப்பட்டபோது, கொஸோவா, பாஸ்னியா, ஹெர்சிகோவினா, அல்பேனியா மற்றும் க்ரொயேஷியா போன்ற நாடுகளில் இருக்கும் அரசியல்வாதிகள், அறிவியல் அறிஞர்கள், நடிகர்கள், பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர இயக்கத்தினரால் ஏற்றுக் கொள்ளப்படாமல் இவர் தூற்றப்பட்டார். பென் அமெரிக்கா எனும் பத்திரிக்கை 2014இல் இவருக்கு **“ஆழ்ந்த இரங்கல்”** எனக் குறிப்பிட்டு எழுதியது. முன்னர் ஒருமுறை நோபல் விருது வழங்குவதை நிறுத்தவேண்டும் எனக் கூறிய ஹாண்ட்கே அதனை ஒரு **“சர்க்கஸ்”** என இழித்துக் கூறியவர் ஆவார். ■

கஸல் தொடர்

• ஜின்னா அஸ்மி
ஓவியம் : அன்பழகன்

# நீ துளையிட்ட எனது புல்லாங்குழல் - 14



நான் இசையைக் கேட்டேன்
நீ மகுடி ஊதுகிறாய்...
நான் இப்போது
எதற்காக ஆடுகிறேன் எனத் தெரியவில்லை

• • •

நீ என் மௌனத்தில்
ஒளிந்திருக்கிறாய்...
நான் பேசத் தடுமாறுகிறேன்...

• • •

என் கண்களில்
நீ
துயரொளியைப் பார்க்க
ஆசைப்படுகிறாய்
இல்லையென்றால்
காதலைக் காட்டி இருக்க மாட்டாய்...

• • •

பாவத்திலிருந்து புனிதம் பிறக்கும் அதிசயம்
காதலில் மட்டுமே நிகழும்...

• • •

என் பிறவிக்கடனை
நான் அடைக்கவேண்டும்
என் காதலை ஏந்திக்கொள்

• • •

நான் வலையில்
வீழ்ந்த பின்பும் ஏன்
தூண்டில் போடுகிறாய்?

• • •

உன் வசீகரத்தின் வாஞ்சை
வெளியே தெரிவதில்லை
இருப்பினும்
நான் மூழ்கிப்போகிறேன்
இப்போது
நானும் வெளியே தெரிவதில்லை.

• • •

நான் காதல் பாடகன்
என் ஒப்பாரியில்
ராகம் இருக்கத்தானே செய்யும். ■

நிகழ்வு

• நசீமா ரசாக்

# ஷார்ஜா புத்தகக் கண்காட்சி






உலகத்தின் மூன்றாவது மிகப்பெரிய புத்தகக் கண்காட்சியாக, ஷார்ஜா புத்தகக் கண்காட்சி உள்ளது. கிட்டத்தட்ட 80 நாடுகளில் இருந்து 2000 பதிப்பாளர்கள் கலந்துகொண்டனர். ஷார்ஜாவின் அரசர் மேதகு ஷேக் சுல்தான் பின் முஹம்மது அல் காசிமி அவர்கள் புத்தகங்கள் மீதும், வாசிப்பு மீதும் மிக ஆர்வம் கொண்டவர். நாட்டு மக்களுக்கு வாசிப்பின் அவசியத்தை உணர்த்த, இது போன்ற பல கலாச்சார நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டு வருகிறார். எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், கொண்டாடவும் தவறியதில்லை.

அமீரகத்தில் இருப்பதால் தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகளாக, பத்து நாட்கள் நடக்கும் இந்தப் புத்தகக் கண்காட்சிக்கு, ஒரு நாள் போவது வழக்கம். அவ்வளவு பெரிய புத்தகக் கண்காட்சியில், தமிழுக்கு இடமில்லை என்ற ஏக்கம் என்னைப் போல, பல தமிழர்களுக்கு இருந்தது. ஒவ்வொரு வருடமும் மலையாள வாசகர் கூட்டம் கடல் அலை போல, மலையாள அரங்குகளை நிரப்பிக்கொண்டு இருப்பதைப் பார்த்து ஏங்குவதைத் தவிர வேற வழி இல்லை என்று இருந்தேன்.

போன வருடம், அதாவது 37வது ஷார்ஜா புத்தகக் கண்காட்சியில் தமிழுக்கான முதல் அரங்கு என்று பபாசி மற்றும் டிஸ்கவரியுடன் சில பதிப்பாளர்கள் வந்தது எங்களுக்கு மகிழ்ச்சி அளித்தது. தமிழ்ப் புத்தக வெளியீடுகள் நடந்தது உற்சாகமாக இருந்தது. என்னுடைய முதல் படைப்பான “என்னைத் தேடி” அமீரகத் தமிழ் மக்களுக்கு அறிமுகமானது கூடுதல் மகிழ்ச்சி. பல மகிழ்வான தருணங்களைப் பரிசாகக் கொடுத்துச் சென்றது. ஆனால் மலையாள வாசகர்கள் போல், நம் மக்கள் இருந்தால், இன்னும் குதூகலமாக இருந்திருக்கும் என்ற வருத்தமும் இருந்தது.

இந்த வருடம் 38வது ஷார்ஜா புத்தகக் கண்காட்சியை மிகவும் எதிர்பார்த்து காத்திருந்தேன். அதற்கான சில வேலைகளை ஷார்ஜா புத்தக அலுவலகங்களுடன், டிஸ்கவரி புக் பேலஸ் சார்பில் நான் செய்ய, இன்னும் எனக்கு நிறைய விடயங்கள் புரிந்தன. அந்தப் பத்து நாட்களுக்காக ஆறுமாதமாக வேலைகள் நடந்துகொண்டு இருந்தன. எத்தனைப் பேரின் மெனக்கெடல், உழைப்பு என்று வியந்து போனேன். ஒவ்வொரு கட்டமாக வேலைகள் முடிந்து, புத்தகங்கள் சென்னையிலிருந்து ஷார்ஜா வந்து சேர்ந்தது என்ற செய்தியே நிம்மதி அடையச் செய்தது. இந்த ஆண்டு டிஸ்கவரி பேலசுடன் யாவரும், ஜீரோ டிகிரி, காலச்சுவடு, வம்சி, சிக்ஸ்த்சென்ஸ், எதிர் வெளியீடு, நூல் குடில் ஒன்றாக இணைந்து ஒரு அரங்கை எடுத்து வந்தார்கள்.

எப்படி தீபாவளிக்கு, ரமதானுக்கு, கிறிஸ்த்மஸ்க்குத் தயாராகுவோமோ, அப்படி ஒரு மனநிலைதான் என்னைச் சுற்றி இருந்தது.





இதற்கு இன்னும் ஒரு முக்கியக் காரணம் “என்னைத் தேடி” இந்த முறை ஆங்கிலத்தில் “தி செர்ச்” என்ற தலைப்பில் மொழிபெயர்த்து வந்தது. இந்த முறையும் பல தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களை வெளியிட்டார்கள். படைப்பாளர்கள், பதிப்பாளர்கள், வாசகர்களுக்கான திருவிழாவாக அமைந்தது.

போன வருடம் வாசகர்களைச் சந்திக்க வந்த எழுத்தாளர் சாரு நிவேதிதா, இந்த முறையும் வந்து வாசகர்களைச் சந்தித்து புத்தக அரங்கை அலங்கரித்தார்.

பவா செல்லத்துரை அவர்கள் மேற்கொண்ட வளைகுடா பயணத்தின் இறுதியாக அமீரகம் வந்தார். இங்குள்ள அமீரக அமைப்பு காணல் விருது கொடுத்துச் சிறப்புச் செய்தது. அவருக்காகத் தொடர்ந்து இருந்த விழாக்களுக்கு நடுவில், என் அழைப்பை ஏற்று, வீடு வந்து, அவர் செய்த உரையாடல்களும் பொக்கிஷமாகவே தெரிந்தது. குடும்பமாக ஒன்றாகக் கூடி, மதிய உணவு முடித்த பின், என் கனவு நிறைவேறியது. ஆம், சிலமாதங்களுக்கு முன், ஒருமுறை அவரை அழைத்து, “பவா சார் உங்கத் திண்ணைல உட்காந்து, நீங்க சொல்ற கதைய கேட்ட மாதிரி நல்ல கனவு”, என்று சொன்னேன். அவர் சொன்ன ஒரு ராஜாம்பாளின் கதை மூலம் அந்தக் கனவும் நினைவானது. ஒரு நல்ல மனிதம் மிக்க பேரன்பு கொண்ட மனிதரைப் பார்த்தோம் என்று மனம் சந்தோஷமாக இருக்க, என் அம்மாவின் ஊர்க்காரர் என்ற சொந்தமும் ஒட்டிக் கொண்டது. இதுபோன்ற பல நிகழ்வுகள் மனதுக்கு நெருக்கமாகிப் போயின.




ஷார்ஜாவின் அரசு ஒவ்வொரு முறையும், பல நாடுகளிலிருந்து இலக்கிய ஆளுமைகளை விருந்தினராக அழைக்கும். இந்த முறை விருந்தினராக, கவிஞர்.திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் வருகை தந்து, சிறப்புரை ஆற்றியது கூடுதல் சிறப்பு. இதை விடச் சிறப்பாக ஒரு புத்தகக் கண்காட்சிக்கு வேறு யாராலும் பேசிவிட முடியாது என்று தோன்றியது. அத்தனை வரலாறுகளும், புத்தகங்களும், அவர் பேச்சில் நிறைந்து இருந்தன. இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க ஒரு வாய்ப்பும் கிடைத்தது, என் கொண்டாட்டத்தை மேலும் குதூகலமாக்கியது.

எந்த வருடமும் இல்லாத இன்னொரு முக்கிய நிகழ்வாகக் கின்னஸ் சாதனை நடந்தது. 1500க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் ஒன்று கூடி ஒரே நேரத்தில் கையொப்பமிட்டோம். இதில் தமிழ் எழுத்தாளர்கள் இணைந்தது மகிழ்ச்சியாக இருந்தது.

போன வருடத்தைவிட இந்த வருடம் வாசகர்களின் வருகை சந்தோஷமளித்தது. அடுத்த வருடம் இன்னும் பல பதிப்பாளர்கள் வர வேண்டும், தமிழ் அரங்குகளை வாசகர்கள் அலங்கரிக்க வேண்டும் என்ற ஆசையும், நம்பிக்கையும் இருக்கின்றது.

இது போன்ற பல நினைவுகளைப் பொக்கிஷமாக இந்தப் புத்தகக் கண்காட்சி பரிசளித்தது. ■

கவி : நிலாகண்ணன்
சித்திரம் : அன்பழகன்

## நன்னிலம் தொலைத்த ராட்டினக்காரன்

ஊரும் உலர்வாழ்வு உதிர்பூக்களைக் கடக்கிறது
நத்தை சாத்திக்கொண்டதைப்போல நீர்த்துயரில்
கிடக்கின்றது நிலம்
பார்வையிழந்தவனுக்குத் துணையாய் இன்னொரு
பார்வையிழந்தவன் தனித்தனி பூமிகளில்லையா.!?
காணக்கிடைத்த காற்று, பயிர்களின் ஒத்திசைவு
பறவை அமர்வதற்கு முந்தைய கணத்தில் மரித்த ஏசு
இரவில் ஒலிக்கும் பெருங்குளத்து நீர்சலம்பல்
இவையெல்லாவற்றிற்கும் மேல் சொந்த
ஊருக்குச் செல்லும் பேருந்து ஒலியெழுப்புவது
அடிவயிறுவரை பாய்கிறது
நன்னிலம் தொலைத்த ராட்டினக்காரனின் சுழலும்
கண்களுக்குள்
துடியாய்த் துடிக்கின்றது மண்புழு



## ஒலியைப் பின்தொடர்தல்

அன்னம் பிரிந்த விளக்கினால் ஒருவனை
உருவாக்கினேன்
எலும்பில்லாத சுவருயிரியவன்
நாங்களிருவரும் சேர்ந்துதான் தனியனைக்
கொலைசெய்தோம்
கொல்வது என்று முடிவானபின் முதலில் அறையிலுள்ள
புத்தசிலையிலிருந்தே துவங்கினோம்
பிள்ளைப் பிராயத்திலிருந்து எங்களைப் பின்தொடரும்
வௌவாலிந்த பௌத்தம்
உயிர்வதையில் பிக்குகள் பிக்குகளின் காதுகளில்
நுழைந்து நுழைந்து செல்கிறார்கள்
செய்வதறியாது அம்மிருகதீபத்தைக் குளிர்விக்க
பூக்களற்றுப் புத்தனின் நீண்ட காதையே கொய்தேன். ■

• இரா மதிபாலா




# இரசித்தலும் இலயித்தலும்

கவிதைத் தொகுப்பு : **'கறிக் கடைக்காரனின் சைவ மெனு கார்டு'**

ஆசிரியர் : **கவிஞர் வணவை தூரிகா**

ஞாயிற்றுக்கிழமைகளின் இளங்காலைகளில் இறைச்சிக் கடைகளில் கறி வாங்கக் காத்திருக்கும் சுமார் இருபது நிமிடங்கள் எனக்குத் தத்தளிக்கும் நிமிடங்களாகவே இருக்கும்.

ஆடுகளின் தலைகளில் சொருகியபடி நிலைக்குத்தி நிற்கும் பார்வை, ஆட்டின் உறுப்புகள்.. என அந்த இரத்த வாடை என்னை அங்கிருந்து ஓடச் சொல்லும். நான் சைவன் இல்லை என்றபோதும் விருப்பங்கள் குறைவு. வீட்டிற்காக அந்த இறைச்சிக் கடை நிமிடங்களை உணர்வற்று ஏற்கக் கற்றுக்கொண்டேன்.

ஏறத்தாழ, கவிஞரின் உரையில் சொல்லிய அளவில் உயிர் பறிக்கும் மறை உபத்தொழிலிலிருந்துகொண்டு குடும்பம் பேணும் சூழ்நிலை.. என்ன மனநிலையில் இக்கவிதைகளை எழுத முடிந்தது?

இங்கே முரண்களில் மனத்தை / பிழைப்பினைக் காத்துக்கொள்ளும் வித்தையை உணர்கிறேன்.

மெனுகார்டின் முதல் கவிதையே வணவை தூரிகாவின் பாச வாசத்தை வாசகனின் மனநாசிக்கு உணரவைக்கிறது.

“இருவரின் சட்டைகளிலும் அடிக்கடி உடல்களை மாற்றிக்கொள்வோம்”

எனும் வரிகள் இருவரின் உள்ளங்கள் ஒரே அலைவரிசையில் இருப்பதைச் சொல்கின்றன. இக்கவிதை வரிகளில் வாசகனாய்ப் பயணிக்கிற போது நண்பர்கள் கதையா, அண்ணன் தம்பி கதையா என யோசிக்கையில்... தந்தை மகன் என அறிந்து விக்கித்துப்போனேன். கடைசிப் பத்தி கவிதையின் கண்களைத் திறக்கிறது.

நண்பரை என்ன விலை கொடுத்தேனும் வாங்கச் சொல்வது துணுக்குற வைத்து நண்பர்களின் நண்பர்கள் என விரியும் யதார்த்தமான அன்பின் பரவலைச் சொல்கிறது.

கிணற்றுப் படிக்கட்டில் அமர்ந்து நீரில் கால்களை நனைத்தபடியான கடந்த காலத்தைக் கடத்திவந்த கவிதை கிணறு கவிதை.

“தாயின் கருவறை...

அப்படியே வைத்திருந்தது”

எத்தனை குளிர்ந்த கவிதை.

“எவ்வளவு தான்...

அடித்தாலும் உதைத்தாலும் ஆரத்தழுவும் தன் நீர்க்கரங்களோடு”

கிணறு குறித்த கவிதையில் சுகமும் தத்துவமும் யதார்த்தமும் கலந்த பார்வை.

ஓடிக் களைத்துத் திரும்பும் அனாதை நாய்க்குட்டிகள் நாய்க்குட்டிகள் மட்டும்தானா?

“செய்யாத உதவிக்கும் வாலாட்டியபடி...”

பல நினைவுகளைக் கொண்டுவரும் கவிதை.

நகரத்தின் அவலத்தைச் சொல்லும் அந்த 6 அறிவு.. வேதனையையும் மீறி நகைப்பைத் தருகிற அவலச்சுவை...

"துரித உணவகத்திற்குப் பக்கத்தில் வசிக்கும்
சிட்டுக்குருவிகளுக்கும் எலிகளுக்கும் கூட
தொப்பைத் தள்ளியது..!”

"கடவுளும் கந்தசாமியும்" புதுமைப்பித்தனுக்கு.. வணவை தூரிகாவுக்குக் "கடவுளும் கடன்காரனும்" போல அத்தனை எள்ளல் பரவசம் தருகிறது.

வெளியில் தெரியாத கொடுமையை நுண்மையாகச் சொன்னவிதம் சற்றே நீளம். இருப்பினும், நவீனம் இழையோடி இருக்கிறது.

பணக்காரர்கள், பெரும் நிறுவனங்கள், இன்றைய திடீர் அரசியல்வாதிகள் ஆகியோரின் கழுகுப் பார்வை எப்போதும் மக்கள் கூட்டத்தின் மீது ஸ்கேன் செய்துகொண்டிருக்கும். நம்மை நுகர் இயந்திரங்களாக வைத்திருப்பது அவர்களுக்குப் பிழைப்பு மூச்சு.

அதிலும் அடிமட்ட நிலைதான். நாம் உயிரோடு இருக்கிறபோதே நம் வலிமையான உள் உறுப்புகளைப் பணமாகப் பார்க்கிற பார்வை. அப்பட்டமாகத் தெறிக்கவிட்ட கவிதை வரிகள். ஞாயிறுப் பொழுதுகளில் இறைச்சிக் கடைகளில் ஆட்டின் உறுப்புகள் காண நேர்ந்ததால் இப்பார்வை எனக்கு வந்திருக்கலாம் என நினைக்கிறேன். அந்த உறுப்புகள் வெள்ளைப் போர்வையில் கொள்ளை அடிக்கும் மருத்துவ மனைகளை எனக்கு நினைவூட்டும்.

கழிவறை குறித்த கவிதைக்குத் "தனியறை தவம்" எனத் தலைப்பிட்டு இருக்கலாம். ஆகப் பெரும் அமைதி வரம் கழிவறையில்தான் சாத்தியம்.

“வெளியேறிய

பொழுதுகளிலேயே

சாந்தம் சாத்தியம்”

என நிதமும் சொல்லும் கழிவறைகள்.

கவிஞர் இக்கவிதையில் உண்மையைச் சொல்லி இருக்கிறார்.

எனக்குக் குளியலறையில்தான் வாங்கிய கடனும், சொன்ன வாக்குறுதியும், கோப்புக் கோளாறுகளுக்குத் தீர்வும், அரிதாய்த் திருத்தல் அடித்தல் கவிதைகளும் கிடைத்து வருகிறது.

தனியே ஒளிர்கிறது தத்துவம் போலப் படைப்பின் சமையல் விதி.

“வார்த்தைச் சூட்டில்

அறிவு

வெந்து மலர வேண்டும்”

இது எத்தனை அளவு இயலும்? தெரியாது ஆயின் விதி இதுதான்.

சமையல் கட்டின் பெண்களின் நிறைவு வார்த்தை இதுதானே?

"மலர்ந்துச்சானு பாரு...."

என்னைப் பொறுத்தவரையில் 'குளிர்ந்து மலரல் கற்பனை சுகம்'. 'வெந்து மலரல் வலியின் சுகம்.'

கிராமத்துச் சாவின் பறை மேளம். ஆதி இசையைக் கடந்து போதல் அத்தனை எளிதா? கால அடுக்கில் வளர்ந்த வன்மம் தானே இசைக்கருவிகளுக்கும் ஜாதி விதித்தது. என்றைக்கும் ஆதி அழியாது என்று உரைக்கிற கவிதை.

நிறைவுக்கு வரும் முன்னர் ஹைக்கூ & குறுங்கவிதைகள் இவற்றுடன் சிறு வாசகனாக என்னைக் கவர்ந்த கவிதைகள்:

**“மாபெரும்**

**முழு இரவை**

**விழுங்கியது**

மிகச்சிறிய
முழுநிலவு”
•
“இவ்வுலகம்
அழிந்த கதையைப்
பிளாஸ்டிக் மட்டுமே
எழுதப் போகிறது”
•
“குடித்தவன் தின்று துப்பிய
இறைச்சியின் எலும்புகளைச்
சுவைத்த நாய்கள் ஊளையின்
குரலினை ஏற்றியது”
•
“முத்தச் சண்டைகள்
‘டிரா’ வில்..”
•
“கவிதைக்குள்
ரசகுல்லா
உன் பெயர்”
•
“இலவசமும்
எலும்புத் துண்டுகளும்
வேறு வேறுல்ல”
•
“தண்ணீர்
இறைவனின் பிரசாதம்”
•
“லாரி நிறைய
திருட்டு உள்ளாடைகள்
அம்மணத்தில் ஆறு..!”
•
“மதிப்பெண் போதை
தள்ளாடுகிறது
அறிவு”
•
“எதுவும்
முடியாதபோது
நாத்திகனின்
கடவுளும் சேர்ந்துவிடுகிறார்
இரகசியமாக”

- குறுங்கவிதைகள் செறிவுடையவை. உள் நோக்க, உள் நோக்க அவரவர்க்கேற்ப அர்த்தங்கள் வசப்படும்.

ஹைக்கூ..

# பைத்தியம்
முணுமுணுத்தது
காதல் கவிதையை..

# கோழி தாக்கியதில்
நாய்க்குப் படுகாயம்
உயிர் தப்பின குஞ்சுகள்

# மௌன விசும்பல்களால்
நிரம்பி வழிகிறது
சுடுகாடு.

# இறுதி வரை சத்தியாகிரகம்
ஒரு எலும்புத் துண்டுக்காக...

- ஆகியன சிறப்பு.

இருப்பினும் ஹைக்கூ கவிதைகளில் இன்னும் திருத்தமாய் மெனக்கெட்டு இருக்கலாம். எழிலான எழுத்து அமைப்பு, தாளின் நிறம் போன்றவற்றைச் சிறப்பாக அமைத்திருந்தால்... உயிர்ப்பு கூடியிருக்கும்.

கவிஞருடன் பேசக் கிடைத்த வாய்ப்பில், இத்தொகுப்பில் உள்ள அதிகக் கவிதைகள் காலத்தில் சற்று முந்தியவை என்பதையும் கவனத்தில் கொள்கிறேன்.

சில கவிதைகளில் மட்டும் வரிகளைச் சற்றே குறைத்து அடர்த்தியாக அமைத்திருந்தால் இன்னும் சிறந்திருக்கும்.

இறுதியாக இன்றைய வாழ்க்கைச் சூழலில் பிழைப்புப் போராட்டங்களில் லயித்து எழுதுதல் கடினம். இருந்தபோதும் எத்தனைச் சோகத்திலும் இசை, மழலைச் சிரிப்பு, வயது நிறைந்தோரின் பேச்சு, காதல், காமம் போல இரசித்தலும் இலயித்தலும் கண்ணுக்குத் தெரியாத கரைகள் போல வாழ்வில் இருக்கத்தான் செய்கின்றன. ■



சென்றேன் வென்றேன்

மாணவர் பக்கம்

• கருமலை கோ.மணிகண்டன்
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

# எமக்குத் தொழில் எழுத்தும் பேச்சும்

செந்தமிழோடு களிதெலுங்கும் கன்னடமும் சேர்ந்து சங்கமிக்கும் கருமலை (கிருட்டிணகிரி) மாவட்டத்தில், வரைபடத்தில் இடம்பெறவே வாய்ப்பில்லாத எஸ்.மோட்டூர் என்னும் குக்கிராமத்தில் பிறந்தவன் நான். படிப்பின் வாசம்கூட நுகராத எளிய வேளாண் குடும்பத்தில் பிறந்தவன் இன்று பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வாளன் என்பதெல்லாம் அவ்வளவு எளிதான செயல் அல்ல. தமிழ் மீதான தீராத காதலே என்னை இவ்வளவு தொலைவு பயணிக்க வைத்திருக்கிறது. என் கல்விப்பயணம் தொடங்கிய காலத்தில் எங்கள் ஊரில் தொடக்கப்பள்ளி கூட இல்லை. பக்கத்தில் உள்ள செம்படமுத்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில்தான் இந்த விதை தூவப்பட்டது. ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது பள்ளியில் நடைபெற்ற திருக்குறள் ஒப்புவித்தல் நிகழ்வில் இருந்துதான் தமிழ் சார்ந்த என் பயணம் தொடங்கியது. எனது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் தொடர் ஊக்கமும் செம்படமுத்தூர் கிராம மக்களின் என் மீதான வியப்பும் எதையேனும் பெரிதாகச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தை மேலும் மேலும் பெரிதாக்கின. பத்து வயதிற்குள்ளாகவே எங்கள் பகுதியில் திருக்குறள் எனது அடையாளமாக மாறியிருந்தது.

ஆறாம் வகுப்பிற்காகக் கிருட்டிணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டேன். அங்குள்ள தமிழாசிரியர்கள் மீதான ஈர்ப்பே என் எதிர்காலம் தமிழ் என்பதை உணர்த்தியது. எங்கள் பள்ளித் தமிழாசிரியர் மூக்கப்பன் அய்யாவின் ஆற்றொழுக்கான பேச்சு, வசியப்படுத்தும் குரல் இவற்றால் கட்டுண்ட எனக்கு அவரைப்போலவே பேச வேண்டும் என்னும் ஆசை முகிழ்த்தது.

பலமுறை மேடைகளில் பேசிப் பாராட்டு பெற்றிருந்தாலும் பேச்சுப்போட்டி என்னும் வகையில் முதன்முதலில் கலந்துகொண்டது எட்டாம் வகுப்பு படிக்கும்போதுதான். காமராசர் பிறந்தநாள் விழா பேச்சுப்போட்டியில் கலந்துகொண்ட முதல் போட்டியிலேயே முதல் பரிசு. அன்றுதொட்டு இன்றுவரை பேச்சு, கவிதை, கட்டுரை ஆகிய மூன்று வகைகளிலும் நிறைய போட்டிகள், நிறைய வெற்றிகள், நிறைய தோல்விகள். ஏழு ஆண்டு காலம் கிருட்டிணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என்னைக் கூர்தீட்டியது என்றுதான் சொல்ல வேண்டும். மேல்நிலைப் படிப்பை முடித்தவுடன் பட்டப் படிப்பில் எந்தத் துறையில் சேருவது என்ற இடர்ப்பாடெல்லாம் எனக்கில்லை. தமிழ்தான் எதிர்காலம் என்று முன்னமே முடிவு செய்துவிட்டேன். கிருட்டிணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரியில் இளங்கலை (தமிழ்), முதுகலை (தமிழ்) என ஐந்தாண்டுக் காலம் என் மீது பேரன்பும் மதிப்பும் கொண்டிருந்த பேராசிரியர்கள் காட்டிய வழியில் சிறப்பாக அமைந்தது. இந்த ஐந்தாண்டு காலத்தில்தான் மாவட்டத்தைக் கடந்து மாநில அளவிலான போட்டிகளில் எல்லாம் கலந்து கொண்டு பேச்சு, கவிதை, கட்டுரை ஆகியவற்றில் வெற்றிகளை ஈட்டத் தொடங்கினேன். இக்காலத்தில் இளந்தமிழர் இலக்கியப் பட்டறை மூலமாகப் பெற்ற பயிற்சிகள் மேலும் மெருகேற்றின என்பது குறிப்பிடத்தக்கது. முதுகலை முடித்த கையோடு கல்லூரிப் பேராசிரியர் பணிக்கான தகுதித் தேர்வில் (NET - JRF) தேர்ச்சி பெற்றுத் தற்போது சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறையில் பேராசிரியர் வாணி அறிவாளன் அவர்களின் மேற்பார்வையின்கீழ் முனைவர் பட்ட ஆய்வை நிகழ்த்தி வருகிறேன்.

நிறைய போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தாலும் சில வெற்றிகள் மட்டும் நினைக்குந்தோறும் இன்பம் நல்குவன. அவ்வகையில் தமிழ் வளர்ச்சித் துறை, இராமலிங்கர் பணி மன்றம், சென்னை கம்பன் கழகம், சேக்கிழார் ஆராய்ச்சி மையம் ஆகியவற்றில் பெற்ற வெற்றிகள் குறிப்பிடத்தக்கவை. விருதுகள் என்ற வகையில் வைகோ அவர்களின் திருக்கரங்களால் 'இளம் நாவலர் விருது', திசைகள் கலை இலக்கிய மன்றத்தின் 'இலக்கிய அருவி விருது', இளந்தமிழர் இலக்கியப் பேரவையின் 'தமிழ் ஒளி' விருது ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

பட்டிமன்றம், கவியரங்கம், தன்னம்பிக்கைப் பேச்சாளர் என்று பலவகைகளில் இயங்கிக் கொண்டிருந்தாலும் இன்றைய சூழலில் நான் பெரிதும் மகிழ்வது குறைந்தபட்சம் என் மாவட்டத்திலாவது வளரும் தலைமுறையைத் தமிழின்பால் ஈர்க்க வேண்டும் என்னும் நோக்கில் நான் உருவாக்கிய 'புதியபாரதி தமிழ் இயக்கம்' என்னும் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் என்பதிலும், திரு.வி.க. பேச்சுப் பயிலரங்கக் கொளத்தூர் உறவுகளின் 'தமிழருவி' என்னும் அன்பான அழைப்பிலும்தான்.

வளரும் தலைமுறைக்கு எனது வாசகம் ஒன்றுதான்..

'தடைகளைத் தகர்த்துக்கொண்டே இரு.. தடம் என்பது தானாய் உருவாகும்'.

• கவி: கோபி சேகுவேரா
சித்திரம் : அன்பழகன்



காணாமல் போனவர்களை
வருடக் கணக்கில் சமாதானப்படுத்துகிறேன்
ஒரு விடைபெறுதலுக்காக
வாழ்க்கையைப் பணயம் வைத்தவர்களென
அவர்களுக்குப் பதிலாக
இன்னொருவரும் காணாமல் போகலாம்
எதற்கும் செலுத்த முடியாத விலையைப்
பிரிவின் நிமித்தமாகச் செலுத்திவிடலாம்
காணாமல் போனவர்கள்
காலியான மது கோப்பையில்
செத்துக்கிடக்கும் ஈயைப் போல
வெயில் காலப் புணர்வின்
நடுநிசி மின்வெட்டைப் போலக்
குறிவைக்கப்பட்ட குரல்வளையைப் போல
ஒரு நீண்ட நகக்குறியைப் போலத்
தற்கொலை செய்துகொண்டார்கள்
அவர்களையும் அவர்களாய் இருந்தவர்களையும். ■

தொடர் 2

• சு.சுசித்ரா

# திரைப்பாடல்களில் இலக்கியம்



குறுந்தொகை என்றாலே நம் நினைவில் நிழலாடும் 'யாயும் ஞாயும் யாராகியரோ....' பாடல், 'நேற்று வரை நீ யாரோ நான் யாரோ..' என்று கண்ணதாசனிடம் இழைந்ததைப் பார்த்தோம். இதே பாடல் வாலிபக் கவிஞர் பேனாவிலும் வராகநதி கவிஞர் வரிகளிலும் எப்படி விளையாடியிருக்கிறது பார்க்கலாமா?

இந்தச் 'செம்புலப்பெயல் நீர்' வாலியுடைய

'முன்பே வா! என் அன்பே வா!' என்ற பாடல் வரிகளில்

**நீரும் செம்புலச் சேறும் கலந்தது போலே கலந்தவர் நாம்..**

என்றபடி கலந்தோடுவதை ரசித்திருக்கிறோம்.

சட்டமிட்டப் புகைப்படமாகக் காட்சிப்படுத்தப் பட்ட காவியப்பாடல் தான்

யாயும் ஞாயும் யார் ஆகியரோ
நெஞ்சு நேர்ந்ததென்ன..
நீயும் எவ்வழியறிதும் உறவு சேர்ந்ததென்ன..
ஒரே ஒரு தீண்டல் செய்தாய்
உயிர்க்கொடி பூத்ததென்ன
செம்புலம் சேர்ந்த நீர்த்துளி போல்
அன்புடை நெஞ்சம் கலந்ததென்ன..

நறுமுகையே! நறுமுகையே! என்று 'இருவரி'ல் இழைந்த வைரமுத்து குறுந்தொகையைக் குழைத்தெழுதிய வரிகள் இவை.

(பாம்பே ஜெயஸ்ரீ 'யாயும் ஞாயும்' என்பதை 'யாயும் யாயும்' என்று உச்சரித்திருப்பார்)

இதெல்லாம் பழைய கதை..

இதே வரிகளை இன்றைய தலைமுறை விரும்பிக் கேட்கும்படி செய்யமுடியுமா?

"அன்றாடத் தமிழே அந்தரத்துல ஆடுறப்போ... அந்தக் கால வரியெல்லாம் போட்டு இசையமைச்சா இப்ப இருக்குற இளைஞர்கள் ரசிப்பாங்களா..? என்னம்மா நீங்க...?"ன்னுதான கேக்குறீங்க?

தங்கத்தமிழ் யாரைத்தான் ஈர்க்காது போகும்?

தற்போதைய காலகட்டத்தில் வெளியான 'சகா' என்ற திரைப்படத்தில 'யாயும் ஞாயும்...' வரிகளை அப்படியே பயன்படுத்திப் பாடலாக்கி உள்ளனர்.

இந்தத் திரைப்படம் திரையரங்கத்தில் கூடத் திரையிடப்படவில்லை, இணையத்தில்தான் வெளியிடப்பட்டது. ஷபீர் எழுதி இசையமைத்த இப்பாடலில் ரீட்டாவின் குரலில்..

**'யா....ராகியரோ..'**

என்ற வரியைக் கேட்கும்போது ரோலர் கோஸ்டரில் பயணிக்கும் சாகச உணர்வை எய்த முடியும்.

வெளியிடப்பட்ட சிறிது நேரத்திலேயே இரண்டு கோடி பார்வையாளர்களை ஈர்த்து விட்டது இந்த ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பாடல்.

இன்றைய இளைஞர்கள் பலரின் அலைபேசி அழைப்பொலி கூட இந்தக் குறுந்தொகைப் பாடல்தான்.

மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னால் எழுதப்பட்ட ஒரு பாடல் 2019ஆம் ஆண்டிலும் இத்தனைப் பேரும் ரசிக்கும் பாடலாக விரிவடைந்து இருக்கிறது என்றால்.. காரணம் காலத்தையும் வென்ற கவின்மிகு கற்பனையா..? உண்மையும் உளவியலும் இணைந்த உயர்தனிச் செம்மொழியின் சிறப்பா..?

இன்னும் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இசைக்கப்பட்டாலும் அன்றைக்கு வாழும் மக்களையும் ஈர்க்கும் திறன் கொண்ட காந்த(ள்) வரிகள் நம் தமிழ் இலக்கியத்தில் உண்டு. ■

## நீங்கள் எழுதும் எழுத்தினால் மாறப்போகிறது பலரின் தலையெழுத்து..

படைப்பு
எழுத்தின் இணைப்பு

தமிழக காவல்துறை மற்றும் படைப்பு குழுமம்
இணைந்து நடத்தும்
மதுவிலக்கு விழிப்புணர்வு மாபெரும் கவிதைப்போட்டி

தலைப்பு:
**விஷம் நுரைக்கும் கோப்பைகள்**

நடுவர்:
மக்கள் கவிஞர் **மு.மேத்தா**

போட்டி நாள் :
16-01-2020 - 18-01-2020

போட்டியில் பங்குபெற:
www.padaippu.com

திரு.ராஜேஷ் தாஸ் இ.கா.ப,
கூடுதல் காவல் துறை இயக்குநர்,
அமலாக்கம், சென்னை.

திரு. எச்.எம்.ஜெயராம் இ.கா.ப,
காவல்துறைத் தலைவர்,
அமலாக்கம்,சென்னை.

திரு.ச.மணி,
காவல் கண்காணிப்பாளர்,
அமலாக்கம், சென்னை

பரிசு
25000

Marketing partner
UNIQUE ANGLE
GROUP OF COMPANY



ISSN : 2582-4015